கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



மூட்டை தூக்கும் விஞ்ஞானி!

KALKI ● 14.09.2008 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்





"கடையைக் கட்டுகிறார் கருணாநிதி!"

- நாஞ்சில் சம்பத் நையாண்டி



செல் Vs. Cell

கூடுதல் டி.ஜி.பி. ஆர்.நடராஜ் பேட்டி

தங்களது மேலான கவனத்திற்கு



நமது நாட்டிலும் உலகம் முழுவதிலும் உள்ள **மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்** அன்பர்களுக்கு ஒரு சிறிய விளக்கம்.

கடந்த சில ஆண்டுகளாக ராஜ் தொலைக்காட்சியிலும், பொதிகை தொலைக்காட்சியில் 'ஆத்ம தரிசனம்' என்ற தலைப்பில் அருளுரை வழங்கியவரும், தற்பொழுது விஜய் தொலைக்காட்சியில் அருளுரை வழங்கி வருபவரும், சக்தி விகடனில் 'தினம் தினம் திருநாளே' என்ற தொடரை எழுதி வருபவரும், பல்வேறு புராதனமான திருக்கோயில்களை புதுப்பித்து, சிதைந்த திருக்கோயில்களில் நிரந்தர திருப்பணிகளை வழி நடத்தியவருமான நம் ஸ்வாமிஜி அவர்கள்,

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"

என்ற மஹாமந்திரத்தை ஜபம் செய்வதால் உலக மக்கள் எல்லோரும் எந்த பாகுபாடுமின்றி உய்வதற்கு எளிமையான, இனிமையான, பொருட்செலவில்லாத வழி என்பதை பல ஊர்களிலும் கூட்டுப் பிரார்த்தனைகள் நடத்தியும் வழிகாட்டி வருகின்றார்கள்.

மேற்படி நமது **மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி** அவர்களுக்கும், அவர்கள் அருளாசியுடன் இயங்கி வரும் அறக்கட்டளைகளுக்கும், சிறிய தங்க பாபா விக்ரக பிரதிஷ்டை, தோஷ நிவாரண ஹோமங்கள், கலச பாலிஷ் ஹோமம் போன்ற பணிகளில் ஈடுபட்டு வரும் **வாலாஜாபேட்டை தன்வந்திரி ஆரோக்கிய பீடம் என்ற அமைப்பிற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது** என்பதை நமது அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அறிவிப்பு இது விஷயமாக நம்மிடம் வினவிய நமது மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அன்பர்களுக்கு தெளிவுபடுத்தவே வெளியிடப்படுகின்றது.

— அறங்காவலர்கள்

சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா

நிர்வாக அலுவலகம் : 51, 7-வது அவென்யூ, அசோக் நகர், சென்னை – 600 083. தொலைபேசி : 044-24895875
ஆசிரமம் : மதுரபுரி, மஹாரண்யம் ரோடு, மனப்பேடு, படப்பை – 601 301, காஞ்சிபுரம் மாவட்டம்.
தொடர்புள்ள இணைய தளங்கள் : www.namadwaar.org/ www.madhuramurali.org
contact@namadwaar.org/ contact@madhuramurali.org



இனிமையான தருணங்களுக்கு
புதுமையான டிசைன்கள்.
உங்கள் இல்லத்தில் மகிழ்ச்சியோடு கொண்டாடக்கூடிய தருணங்கள் ஏராளம். அந்த மகத்தான தருணங்களுக்காகவே வல்லுனர்கள் வடிவமைத்த மிகச்சிறந்த டிசைன்கள் எங்களிடம் மட்டுமே.
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகைகள்
ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
தி சென்னை சில்க்ஸ் ஜுவல்லரி மஹால்
(தி சென்னை சில்க்ஸ் அருகில்)
கோயம்புத்தூர் • திருப்பூர் • ஈரோடு • திருச்சி • சென்னை
பரந்து விரிந்த கார் பார்க்கிங் வசதி
Shop online at www.sktm.in

மனத்தை உருக்கும் உலுக்கும், சுடும், தொடும் மிக மிக யதார்த்தமான அற்புதமான சிறுகதைகளை வெளியிடுவது 'கல்கி' இதழின் தனிச்சிறப்பு.

- ம. சங்கரி ரமேஷ்,

என்.எஸ்.கே., கே.பி.சுந்தராம்பாள் இருவரும் மறக்க முடியாதவர்கள். அவர்களின் கலைத்தொண்டை நினைவுகூர்ந்தது பாராட்டுக்குரியது.

- ஜே. துரைராஜ், சென்னை

நேதாஜி கோழை இல்லை; மறைந்து வாழ. இந்த ஒரு தகவல் போதும் - நேதாஜி மரணம் குறித்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க!

- ரஞ்சனிப்ரியன், பள்ளிபாளையம்

பெரியார் நாடு பூராவும் 'சுயமரியாதை' விதை விதைத்தார். இதற்கு அர்த்தம் தெரியாத அர்ஜுன் சம்பத் பிதற்றுகிறார்.

- இரா.இராஜேந்திரன், மயிலாடுதுறை

தமிழச்சியின் 'நறுக்'கான பதில்கள், அவரது கவிதையைப் போலவே இனித்தது.

- ரேவதிப்ரியன், ஈரோடு - 1

பத்திரிக்கைகளில் எழுதும் எழுத்தாளர்கள் எப்படியிருக்க வேண்டும் என, பரமாச்சார்யார் அருளுரையில், அற்புதமாக விளக்கி, அவர் அனைத்தும் அறிந்த 'ஞானி' என நிரூபித்து விட்டாரே.

- ரேவதி ப்ரியன், ஈரோடு

ஆர்.கே.செல்லையாவின் நேதாஜியின் நினைவுகள் 'இன்னும் கொஞ்சம் சொல்லய்யா' என கேட்கும்படி இருந்தன.

- என். சீத்தாலட்சுமி, சென்னை - 40

நடுப்பக்கத்தில் சென்னையைக் கண்டு ரசித்தேன். மரங்கள் இல்லாமல் ஒரு புகைப்படம்கூட இல்லை. இப்போதோ புழுதிப்படலம் இல்லாத ஒரு ரோடுகூட இல்லை. மவுன்ட் ரோடில் மரமா என

மவுன்ட்ரோட்டில் மரமா?!



வட்டமேஜை

மலைத்தேன். Old is gold.

- சி.என். ரமாதேவி, சென்னை - 83

கேபிள் தொலைக்காட்சி - தொலையும் மன சாட்சி' கட்டுரை படித்ததும்தான் தெரிந்தது, அதில் எத்தனை விஷயங்கள் அடங்கி இருக்கிறதென்று.

- பி. ராகவன், சென்னை - 44

உத்தமபுத்திரனின் 'ஜாலி ஸ்டோர்ஸ்'- நல்ல நகைச்சுவையாகக் காணப்பட்டாலும் கூடவே நிதர்சன உண்மையும் வெளிப்படுகிறது.

- அ. சம்பத், திருவரங்கம்

நீண்ட நெடுநாட்கள் கழித்து, கடைசி பக்கக் கவிதைகள் (சிறுகதை) தீந்தமிழாய் இனித்தது.

- டி.எம். சுரேந்தர், திண்டுக்கல்

சென்னையின் முக்கிய இடங்கள், நடுப்பக்கத்தில் கவரும் விதத்தில் ஜொலித்தது அருமை!

- இந்திரன், நாகர்கோவில்



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: **சீதா ரவி**

உதவி ஆசிரியர்: **கதிர்பாரதி**

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி:
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல்: **044 - 4343 8899**

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு:
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள்:
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு:
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

நாட்டு மக்களின் நாடித்துடிப்பைப் புரிந்துகொண்டவர் என்று ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத்தைச் சொல்லலாம். அன்றாடப் பொதுக்கூட்டங்கள் தவிர, இலக்கியப் பட்டி மன்றங்கள், தொலைக்காட்சி விவாதங்கள் என்று கலக்குகிறார். அவர் தமிழக அரசியல் சூழல் குறித்து முன் வைத்த விமர்சனங்கள்:

கருணாநிதி கவிதைகள்: விதியின் சரிவுக்கும், விரக்தியின் விளிம்புக்கும் கருணாநிதி சென்றுவிட்டதைத்தான் சமீபத்திய அவரது கவிதைகள் பிரதிபலிக்கின்றன. சில பரபரப்பூட்டும் பத்திரிகைகளைத் தவிர, தமிழக மக்கள் இந்தக் கவிதைகளைக் கேலிக்கூத்தாகவே கருதுகின்றனர். மக்களின் இந்த உணர்வைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில், அவர் இல்லை என்பதுதான் பரிதாபம்.

வாரிசு அரசியல்: 'வாரிசு அரசியலுக்கு 'வந்தே மாதரம்' பாடுகிறார் கலைஞர்' என்று அன்று வைகோ சுட்டிக்காட்டியதால்தான், அவர் தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்டார். கட்சியும், ஆட்சியும், சேர்த்துவைத்த சொத்துக்களும், முறையாக வாரிசுகளுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற முதுமையின் கவலைதான் கலைஞரின் செயல்பாடுகளில் தெரிகிறது. ஒரு பக்கம் தென்மாவட்ட முதல்வரான (?!) அழகிரி செய்யும் அத்துமீறல்கள்; அதிகார துஷ்பிரயோகங்கள். மறுபக்கம், அழகிரி எங்கே தன்னைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முந்தி விடுவாரோ என்ற பயத்தில், தமிழக மாவட்டங்களில் பட்டினப்பிரவேசம் செய்து, கட்சிக்காரர்களிடம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது ஸ்டாலினுக்கு. கயல்விழி, தன்னைக் கழுத்தறுத்துவிடுவாரோ என்ற பயத்தில், கனிமொழியும் சூறாவளி சுற்றுப்பயணம் கிளம்பிவிட்டார். இன்று கட்சியும், ஆட்சியும், ஏன் குடும்பமேகூட அவர் கட்டுப்பாட்டில் இல்லை என்பதுதான், தி.மு.க. தொண்டர்களே ஒப்புக்கொள்ளக்கூடிய கசப்பான உண்மை. வரும் தேர்தலில், தி.மு.க.வின் கடைசி அத்தியாயத்தை வாக்காளர்கள் எழுதிவிடுவார்கள். கலைஞர் இனி கடையைக்கட்ட வேண்டியதுதான்.

அசைக்க முடியாதவரா ஆற்காட்டார்?: குற்றச்சாட்டுகளுக்கு ஆளான அமைச்சர்கள் பூங்கோதை, ராஜா ஆகியோரை வீட்டுக்கு அனுப்பினால் போதுமா? இன்னமும் வீர



"கடையைக் கட்டுகிறார் கருணாநிதி!"

–நாஞ்சில் சம்பத் நையாண்டி

பாண்டி ஆறுமுகம், சுரேஷ்ராஜன், சாமி... போன்ற குற்றச்சாட்டுக்கு ஆளான அமைச்சர்கள் கம்பீரமாக நடைபோடுகிறார்களே? அவர்களை நீக்கும் தைரியத்தை கலைஞர் இழந்தது ஏன்? மின்சார நிர்வாகச் சீர்கேட்டுக்கு முழுமுதற் காரணமான ஆற்காடு வீராசாமி; கலைஞரின் சட்டைப்பைக்குள்ளேயே இருப்பவர். எனவேதான், 'நிர்வாகத்தில் குறைபாடுகள் உள்ளது சகஜம்' என்று புண்ணுக்குப் புனுகு தடவுகிறார் கலைஞர். தன் இலாக்கா வேலையை ஒழுங்காகப் பார்க்காமல், அடுத்தவர் இலாக்காவில் தலையிட்டுக் குளறுபடி செய்யும் ஆற்காட்டார் எப்போது விடுவிக்கப்படுவார் என்று பல அமைச்சர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

'செல்வம்' இழந்த கணபதி: செல்வ கணபதியை, ஸ்டாலின் தி.மு.க.வில் சேர்த்துக்கொண்டது சேலம் வட்டாரத்தில் கோலோச்சும், வீரபாண்டி ஆறுமுகத்தார் கொட்டத்தை அடக்குவதற்காகத்தான். இதே செல்வகணபதியை, 'சுடுகாட்டு' செல்வகணபதி என்று பிரபலப்படுத்தியவர் கலைஞர்தானே? தன்னைக் கட்டுப்படுத்தவே செல்வகணபதி சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டதால் தானோ என்னவோ, செல்வகணபதி தி.மு.க.வில் இணைந்த 'மகோற்சவத்தில்' வீரபாண்டியார் கலந்துகொள்ளவில்லை.

பல்லாண்டு பாடும் கலைஞர்: விலைவாசி, பணவீக்கம் ஆகியவைகளால் மக்கள் செல்வாக்கில் அடியோடு வீழ்ந்துவிட்ட காங்கிரஸை, தோளில் தாங்கிச் செல்வதைத் தவிர கலைஞருக்கு வேறு வழியில்லை. காரணம், மத்திய அரசை அண்டி அவரும் குடும்பமும் அடைந்து வரும் ஆதாயங்கள். பன்னிரண்டு வட மாநிலங்களில் தோற்றுப் போயிருக்கும் காங்கிரஸுக்குப் பல்லாண்டு பாடுவதைத் தவிர, இப்போது அவர் வேறு எதுவும் செய்ய முடியாது. காங்கிரஸும், தி.மு.க.வும் இணைந்தே மூழ்கும்.

ஒத்தை ரூபாய் அரிசி: சமீபத்தில், என் தலைமையில் நடந்த ஒரு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பேசிய தி.மு.க. அன்பர் ஒருவர், கலைஞர் ஒரு ரூபாய் அரிசி போட்டதைப் பாராட்டிப் பேசினார். பொதுமக்கள் முன்பு நடந்த நிகழ்ச்சி. தி.மு.க.. அன்பரின் பேச்சுக்குக் கூட்டத்தில் எந்த ரியாக்ஷனும் இல்லை. அவருக்குப் பின் பேசிய பதினாறு வயது பெண், ''ஒரு ரூபாய்க்கு அரிசி போடுவதைப் பார்த்து ஏமாந்துவிட மாட்டோம்'' என்றவுடன் பிய்த்துக்கொண்டு போனது கைதட்டல். இதுதான் மக்கள் மனநிலை.

– ப்ரியன்

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை



அன்புடன் அழைக்கிறது

அமரர் கல்கி பிறந்தநாள் விழா

செப்டெம்பர் 9, 2008

(செவ்வாய்க் கிழமை)

பாரதிய வித்யாபவன் அரங்கம்,

மயிலாப்பூர், சென்னை - 600 004

மாலை **6.00** *மணி*

இளம் இசைக் கலைஞர்கள்

செல்வி கே. காயத்ரி

திரு. கணபதிராமன்

ஆகியோருக்கு விருதுப் பத்திரங்கள் வாசித்தளித்து,
அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவுப் பரிசுகளை வழங்குதல்

தலைமையுரை:

தினமணி ஆசிரியர் **கே. வைத்தியநாதன்**

மாலை 6.45: இன்னிசைக் கச்சேரி

கே. காயத்ரி	: பாட்டு
ஹேமலதா	: வயலின்
கணபதிராமன்	: மிருதங்கம்
அனிருத் ஆத்ரேயா	: கஞ்சிரா

அனைவரும் வருக!



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Orchard B GCPMSOCN 1167/08

நீங்கள் கேட்டவை-தராசு

● மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்

? '' நீராரும் கடலுடுத்த' பாடலைக் கேட்கிறபோது ஜெயலலிதா எழுந்து நிற்கிறாரே - அது தமிழுக்கும் என் தலைவருக்கும் சேர்த்து அவர் வைக்கும் வணக்கம்தான்' என அமைச்சர் ஆ.ராசா பேசியுள்ளது பற்றி?

! நல்லவேளை... மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை தப்பித்தார். இன்று இருந்தால், அந்த வாழ்த்து யாரைக் குறித்து தாம் பாடியது என்பதைச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டிருக்கும்!

● த. புகழேந்தி, கூகூர்

? தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின்வெட்டுப் பிரச்னைக்குத் தீர்வு காண, மத்திய அரசிடமிருந்து கூடுதலாக மின்சாரம் (200 மெகாவாட்) பெற தமிழக அரசு தீவிர முயற்சி எடுத்து வருவதைப் பற்றி...?

! ''மத்திய அரசிடம் உபரி மின்சாரம் இருந்தால்தானே தர முடியும்! அங்கேயே பற்றாக்குறைதானே'' என்று தமிழக முதல்வரே 'இல்லை' பாட்டு பாடிவிட்டார். ஏராளமான தொழிலகங்கள் தொடங்க உரிமங்கள் தந்து, ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டபோது, அடிப்படைத் தேவையான மின் சப்ளை பற்றிச் சிந்திக்க வேண்டாமா?

● என். சண்முகம், சேலம்

? ஒருவேளை கேரளாவில் மோகன்லால், தமிழகத்தில் விஜயகாந்த், கர்நாடகாவில் நாகார்ஜுனா, ஆந்திராவில் சிரஞ்சீவி ஆகியோர் முதல்வர்களாகவும் மத்தியில் ஷாரூக்கான் பிரதமராகவும் ஆகின்றனர் என்று வரும்போது, இந்த நதிநீர்ப் பிரச்னை, வறுமை, அது - இதுவெல்லாம் ஒழிய வாய்ப்புள்ளதா?

! நடிப்பாற்றல் என்ற ஆளுமை; மக்களுக்கு எழுச்சியூட்டும் வசனம்; அறிவாளிகள் நிரம்பிய அமைச்சரவையின் டைரக்ஷன்; திறமை மிக்க அதிகாரிகளின் படப்பிடிப்பு எல்லாம் அமைய, லஞ்ச ஊழல் என்ற வில்லனையும் க்ளைமாக்ஸில் வீழ்த்தினால், உங்கள் பட்டியல் நிறைவேறும்; மேலும் பல நல்லவையும் நடக்கும்!

● ஸ்ரீ ஆளவந்தார், திருவாரூர்

? ''துப்பாக்கி சுடுதல் விளையாட்டுதானா? என்பதே சிந்தனைக்குரியது'' என்று ஞாநி கருத்து தெரிவித்துள்ளாரே?

! துப்பாக்கி என்பது அழிக்கும் ஆயுதமாகக் கண்டுபிடிக்கப்பட்டதுதான். ஆனால் ஒலிம்பிக்கில் சோதனைக்குள்ளாவது அதன் அழிக்கும் ஆற்றல் அல்ல. அதனை இயக்கும் மனிதனின் குறிபார்க்கும் திறன் மட்டுமே. அம்பு எய்வதும் (archery) இவ்வாறே. தங்கப்பதக்கமும் இந்தத் திறனுக்குத்தான். துப்பாக்கிக்கு அல்ல.



✱ நாட்டின்...




✱ ... பிரச்னைகள்...

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? வ.உ.சியின் கொள்ளுப் பேத்தியும் பேரனும் நடுத்தெருவில் நிற்கும் அவலத்துக்குக் காரணம் சமூகமா? ஆட்சியாளர்களா?

! தேசபக்தர் வ.உ.சி நமக்காகச் செய்த தியாகமே காரணம். எனவே, விவரம் தெரிய



✱ ... அழுத்தமான...


கேட்டுக்கொண்டிருக்கின்றனவே? அனுமதி தருவதால் விளையக்கூடிய சாதகம் - பாதகம் பற்றி...?

! அனுமதி வழங்கும்போது அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்குச் 'சாதகம்'. ஒலிபரப்பும்போது, விளம்பரங்கள் வரவால் டீ.வி சேனல்களுக்குச் 'சாதகம்'. தூக்கத்தையும் மனத்தையும் கெடுத்துக்கொண்டு இக்காட்சிகளைப் பார்ப்போருடைய உடல் - உள்ளங்களுக்குப் பாதகம்!

● ராஜதுரை, சீர்காழி

? சிரஞ்சீவி கட்சி தொடக்க விழாவால் தென் மத்திய

✱ ... முற்றுப்புள்ளி!



சிரஞ்சீவி முதல்வர்; ஷாருக் பிரதமரானால்?

✱ ... அனைத்துக்கும்...

வந்ததும் நாம் உதவுவது கடமை. அது நிறைவேற்றப்பட்டுள்ளது. அமைதி பெறுங்கள்.

● இரா.ஜெய்கணேஷ், இராஜபாளையம்

? வயது வந்தவர்கள் மட்டுமே பார்க்கும் வகையிலான காட்சிகளை, இரவு நேரங்களில் ஒளிபரப்ப அனுமதிக்க வேண்டும் என்று டீ.வி.சேனல்கள் மத்திய அரசைக்

ரயில்வேக்கு ஒரு கோடியே முப்பத்தைந்து லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது பற்றி...?

! டிக்கெட் வாங்கிக்கொண்டு பயணம் செய்யும் ஒழுங்குமுறை, வித்தவுட்டில் ரயிலேறும் வீராப்பாக மாறாமல் இருப்பது சிரஞ்சீவி கையில்தான் இருக்கிறது. இந்த ஒழுங்கை அவரால் காப்பாற்ற முடியுமானால் நாட்டுக்கு நல்லது செய்ய முடியும்.

● **ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்**

? ***'ஆவது பெண்ணாலே, அழிவது ஆணாலே' என்று கூறும் அளவுக்கு, ஆண்கள் குடியால் அழிவதாக பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கூறுவது எதற்கு அச்சாரம்?***

! உண்மைக்கும் மக்கள் நன்மைக்கும் போடும் அச்சாரம். ஆரோக்கிய அரசியலுக்குப் போடும் அச்சாரமாக விளங்க, எதிர்கால கூட்டணி அனுமதிக்குமா? சந்தேகம்!



★ துணிவே துணை!

● **இரா.சக்கரபாணி, மதுரை.** ☐

? ***மேல் நிலைப் பள்ளிகளில் 639 தமிழ் ஆசிரியர்களின் பணியிடங்கள் ஆறு ஆண்டுகளாக நிரப்பப்படாமலிருக்க, தமிழ் மொழியைச் செம்மொழியாக ஆக்கிவிட்டதாலும் செம்மொழி தமிழாய்வு மையத்தை நிறுவியதாலும் மட்டுமே தமிழ் தானாக வளர்ந்துவிடுமா?***



★ ஆரோக்கிய அச்சாரம்



★ கூடுதல் கொண்டாட்டம்!

! தங்கள் த்ரீ இன் ஒன் கேள்விக்கு விடை: 1) தமிழ் செம்மொழியாக விளங்கினால் போதாது; பிறமொழிச் சொற்களை எளிதாக ஏற்றுக்கொண்டு வளம் பெறவேண்டும். 2) பணி இடங்கள் நிரப்பப்பட்டால் மட்டும் போதாது; உயர்தரமான ஆசிரியர்கள் உருவாக்கப்படவேண்டும். 3) தமிழ் ஆய்வு மையம் ஆரம்பித்தால் போதாது; அது தமிழ் வளர்ச்சி மையமாக விளங்கவேண்டும்.

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 33**

? ***'ஒரு ரூபாய்க்கு வழங்கப்படும் ரேஷன் அரிசி கூடுதல் தரத்துடன் இருக்கும்!' என்கிறாரே தமிழக உணவுத்துறை அமைச்சர்?***

! சாத்தியமேயில்லை. அப்படியே பிரம்மப் பிரயத்தனம் செய்து அதைச் சாத்தியமாக்கினாலும், வரிப்பணச் செலவினால் மக்களின் வரிச்சுமைதான் கூடும். கூடுதலாக, கள்ளக் கடத்தல்காரர்களின் கொண்டாட்டம் அதிகரிக்கும்.

☐ ரூ.100/- பரிசு பெறுபவர்:
இரா. சக்கரபாணி, மதுரை
★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
பால. இராஜேந்திரா, அணைக்கரை

● **பால.இராஜேந்திரா, அணைக்கரை**★

? ***அறிவிக்கப்பட்ட மின்தடைக்கும் அறிவிக்கப்படாத மின்தடைக்கும் என்ன சார் வித்தியாசம்?***

! மெடிக்கல் லீவுக்கும் காஷுவல் லீவுக்கும் இடையே உள்ள வித்தியாசம்தான்!

● **ஏ.எம்.பழனிசாமி, சிங்காநல்லூர்**

? ***பதக்கம் பெற்ற சிறிய நாடுகளுள் தங்களைக் கவர்ந்தது எந்த நாடு?***

! ஜமைக்கா. கையகல நாட்டிலிருந்து வந்து, ஒலிம்பிக்கில் தங்கம் வாங்கிய உசைன், போல்ட் அல்ல... Bold!



ஷோபா சந்திரசேகர்

போனவாரம் நான் சொன்ன அந்த வி.ஐ.பி., நம்ம முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்தான். அன்னைக்கு அவர் முன்னிலைல ஒரே ஒரு பிரேயர் சாங் மட்டும்தான் பாடினேன். ஆனா, அதுவே எனக்கு ரொம்ப நிறைவா இருந்தது.

இந்த வருஷம் விஜய், பிறந்த நாளுக்கு முதல்நாள் வரைக்கும் வெளிநாட்ல ஷூட்டிங்னு போயிருந்தான். அன்னைக்குக் காலைல பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லி ஒரு எஸ்.எம்.எஸ் அனுப்பினேன். உடனே, 'தேங்க்ஸ்மா'ன்னு பதில் வந்தது. மத்தியானம் ஒரு மணிக்கு ஃப்ளைட்ல வந்தான். அன்னைக்கு அவனோட ரசிகர் மன்றம் சார்பா, நாலு மணிக்கு ஒரு ஃபங்ஷன் இருந்தது. இடைப்பட்ட நேரத்துல எங்களால சந்திக்க முடியல. வந்து ரெஸ்ட் எடுத்துட்டு அந்த ஃபங்ஷனுக்குப் போகத்தான் அவனுக்கு நேரம் இருந்தது.

நானும் விஜய்யும் எப்படின்னா, பர்த்டே அன்னிக்கு எப்படியாவது சந்திச்சிடணும்னு ஒருமுறை வச்சுக்கறதில்ல. அன்னைக்கு நான் அவன் வருவான்னு எதிர்பார்க்கலை. விஜய் வீட்டுக்கு வந்தான். அவனுக்கு நிகழ்ச்சி முடியறப்போவே ராத்திரி ஆயிடுச்சு. ஆனாலும் வீட்டுக்கு வந்து என்னைப் பாத்துப் பேசிட்டுப் போனான். ஒரே ஒரு ஸ்பூன் மட்டும் சாப்பிட்டான். இப்படி எதிர்பார்க்காம இருக்கறப்போ திடீர்னு வந்து அசத்தறது விஜய்யோட சுபாவம்.

எனக்குக் கிடைத்த பொக்கிஷம்!



போன மாசம் 21-ம் தேதி விஜய்



எனக்கு ஃபோன் பண்ணினான். 'அம்மா ஃப்ரீயா இருக்கீங்களா, உங்களைப் பார்க்கணும்'னான். 'வா விஜய்'ன்னு சொன்னேன். அவன் புதுசா கார் ஒண்ணு வாங்கியிருந்தான். குடும்பத்தோட அந்தக் கார்ல வந்தான். என்னையும் கூட்டிக்கிட்டு சென்னையிலேயே இருக்கற வேளாங்கண்ணி சர்ச்சுக்குப் போனான். ரொம்ப சந்தோஷமா இருந்தது.

அது முடிஞ்சு ரெண்டு நாள் கழிச்சு ஆகஸ்ட் 24 என்னோட பிறந்தநாள் வந்தது. ''உங்களுக்கு பர்த்டே கிஃப்டா என்னம்மா வேணும்?''னு கேட்டான் விஜய். ''என்கிட்ட இருந்த செல்ஃபோன் எல்லாம் ஹேங் ஆயிடுச்சு. புதுசா ஒண்ணு வாங்கிக் கொடு விஜய்'ன்னு சொன்னேன். எல்லாரும் ஒரு ஹோட்டலுக்குப் போனோம். லஞ்ச் சாப்பிட்டோம். விஜய் எனக்கு கேக் ஊட்டிவிட்டான். நான் கேட்ட மாதிரியே எனக்கு ஒரு செல்ஃபோன் பிரசன்ட் பண்ணினான். அவன் வைச்சிருக்கற மாதிரியே ஒரு செல்ஃபோன்.

அதுக்கு அடுத்த நாள்தான், ஆகஸ்ட் 25, விஜய்யோட கல்யாண நாள். ஆனா, நாங்க யாரும் அன்னிக்குச் சந்திக்கலை. அன்னிக்கு விஜய்க்கு வேலை இருந்தது. விஜய்க்கும் அவனோட அப்பாவுக்கும் தெய்வம்தான் தொழில், தொழில்தான் தெய்வம். வேலை இருக்கறப்போ எவ்வளவு விசேஷமான நாளா இருந்தாலும், அவங்க ரெண்டுபேருமே கொண்டாட விரும்பமாட்டாங்க. ஆனா, நானும் சங்கீதாவும் இந்த மாதிரியான நாட்களை ஒரு 'கெட் டு கெதர்' மாதிரி இருக்கணும்னு எப்படியாவது கொண்டாடிடுவோம்.

விஜய்யோட ரெண்டாவது குழந்தை திவ்யா சென்னை அப்போலோவுல 2005, செப்டெம்பர் அஞ்சாம் தேதி பிறந்தது. விஜய்யோட பையன் சஞ்சய் பாக்கறதுக்கு விஜய் மாதிரி இருப்பான். ஆனா, குணம் அவனோட அம்மா சங்கீதா மாதிரி. திவ்யா பாக்கறதுக்கு சங்கீதா மாதிரி இருக்கும். குணம் விஜய் மாதிரி. ரொம்ப நிறைவான குடும்பம். அவங்க எப்பவும் சந்தோஷமா இருக்கணும்கறதுதான் எப்பவும் என்னோட பிரார்த்தனையா இருக்கு.

எங்க வீட்ல சிவான்னு ஒரு பையன் வேலை பாக்கறான். பத்து வருசத்துக்கு மேல எங்ககூடவே இருக்கான். அவன்கிட்ட ஒருநாள் பேச்சுவாக்குல கேட்டேன். 'சிவா! விஜய்யைப் பத்தி என்ன நினைக்கிறே? இங்க இருக்கறது உனக்குப் பிடிச்சிருக்கா?'ன்னு கேட்டேன். 'விஜய் சார் ரொம்ப எளிமையானவர். என்னை அவரு தம்பி மாதிரிதான் நடத்துறாரு. நீங்க எந்த விஷயத்துல என்கிட்ட பாரபட்சம் காண்பிச்சிருக்கீங்கம்மா? நீங்க சாப்பிடற சாப்பாட்டைத்தானே எனக்கும் கொடுக்கறீங்க'ன்னு புகழ்ந்து தள்ளிட்டான். எனக்கே, 'ஏன் கேட்டோம்'னு ரொம்ப கூச்சமா இருந்தது.

விஜய்கிட்ட எனக்குப் பிடிச்ச இன்னொரு குணம், யாராவது தப்புப் பண்ணினா கோபப்பட மாட்டான். 'என்னப்பா இது! கொஞ்சம் பாத்து பண்ணுப்பா'ன்னு பொறுமையா சொல்லுவான். அதனாலதான் சிவாவுக்கு விஜய்யை ரொம்பப் பிடிச்சிருக்குன்னு நினைக்

கிறேன். சிவாவுக்கு சொந்த ஊரு சங்கரன்கோவில். அவனுக்குக் கல்யாணம் நடந்தப்போ விஜய்யால போக முடியல. அவனோட அப்பா போயிட்டு வந்தாரு. சிவா கல்யாணத்துக்கு ஒரு லட்ச ரூபா குடுத்திருந்தான் விஜய்.

என் கணவரோட அம்மாவுக்கும் சரி, என் அம்மாவுக்கும் சரி விஜய்ன்னா உயிர். எங்கம்மா இன்னிக்கும் 'விஜய் என் முதல் பேரன். அவன் எனக்குக் கிடைச்ச பொக்கிஷம்'னுதான் சொல்லிக்கிட்டு இருக்காங்க. சின்ன வயசுல பெரும்பாலான நேரம் அவன் எங்க அம்மாகூடத்தான் இருப்பான். நான் இல்லன்னாகூட எங்க அம்மாகூட சமத்தா இருப்பான். அவங்ககூட தனியா வெளியூரெல்லாம் போயிருக்கான்.

'என் செல்ல தளபதி' தொடர்ல விஜய்யைப் பத்தி எவ்வளவோ சொல்லிட்டேன். சொல்லப் போனா 'என் செல்ல தளபதி'யைப் பத்தி நானே அளவுக்கு அதிகமா சொல்லிட்டேனோன்னுகூட எல்லாருக்கும் தோணும். எதுவும் அளவைத் தாண்டிட்டா நல்லா இருக்காது இல்லையா? அதனால இந்தத் தொடருக்கு 'முற்றும்' போடலாம்னு இருக்கேன்.

அதுக்கு முன்னாடி ஒரு விஷயம். யாரா இருந்தாலும், அவங்ககிட்ட இருக்கற நல்ல விஷயத்தைப் பத்தி சொல்றது தப்பில்லை தானே? விஜய்கிட்ட இருக்கற தொழில் பக்தி, உழைப்பு, அவனோட சின்சியாரிட்டி... இதைப்பத்தியெல்லாம் நான் இந்தத் தொடர்ல சொன்னதுக்குக் காரணம் இருக்கு.

விஜய்யை ஃபாலோ பண்றவங்க, அவனோட ரசிகர்கள் எல்லாரும் அவனை மாதிரி இருக்கணுங்கறதுக்காகத்தான் நான் அதையெல்லாம் சொல்லியிருக்கேன். விஜய் ரொம்ப அன்பானவன், அம்மா அப்பாவுக்கு அடங்கின பிள்ளை, நேர்மையானவன், எல்லாரையும் மதிக்கறவன், எல்லாத்துக்கும் மேல மத்தவங்களுக்கு உதவணும்னு நினைக்கிறவன். சினிமாவுல மட்டும் இல்ல, நிஜ வாழ்க்கையிலயும் அவன் ஒரு ரோல்மாடல்தான். இன்றைய இளைஞர்கள், குறிப்பா விஜய்யோட ரசிகர்களுக்கு நான் சொன்னதெல்லாம் பிடிக்கும்னு நம்பறேன். இன்னொரு சந்தர்ப்பம் கிடைச்சதுன்னா விஜய்யைப் பத்தி இன்னும் விரிவா சொல்றேன், வணக்கம்.

(முற்றும்)

எழுத்து வடிவம்:

பாலு சத்யா





கல்கி



2008 செப்டெம்பர் 14
ஸர்வதாரி ஆவணி 29
மலர் : 67
இதழ் : 7


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


அலட்சியத் தீ; மெத்தன வெள்ளம்!

பீஹார் மாநிலத்தை மூழ்கடித்துள்ள பயங்கர வெள்ளம் வடிய, இன்னும் பல மாதங்கள் ஆகும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். கோசி நதியின் வெள்ளப்பெருக்குடன், தொடர் மழையின் நீர்ப்பெருக்கும் சேர்ந்துகொண்டு லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் தலைகீழாக்கிவிட்டது. அவர்களுள் சில லட்சத்தினர் வெள்ளத்தால் சூழப்பட்டு, வெளிவர வழியின்றி இன்னமும் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு உதவ வழி தெரியாமல் பீஹார் அரசும் உதவிக்கு வந்துள்ள ராணுவமும் திணறிக்கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில் நோய்த்தொற்று பரவும் அபாயம் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

சுகாதாரப் பிரச்னையை முதலில் கவனிப்பதா? சிக்கிக் கொண்டவர்களைக் காப்பாற்றுவதா? உணவுப் பொட்டலங்களை விமானத்திலிருந்தபடி விநியோகிப்பதா? எதை முதலில் செய்வது என்று யோசிக்கக்கூட அனுமதியாமல் வெள்ளம் மட்டும் தொடர்கிறது!

இந்நிலையில்தான், 'நமது தேசியப் பேரிடர் மேலாண்மை கமிட்டி என்ன செய்துகொண்டிருந்தது?' என்கிற கேள்வி எழுகிறது! பீஹாரில் ஏற்பட்டுள்ளது போன்ற இடர்களை எதிர்பார்த்து, தொலைநோக்குடன் செயல்படுவதல்லவா சிறந்த பேரிடர் மேலாண்மையாக இருக்கும்? அதிலும் கோசி நதியில் வெள்ளம் என்பது வருடாந்திர நிகழ்வாகவே





இருந்துவருகிறது. நேபாளத்திலிருந்து பெருகும் கோசி, இம்முறை அங்குள்ள அணையையே தகர்த்துவிட்டு திசைமாறிப் பாய்ந்துள்ளது! புதிய ஜனநாயக நேபாள அரசு ஏற்பட்டுள்ள காலகட்டத்தில், அவ்வரசின் அனுபவமின்மையை உணர்ந்து நமது பேரிடர் மேலாண்மைக் குழுவினர் முன் எச்சரிக்கையாகப் போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டாமா?

கடந்த சில ஆண்டுகளில் வெள்ளச்சேதம் நிகழ்ந்தபின் செலவழிக்கப்பட்ட கோடிகளையும் அளிக்கப்பட்ட நிவாரணத் தொகைகளையும் கணக்கிட்டுப் பார்த்தால், இந்திய நதிகள் இணைப்புத் திட்டத்தையே நிறைவேற்றும் அளவுக்குச் செலவாகியிருப்பது வெளிச்சத்துக்கு வரும்.

இத்தகைய தீர்க்கதரிசனமற்ற பேரிடர் மேலாண்மையினால் இடர்தான் அதிகரித்து வருகிறதேயொழிய மக்களின் துயர் தீர்வதாகத் தெரியவில்லை.

தொலைநோக்கின்மையுடன் லஞ்ச - ஊழல் வேறு சேர்ந்து கொள்வதால், சென்னை ரங்கநாதன் தெரு சரவணா ஸ்டோர்ஸ் தீ விபத்து போன்ற கொடுமைகளும் நிகழ்கின்றன. இயற்கைச் சீற்றத்தை அனுமானிப்பதாவது கடினம்; பாதுகாப்பு விதிகள் கடைபிடிக்கப்படுகின்றனவா என்று சரிபார்ப்பதில் சிக்கலே கிடையாது. அவ்விதிகளை மீறுவோரின் செல்வாக்கும் அதை அனுமதிக்கும் அதிகார வர்க்கத்தின் ஊழலும் அப்பாவி உயிர்களை அநியாயமாக பலிகொள்கின்றன. பகட்டான விளம்பரங்களும் நுகர்வோர் கலாசார பளபளப்பும் பொதுமக்களின் கண்களையும் மறைக்கின்றன. நிகழ்ந்த விபத்திலிருந்து பாடம் கற்று, கட்டடச் சட்ட விதிமுறைகளை அமுல்படுத்துவதில் அரசு பாரபட்சமற்ற நேர்மை காக்கவேண்டும்.

வெள்ளத்தில் தத்தளிக்கும் பீஹாரிலோ, எதிர்வரும் மூன்று - நான்கு மாதங்களைக் கருத்தில்கொண்டு நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தவேண்டும்; அதே சமயம், மீண்டும் இத்தகு வெள்ளம் ஏற்படாதிருப்பதற்கான திட்டத்தை, யுத்தகால அடிப்படையில் செயல்படுத்த வேண்டும்.

○

தாம் தூம்

படத்தோட டைட்டில் போலவே படமும் 'தாம்தூம்'.

செய்யாத கொலைக்காக ரஷ்யா நாட்டு போலீஸிடம் மாட்டிக்கிட்டுத் தவிக்கும் ஓர் இளைஞனோட போராட்டத்தை உணர்வுபூர்வமாகச் சொல்லியவிதம் அருமை. இடையிடையில் ஹீரோவுடைய காதல், குடும்பம்னு காட்டுவது சுவாரஸ்ய டச்சிங்.

ஆங்கிலம்கூட பேசத்தெரியாத ரஷ்ய நாட்டில் ஜெயம்ரவி மாட்டிக்கிட்டு தவிக்கும் உணர்வுபூர்வமான நடிப்பில் உயர்ந்து நிற்கிறார்.



ஹீரோயின் கங்கனா ரெணாவத் தமிழுக்குப் புதுவரவு. 'கிளுகிளு' படம் பார்க்க வர்றது, சின்னப் பசங்களோட சிட்டுக்கட்டு விளையாடுறது, கிராமத்துல துறுதுறுன்னு பேசிட்டு நடிக்கிறதுன்னு நம்ம மனசுல ஒட்டிக்கறாங்க.

இன்னொரு கதாநாயகி லக்ஷ்மிராய். கதைக்குத் தேவைப்படுற இடத்தில் மட்டும் பயன்படுத்தியிருக்காங்க. அவரும் அந்த கேரக்டராகவே மாறியிருப்பது தனி சிறப்பு. ஜெயராம், 'சஸ்பென்ஸ்' கதையின் முக்கியமான பாத்திரத்தில் நடித்து நம்மைக் கலவரப்படுத்தியிருக்கிறார்.

நிழல்கள் ரவி, சேத்தன், அனுஹாசன், போஸ்னு எல்லோருடைய பங்கும் படத்துக்குக் கூடுதல் பலம். ஜெயம்ரவி ஓடிக்கொண்டே இருக்கும் காட்சிகள் ஹாலிவுட் படத்துக்கு நிகரானவை.

எஸ்.ராமகிருஷ்ணனோட வசனம் குறைசொல்ல முடியாத கவிதை. என்னதான் படம் விஷுவலா இருந்தாலும் கொஞ்சம் வசனத்தால புரியவச்சிருக்கலாம்.

தேவைப்படும் இடத்தில் மட்டும் 'கட்' பண்ணி, படத்தோட அழகை அப்படியே காட்டிய வி.டி.விஜயனுக்கு பாராட்டு.

பா.விஜய், நா.முத்துகுமார் கவிதை வரிகளுக்கு, ஹாரிஸ் ஜெயராஜ் இசை பக்க பலம். படத்தோட பின்னணி இசை கூடுதல் பலம்.

தமிழ்நாட்டில் கடைக்கோடி கிராமத்தில் இருக்கும் ரசிகனுக்கு ரஷ்யாவின் அழகைக் காட்டிய ஜீவாவுக்கு ஆயிரம் நன்றிகள் சொல்லலாம். ஜீவாவுடைய இறப்பு சினிமாவுக்குப் பேரிழப்பு.

தாம்தூம் - கலர்ஃபுல் ராக்கெட்...

- முத்து



பூண்டி மாதா பேராலயம்

பூண்டி, தஞ்சாவூர்-613 105 ☎04362-280422

தமிழ்நாடு—தென்னிந்தியா

புனித கன்னிமரியாளின் பிறப்பு பெருவிழா

ஆகஸ்டு 30 முதல் செப்டம்பர் 9, 2008 வரை

30.08.2008 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு Saturday 5.30 P.M.	**கொடியேற்றம்** பேரருட்திரு.A.சந்தியாகு V.F. & பங்குத்தந்தை, மைக்கேல்பட்டி **மரியாள்: அருள்மிகப் பெற்றவர்**
31.08.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு Sunday 6.00 P.M.	அருட்திரு. **புதிய குருக்கள்** குடந்தை மறை மாவட்டம் **மரியாள்: ஆன்மீக வழிகாட்டி**
01.09.2008 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு Monday 6.00 P.M.	அருட்திரு. **L.டேவிட் ஜான்** பாண்டிச்சேரி உயர் மறைமாவட்டம் **"மரியாள்: மனித நேயமிக்கவர்"**
02.09.2008 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு Tuesday 6.00 P.M.	அருட்திரு. **A.கிறிஸ்துராஜ்** பாண்டிச்சேரி உயர் மறைமாவட்டம் **"மரியாள்: வார்த்தையை வாழ்வாக்கியவர்"**
03.09.2008 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு Wednesday 6.00 P.M.	அருட்திரு. **A.சகாயநாதன்** தலைமை ஆசிரியர், கோவிலூர், தர்மபுரி மறைமாவட்டம் **"மரியாள்: திருவுளத்தின் நிறைவு"**
04.09.2008 வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு Thursday 6.00 P.M.	அருட்திரு. **F.ஜான் ஜோசப்ராஜ்** ஆயரின் செயலர், உதகை மறைமாவட்டம் **"மரியாள்: துயருறுவோருக்கு தேற்றரவு"**
05.09.2008 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு Friday 6.00 P.M.	அருட்திரு. **A.ஜோசப் லூர்துராஜ்** முதல்வர், தனிநாயகம் அடிகள் கல்லூரி, திருச்சி **"மரியாள்: தூய ஆவியின் ஆலயம்"**
06.09.2008 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு Saturday 6.00 P.M. இரவு 8.00 மணிக்கு	அருட்திரு.**V.பெர்னார்டு ஜோசப்** மறைப்பணி நிலைய இயக்குனர், சேலம் **"மரியாள்: சுமைகளை சுகமாக சுமந்தவள்"** மூவேந்தர் கலைக்குழுவின் **அன்பின் அரசி** ஒலி, ஒளி நாடகம், சேலம்
07.09.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு Sunday 6.00 P.M.	அருட்திரு. **I.ரேமண்ட் ஜோசப்** பேராசிரியர், தூய பவுல் குருகுலம், திருச்சி **"மரியாள்: பாவிகளுக்கு அடைக்கலம்"**
08.09.2008 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு Monday 6.00 P.M.	அருட்திரு. **C.பீட்டர் பிரான்சிஸ்** குடந்தை மறைமாவட்ட முதன்மை குரு **"மரியாள்: இரக்கத்தின் இருப்பிடம்**
இரவு 9.30 மணிக்கு	**அலங்கார தேர்பவனி**
09.09.2008 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு Tuesday 6.00 A.M.	**திருவிழா கூட்டுத்திருப்பலி** பேரருட்திரு. **C.பீட்டர் பிரான்சிஸ்** குடந்தை மறைமாவட்ட முதன்மைகுரு **"மரியாள்: புதுமைகளின் தாய்**
மாலை 5.15 மணிக்கு	திருப்பலியைத் தொடர்ந்து **அலங்கார தேர்பவனி** நடைபெறும்.

அனைவரும் வருக! மாதா அருள் பெறுக!!

அன்பின் அழைப்பில்......

பங்குத்தந்தையர்கள்
அருட்கன்னியர்கள்
பங்கு மக்கள்
பூண்டி மாதா பேராலயம்,
பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.



Rev.Fr. L.குழந்தைசாமி
அதிபர், பங்குத்தந்தை
பூண்டி மாதா பேராலயம்,
பூண்டி, திருக்காட்டுப்பள்ளி (வழி)
தஞ்சாவூர். - 613 105.
www.poondimadha.org
www.poondimatha.org
Email:poondimadha@hotmail.com
Poondimadha@rediffmail.com

சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்பு நிர்வாகத்தின் அழைப்பின்பேரில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளித்து வந்துள்ளனர் ஈரோடு மாவட்டம்



* சீன வானொலியில்...

பெருந்துறை



பெருந்துறையைச் சேர்ந்த இரண்டு பேர். ஒருவர் பல்லவி பரமசிவம். இன்னொருவர் நாச்சிமுத்து. விஜயமங்கலம் கிராம விவசாயி. பெய்ஜிங் அனுபவத்தை இவர்கள் நம்மோடு பகிர்ந்துகொண்டனர்.

- தினசரி ஒரு மணி நேரம் ஒலிபரப்பாகும் தமிழ்ச்சேவை, உலகெங்கிலும் வசிக்கும் தமிழர்கள் கேட்கும் விதமாக அன்றைய தினமே, வெவ்வேறு நேரங்களில் மீண்டும் மூன்றுமுறை ஒலிபரப்பு செய்கிறார்கள்.

- ஒலிம்பிக் போட்டிகள் துவங்குவதற்கு, ஒரு வாரம் முன்னதாகவே சீனா சென்றுவிட்டோம். பறவைக் கூடு என்னும் உள் விளையாட்டரங்கில் ஒலிம்பிக் துவக்க விழா நிகழ்ச்சி. பார்வையாளர்கள் பகுதிக்கு விண்ணப்பித்திருந்தோம். உலகின் சாதாரண மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதி அது. விண்ணப்பித்திருந்த இருபதாயிரம் நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வானவர்கள் 9,000 பேர்கள் மட்டுமே. குலுக்கலில் நாங்கள் இருவரும் மிஸ்ஸிங்.

- அதனால் என்ன? துவக்க விழாவுக்கு மூன்று நாட்களுக்கு முன்னரே, பறவைக் கூடு அரங்கின் உட்பகுதிகளை முழுமையாகச் சுற்றிப்பார்த்துவிட்டோம். அதன் பிரமாண்டம் இன்னமும் எங்களின் கண்களைவிட்டு அகலவில்லை.

- பெய்ஜிங் விளையாட்டு அரங்கம் மற்றும் சீனப் பெருநகரங்களில் அமையப்பெற்றிருந்த பல விளையாட்டு அரங்கங்களைச் சுற்றிப்பார்த்தபோது, பிரமித்துப் போனோம். பணத்தை இடைத்தரகர்கள்



... பெய்ஜிங்

துக்கும் மேலே வேக வைத்துச் சாப்பிடும் அசைவ/சைவ உணவு களை, சீனர்கள் ஐம்பது டிகிரிக்கும் கீழே யான உஷ்ணத்தில் வேகவைத்துச் சாப்பிடுகிறார்கள். நிறைய பழங்களையும் உணவாகக் கொள்கிறார்கள்.

● ஹாங்காங் டு பெய்ஜிங் இரண்டாயிரத்து ஐநூறு கி.மீ. தூரம். அதிவேக ரயிலில் பயணம். இந்தியாவில் இந்தத் தூரத்தைக் கடக்க இரண்டு நாட்கள் ஆகும். இருபத்தி மூன்று மணி நேரத்தில் பெய்ஜிங் போய்ச் சேர்ந்தோம்.

கமிஷனின்றி, நேரடியாக அதனதன் ஏற்பாடுகளுக்கு முழுமையாக வாரியிறைத்திருக்கிறது சீனா.

● ஒலிம்பிக் துவங்குவதற்கு முன்பாக சீனாவில் திபெத்தியர்கள் பிரச்னை, உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் நச்சுக்காற்று, சுகாதாரமற்ற உணவு என பீதியுடன் பெய்ஜிங் சென்றிருந்த வெளிநாட்டவர்களை அசத்திக்காட்டியது சீன அரசு. உலகமே வியக்கும் வகையில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தி முடித்து அந்தச் சர்ச்சைகளைப் பொய்யாக்கிவிட்டது.

● சீனாவில் அறுபது வயதானவர்களைப் பார்க்கும்போது, இருபது வயதானவர்கள் போலவே தோற்றமளிக்கிறார்கள். அவர்களை அசைவ உணவுப் பிரியர்கள் என்றே உலகம் அறிந்து வைத்திருக்கிறது. ஆனால், சீனர்கள் எந்த அளவு அசைவ உணவு உண்கிறார்களோ, அதைவிட அதிக அளவு சைவ உணவுகளையும் எடுத்துக் கொள்கிறார்கள்.

● இந்தியாவில் நூறு டிகிரி உஷ்ணத்

● அந்த இரண்டாயிரத்து ஐந்நூறு கி.மீ. தூர ரயில்பாதையின் இருபுறங்களிலும் ஆளுயரத்துக்கும் மேலாக கம்பி வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. நகரங்கள், கிராமங்கள், கட்டிடங்கள் தவிர்த்து எங்கு பார்த்தாலும் விளைநிலங்கள்.

● சீனாவில் பத்திரப்பதிவு அலுவலகம் எங்குமே இல்லை. விளைநிலங்கள், கட்டடங்கள், சாலைகள் அனைத்துமே அரசுக்குச் சொந்தம். கட்டடங்களை ஐம்பது ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் சீனர்களுக்கு விற்பனை செய்கிறது அரசு. பின்னர் ஐம்பது ஆண்டுகள் கழித்து, பணத்தை திருப்பித் தந்து கட்டடங்களைக் கையகப்படுத்திக் கொள்கிறது.

● சீன நாணயத்தில் ஒரு யென் என்பது நம்மூருக்கு ஒரு பைசா மாதிரி.



* விமான நிலையத்தில்...

நூறு யென் கொண்டது ஒரு யுகான் ரூபாய் நோட்டு. இந்தியாவின் ஆறு ரூபாய், சீனாவில் ஒரு யுகான் நோட்டு. சீனாவில் நூறு யுகான் தாளுக்கும் மேலே புழக்கத்தில் இல்லை!

● நகரங்களில் ஐந்து நட்சத்திர உணவு



விடுதிகளில், மதிய உணவுக்கு, பதினைந்து யுகான் செலுத்தினால் போதும். அசைவ, சைவ உணவு வகைகளை பஃபே முறையில் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். அளவு எதுவும் கிடையாது.

● ஐந்தாம் வயதில் பள்ளிகளில் முதல் வகுப்பு. அதில் பாடங்கள் ஏதும் இல்லை. தேசப்பற்றுடன் கூடிய சுற்றுப்புறச் சூழல் கல்வியே அங்கு போதிக்கப்படுகிறது. இரண்டாம் வகுப்பிலிருந்து பாடங்கள் துவங்கினாலும், வளரும் இளம் பருவத்திலேயே அவரவர்களின் திறமை மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில், தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு துறையிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

● விளையாட்டுத் துறைக்குத் திறமை மற்றும் ஆர்வம் உள்ளவர்களை மட்டுமே தேர்வுசெய்து பயிற்சி தரப்படுகிறது. எந்தத் துறையிலும் சிபாரிசு என்பதோ, வி.ஐ.பி தலையீடு என்பதோ கிடையவே கிடையாது.

● இந்தியாவின் அபிநவ் பிந்த்ரா ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றது குறித்து, சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்பில் எங்களிடம் நேர்காணல் செய்யப்பட்டு ஒலிபரப்பானது. அன்று எங்களைச் சந்தித்த சீனர்கள், எங்களிடம் வந்து கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தனர்.

● சென்ற முறை ஒலிம்பிக்கில் இரண்டாமிடம் பெற்றபோதே, அடுத்த ஒலிம்பிக்கில் முதலிடம் பெறுவதென லட்சியம் கொண்டது சீனா. தம்முடைய மண்ணில் நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டிகளில், அதிக அளவில் தங்கம் வென்று பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்து நிரூபித்தும் காட்டிவிட்டது.

தொகுப்பு: **ஸ்ரீரங்கம் திருநாவு**

நெஞ்சம் மறப்பதில்லை

படபடவென கொட்டிக் கொண்டிருந்தது வானம். யார் கையிலும் குடையோ, மழைக்கோட்டோ இல்லை. மிதமான வெயிலில் பலமான மழை.

புவனா தொப்பலாக நனைந்திருந்தாள். காய்கறி வாங்கக் கடைத்தெருவுக்கு வந்தவள், வானத்தைச் சபித்தபடியே வேகமாக நடக்கத்தொடங்கினாள்.

பைக் ஸ்டார்ட் ஆகாத கோபத்தில் கிக்கரை ஓங்கி உதைத்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

'கட்டிக்கப் போறவ பாவம்' மனத்துக்குள் சிரித்துக்கொண்டாள் புவனா. ஏனோ அவனை நிமிர்ந்துபார்க்கத் தோன்றியது. நிமிர்ந்து பார்த்தாள்.

''ஏ... நம்ம அகிலு...'' சட்டெனக் கூப்பிட்டுவிட்டாள் புவனா. அவனுக்கும் கேட்டுவிட்டது.

''ஏய் புவனா... என்ன மழையில நனைஞ்சுக்கிட்டு போற...''

''காய்கறி வாங்க வந்தேன். குடை எடுக்காம வந்ததால முழுக்க நனைஞ்சிட்டேன். சரி... நீ எப்படி இந்தப் பக்கம்?'' கேட்டாள்.

அகிலன் புவனாவின் கல்லூரிக்காலத் தோழன். மதனின் நண்பன். பி.எஸ்ஸியில் அட்மிஷன் போட்ட முதல் நாளிலிருந்து முழுதாக மூன்று வருடங்கள் புவனாவை மாய்ந்து மாய்ந்து காதலித்தவன் மதன். புவனாவும்தான்...


ஆனால் அவர்களின் காதல் கைகூடவில்லை. புவனாவின் வீட்டில் போர்க்களம். 'எங்க சவத்துக்கு மாலை போட்டுட்டு நீ எவங்கூட வேணும்னாலும் போ...' என அம்மா அழுகையும் ஆத்திரமுமாய்ப் பேசியது புவனாவை அமைதியாக்கிவிட்டது.

கண்ணீருடன் மதனைத் தேடி வந்தாள். குடும்பத்தின் எதிர்ப்பைச் சொல்லிக் குமுறினாள்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு சொன்னான். ''வீட்ல பார்க்கிற வரனைக் கட்டிக்க புவனா.'' அவள் நிமிர்ந்தாள்.

''குடும்பத்தோட சாபத்தைச் சம்பாரிச்சுக்கிட்டுதான் நாம சேரணுமா? நீ இப்போ வீட்டுக்குப் போ. நல்லா யோசிச்சுப் பாரு. நா சொல்ற உண்மை புரியும்'' என்று மதன் கூற, மறுபடியும் அழத்தொடங்கினாள் புவனா.

''கவலைப்படாத புவனா... உன் மனசுக்கு, உனக்குத் தங்கமான மாப்பிள்ளை கிடைப்பான். வீட்ல பார்க்கிற மாப்பிள்ளைக்கு சம்மதம் சொல்லு. அதை கனவா நிஜமான்னு நம்பமுடியாம உன்னைப் பெத்தவங்க திக்குமுக்காடிப் போயிருவாங்க இல்ல. அப்போதான் உனக்குத் தெரியும்... பெத்தவங்களோட சந்தோஷத்துக்கு முன்னால நம்மளோட காதல் எவ்வளவு சாதாரணமானதுன்னு.''



''அப்ப நீங்க...''

''கவலையேபடாத புவனா.. நானும் யாரையாவது கட்டிக் கறேன்...''

இரண்டாவது வாரத்திலேயே புவனா வுக்குக் கல்யாணம். முதல் ஆளாகக் கல்யா ணத்துக்கு வந்திருந்தான் மதன். கடைசி ஆளாக அன்பளிப்பு கொடுத்து விட்டுப் போனான்.

எஸ்.சஞ்சய் ராமசாமி

ஏழு வருடங்களுக்கு முன்பு நடந்த திருமணம், புவனாவின் நினைவில் வந்துவிட்டுப் போனது.

இப்போது புவனாவுக்கு இரண்டு குழந்தைகள். மதன் இன்னமும் திருமணம் செய்துகொள்ளவில்லை. வருகிற வரன்

களை எல்லாம் தட்டிக்கழித்துக் கொண்டே இருக்கிறானாம்.

ஒருமுறை அகிலன், புவனாவை நேரில் பார்த்து இதை எல்லாம் சொன்னான்.

''நீங்க சொன்னாத்தான் மதன் கேட் பான். ஃபோன்ல பேசி கல்யாணத் துக்குச் சம்மதிக்கச் சொல்லுங்க.''

கெஞ்சினான் அகிலன்.

புவனாவும் தயங்கியபடியே மதனின் செல்லுக்கு கால் செய்தாள்.

''நெஞ்சம் மறப்பதில்லை... அது நினைவை இழப்பதில்லை...'' - ஹலோ ட்யூனில் கண்ணதாசன். அதைக் கேட்டதுமே புவனாவுக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

அதற்குப் பிறகு இப்போது தான் அகிலனைப் பார்க்கிறாள் புவனா. வானம் கொட்டிக் கொண்டே இருந்தது.

''மதன் நல்லா இருக்காரா அகில்?''

தயங்கியபடியே கேட்டாள்.

சட்டென ஞாபகம் வந்தது போல் சொன்னான் அகிலன்.

''மதன் கல்யாணப் பத்திரிகை கொடுக் கிறதுக்காக, நாளைக்கு உன் வீட்டுக்கு வர்றதா சொல்லி இருந்தான் புவனா.''

பேசிக்கொண்டே கிக்கரை உதைத்தான். சட்டென ஸ்டார்ட் ஆகிவிட்டது பைக்.

''சரி புவனா... நா கௌம்பறேன். மறு படியும் பைக் ஆஃப் ஆகிட்டா உதைக் கிறதுக்கு உடம்புல தெம்பு இல்ல...''

புவனாவின் பதிலுக்குக்கூட காத்திருக் காமல் கிளம்பிவிட்டான் அகிலன்..

மழை கொட்டுவதுகூட தெரியாமல் சிலை போல நின்றுகொண்டிருந்தாள் புவனா.

''என்னையவே மனசுல நெனச்சு வாழ்ந்தவன். இத்தனை வருஷங்களுக்கு அப்புறம் அவன் மனசு மாறியதில் சந் தோஷம்தான். இருந்தாலும், அவன் மனசில இருந்து நான் நிராகரிக்கப்படு வேனா? இனி என்னைய மறந்திடு வானா... நான் இருந்த இடத்தில் வேறொரு பெண்ணா?''

தனக்குள் தானே பேசிக்கொண்டு மருகித் தவித்தாள் புவனா. புதிதாக மூக் குத்தி அணிந்தவளுக்கு வலியும் பூரிப் பும் சரிவிகிதத்தில் கலந் திருக்குமே... அது போல நிம்மதியும் பரிதவிப்பும் ஜோடிப் பாம்பாய்ப் பின்னி புவனாவின் மனத்தில் ஊர்ந்துகொண் டிருந்தது.




* 'புதிய பயணம்' படத்தில்...

அடுத்தநாள் அதிகாலையிலேயே விழிப்பு வந்தது. கடிகாரமுள் பத்து மணியைக் காட்ட இருபத்து நாலு மணி நேரம் எடுத்துக் கொண்டது போலிருந்தது.

குழந்தைகளை ஆட்டோவில் அனுப்பி விட்டு, கணவரின் ஸ்கூட்டருக்கு டாடா

காட்டிவிட்டு சமையல்கட்டுக்கு வந்தாள். மதனுக்குப் பிடித்த கேரட் அல்வா செய்யத் தொடங்கினாள். முந்திரியைத் தூள்செய்து அல்வா மீது தூவி, ஒரு துண்டு எடுத்து நாக்கில் வைத்துப்பார்த்தாள்.



அதற்குள் காலிங்பெல் சத்தமிட, ஓடி வந்து கதவு திறந்தாள். வெளியே மதன். அழைத்தாள். பத்திரிகை பேக்குடன் உள்ளே வந்தான் மதன். அல்வா எடுத்து வந்தாள். சிரித்த படியே ஸ்பூனை தவிர்த்து

சின்ன தயக்கம்... அதைக் கேட்டா கோவிச் சுக்க மாட்டீங்களே...''

விழிகளை முட்டும் கண்ணீருடன் கேட்டாள். புரியாமல் நிமிர்ந்தான் மதன்.

''கல்யாணத்துக்கு அப்புறம் என்னைய மறந்திடுவீங்களா?'' தயக்கம் உடைத்துக் கேட்டாள்.

மெலிதாகச் சிரித்தான் மதன்.

''முதல்ல பத்திரிகையைப் பிரிச்சுப் பாரு புவனா. கல்யாணம் எனக்கு இல்ல. என் தம்பிக்கு...'' சிரிப்பு மாறாமல் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

"புதுமுகங்களின் பட்டாளத்தோடு 'புதிய பயணம்' படம் தன் திரையுலகப் பிரவேசத்தைத் துவங்கவிருக்கிறது. இந்தப் படத்தைப் பொறுத்தவரை கதைதான் ஹீரோ, ஹீரோயின்... எல்லாமே. கதையின் நாயகன், நாயகிதான் இதில் இருக்கிறார்களே தவிர கதாநாயகன், நாயகி என்று யாரும் இல்லை. எனக்கும் இந்தப் படம் ஓர் இனிய துவக்கம்தான்'' என்கிறார் இப்படத்தில் கதாநாயகனாக சாரி, கதையின் நாயகனாக நடிக்கும் எம்.டி.முத்து. இவரே இயக்குநர் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்.

''எம்.டி. முத்து, ஜெனிஃபர், மிதுனா என்று மூன்று கதாபாத்திரங்களை வைத்து அண்மையில் இரண்டு பாடல்களை எடுத்தோம்.

இதயம் காணலியே/தொலைந்தும் தேடலியே
இருக்குமிடம் தெரிந்தும்/கேட்கும் மனமில்லையே

என்ற பாடல் காட்சி படமாக்கப்பட்டது. இந்தப் பாடல் காட்சியில், நடித்த ஜெனிபர், கில்லி படத்தில் விஜய்யின் தங்கையாக நடித்துப் பிரபலமானவர். இதில் இரண்டாவது கதாநாயகியாக அறிமுகமாகிறார். எங்கள் ஒட்டுமொத்த யூனிட்டுக்குமே, இந்தப் படம் இனிய பயணமாக இருக்கும்'' என்று நம்பிக்கைத் தெரிவிக்கிறார் முத்து.

- சிபிராஜ்

விட்டுக் கையால் எடுத்துச் சாப்பிட்டான்.

''தாங்க்ஸ் புவனா. அல்வா பிரமாதமா இருக்கு. சரி மறந்திடாம கல்யாணத்துக்கு வந்திடு...'' பத்திரிகையை எடுக்கக் குனிந் தான் மதன்.

அதற்கு மேலும் புவனாவால் அடக்க முடியவில்லை. ''உங்க கல்யாணத்தில எனக்குச் சந்தோஷம்தான். ஆனா மனசில

வாசல் வரை போனவன் திரும்பி வந்து அதே புன்னகையோடு சொன்னான்.

''எத்தனை தடவை செல்நம்பர் மாத்தி னாலும் என் ஹலோ ட்யூன் அதேதான் புவனா...''

புவனாவின் நெஞ்சுக்குள் புகுந்து பாடிக்கொண்டிருந்தார் கண்ணதாசன்.

''நெஞ்சம் மறப்பதில்லை...'' ◆

இந்தியக் கிரிக்கெட்டின் தலையெழுத்தை மாற்றியமைத்தவர்கள் என்று யார் யாரைச் சொல்லலாம்? அதாவது தனிப்பட்ட விசேஷத் திறமையால் புகழடைவது வேறு. தனிவிருப்பத்துக்கும் சாதனைகளுக்கும் இடம்கொடுக்காமல், அணியின் நலனுக்காக யோசிப்பதும் செயல்படுவதும் வேறு. கபில்தேவ், புதிய இந்திய அணி ஒன்றை உருவாக்கி, கனவிலும் எண்ணாத உலகக் கோப்பையை ஒரு காலத்தில் வாங்கிக் கொடுத்தார். அதன் பிறகு இந்திய அணியில் டெண்டுல்கர் போல தனித்திறமைகள் பளிச்சிட்டதே தவிர, அணிக்கு அதனால் பெரிய பலன்கள் எதுவும் ஏற்படவில்லை. கங்குலி, தன் சக்திக்கு உட்பட்டு இந்திய அணிக்குச் சில திறமைகளையும் வெற்றிகளையும் தேடிக்கொடுத்தார். இயல்பிலேயே கங்குலியின் நிர்வாகத்தில் சில குறைகள் இருந்ததால், அவரால் அணியை ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற அணிகளுக்கு அருகே கொண்டு செல்ல முடியவில்லை.

டோனி. இவரால் இந்திய அணிக்குத் தலைகீழ் மாற்றங்கள் ஏற்படும் என்று நினைத்து, தலைமைப் பதவி அளிக்கப்படவில்லை. டெண்டுல்கர், கங்குலி, திராவிட்டுக்கு அடுத்து அணியை வழிநடத்திச் செல்ல யாரும் தயாராக இல்லை. அணியில் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுபவர் என்கிற சாதாரண காரணத்துக்காவே, டோனிக்கு 20-20 இந்திய அணியைத் தலைமைதாங்கும் வாய்ப்பு அருளப்பட்டது.

அணியை வழிநடத்த புதிய ஆற்றல் தேவை என்பதில் சந்தேகமேயில்லை. டெண்டுல்கர் அவுட் ஆகிவிட்டால், ஓட்டை விழுந்த படகாக மாறிய அணியைத்தான் எல்லோரும் பார்த்து வந்திருக்கிறோம். ஆனால், அணி என்பது பதினோரு பேர் சம்பந்தப்பட்டது என்கிற அடிப்படை விதி சமீப காலமாகவே வலுவாக உணர்த்தப்படுகிறது. ஸ்ரீலங்காவுடனான போட்டியில் டெண்டுல்கர், ஷேவாக், இஷாந்த் சர்மா போன்ற அசாத்திய திறமைகள் இல்லை. டெஸ்ட் மேட்சில் உருப்படியாக ஆடிய கம்பீர், ஒருநாள் போட்டிகளில் நடுநடுங்கினார். யுவ்ராஜ் பற்றிப் பேச எதுவுமே இல்லை. ஆனாலும் தொடரை இந்தியாவே வென்றது. டோனி, டெஸ்ட் மேட்சில் கலந்துகொள்ளாமல் ஓய்வெடுத்தது சொகுசுக்காக அல்ல என்பதையும் புரியவைத்துவிட்டார். மூன்று வருடங்களாக அணியில் நுழையப் போராடிக் கொண்டிருந்த தமிழ்நாட்டு வீரர் பத்ரிநாத்துக்கு, இப்போது அணியில் புதிய பொறுப்புகள். ஆஸ்திரேலியா உள்பட பத்தொன்பது வயதுக்குட்பட்ட வீரர்களை, எந்த அணியிலும் சுலபமாகக் காண முடியாது. ஆனால், இந்திய அணியில்தான் வீரத் கோலி, இஷாந்த் சர்மா, ரைனா... போன்ற இருபது வயதுக்குட்பட்ட வீரர்கள் சர்வசாதாரணமாக இடம்பிடித்து தொடர்ந்து ஆடிவருகிறார்கள். அணியின் தேர்வில் புரட்சி செய்துள்ள டோனியின் பாணியைத்தான், இன்று பல நாடுகள் பிரதி எடுத்துள்ளன.

இதுதான் தருணம். ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, ஸ்ரீலங்கா அணிகளுடனான டெஸ்ட் தொடர் எதிலும் கும்ப்ளே வெற்றிபெறவில்லை. இப்போது முழு

புரட்சித்





ச.ந.கண்ணன்

மனத்தோடு டோனிக்கு வழிவிடுவது தான், அவருடைய அர்ப்பணிப்பு கிரிக்கெட்டுக்கு முழுமையான அர்த்தத்தைக் கொடுக்கும். இன்றைய தேதியில் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி மூன்றாவது இடத்திலும், ஒருநாள் போட்டியில் நான்காவது இடத்திலும் இருக்கிறது. இரண்டிலும் முதல் இடத்தைப் பிடிப்பதற்கு ஒருமித்த கருத்துகள் கொண்ட ஓர் அணியும் தலைமையும் அவசியம். ஆஸ்திரேலியா அணியே இதற்குச் சிறந்த உதாரணம். ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருதோடு நின்றுவிடாமல், டோனியை டெஸ்ட் அணிக்கும் தலைமைதாங்கச் சொல்வதே காலத்துக்கு ஏற்ற ஏற்பாடாக அமையும். ●

தலைவர்

அருள்வாக்கு


பரலோக சுகம்

சமய விதிகளில் சில லௌகிகத்தில் அசௌகரியம் உண்டாக்குகின்றன; தர்ம சாஸ்திர விதிகளில் சில சமூக வாழ்வில் (social life) கஷ்டம் உண்டாக்குகின்றன - என்பதைக் காரணம் காட்டிச் சீர்திருத்தக் காரர்கள் சாஸ்திரங்களை மாற்றுகிறார்கள்.

சீர்திருத்தக்காரர்கள் 'சமூக வாழ்வு' (social life) என்கிறபோது, ஆத்மார்த்தமானதைக் குறிப்பிடவில்லை. புதுப்புது அரசியல் முறைகள், ஸயன்ஸ்கள், வியாபார மாறுதல்கள், பொருளாதாரம், ஃபாஷன்கள்... இவற்றையே சமூகவாழ்வு என்கிறார்கள். இவை யாவும் பலவிதமான மாறுபாடுகளுக்கு ஆளாகிக்கொண்டேயிருப்பவை. வெறுமே லௌகிகத்தை மட்டும் சமூகம் குறிக்கோளாகக் கொண்டிருந்தால், சமூக வாழ்வுக்காக உள்ள விதிகளும் அதற்கேற்ப மாறலாம். ஆனால், நம் சாஸ்திரங்கள் சமூக வாழ்வை இப்படி லௌகிகமாக மட்டும் கருத்தில் கொண்டவை அல்ல. அவை ஆத்மார்த்தமானவை. மனிதன் சம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்கு வழிசொல்வதே சாஸ்திரத்தின் லட்சியம். லௌகிகமான அரசியல், அறிவு நூல்கள், பொருளாதாரம் இவைதான் மாறுமேயொழிய ஆத்மார்த்தமான சத்தியங்கள் எந்நாளும் மாறுவதில்லை. மாறுகிற சமூகத்தை அந்த மாறாத சத்தியத்தில் நிலைப்படுத்துவதற்காகச் சாஸ்திரங்கள் விதித்த நியதிகளும் மாறாதவையே.

இலட்சியம் லௌகிகமாக மட்டும் இருந்தால் அவ்வப்போது சமூக வாழ்வுக்கான விஷயங்களை மாற்றிக்கொள்ளலாம். ஆனால், ஆத்ம க்ஷேமத்தையே லட்சியமாக வைத்து, அதற்கு அனுசரணையாக லௌகிக வாழ்வுக்கு விதிகள் செய்து தருகிறபோது, இவ்விதிகளை மாற்றமுடியாது. தர்ம சாஸ்திர விதிகள் லௌகிகத்தில் அசௌகரியமாயிருக்கிறது என்று குறைப்படுவதே பொருந்தாது. ஏனென்றால் தர்ம சாஸ்திரம் இகலோக சௌக்கியத்தை முக்கியமாகவே கருதவில்லை. இகலோகத்தில் பலவித அசௌகரியங்களை அனுபவித்தாவது பரலோக சுகம் பெறுவதற்கே அது உபாயம் சொல்கிறது. ஆனபடியால் அதை உலக ரீதியில் நமது சௌகரியப்படி மாற்ற வேண்டும் என்பது நியாயமில்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்



தமிழகத்தின் மத்திய மற்றும் கிளைச் சிறைகளில், ஒரு பக்கம் யோகாசன வகுப்புகள்; கைதிகள் மேற்கொண்டு படிக்க ஏற்பாடு; பட்டமளிப்பு விழா... இன்னொரு பக்கமோ சட்டத்துக்குப் புறம்பான செயல்கள்! சமீபத்திய தொடர் குண்டு வெடிப்புச் சதி, புழல் சிறையில்தான் உருவாயிற்று என்றும் சொல்கிறார்கள்! தமிழ்நாடு சிறைத் துறை கூடுதல் டி.ஜி.பி. ஆர்.நடராஜைச் சந்தித்தோம்.

சிறைச்சாலைகளில், சட்டத்துக்குப் புறம்பான செயல்கள் நடப்பதற்கு என்ன காரணம்?

''சிறைச்சாலைகளுக்கு என்று சட்ட - திட்டங்கள் இருக்கின்றன. சட்ட திட்டங்கள் இருந்தாலே, அவை மீறப்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. அப்படி மீறப்படும்போது, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது சிறைச்சாலைகளில் பணியாற்றுபவர்களின் கடமை. சின்னத் தவறுகள் நடக்கிறபோது அதைத் தடுக்காமல் விட்டுவிட்டால், அது காலப்போக்கில் பெரிய தவறுகள் நடப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன. ஒரு சிலருக்கு, ஓரிரு விஷயங்களில், ஒரு சிலர் சலுகை காட்ட ஆரம்பித்தால், அது எவரும் எந்தச் சலுகையையும் பெற்றுவிடலாம் என்ற நிலைமையில் கொண்டு போய் விட்டுவிடும். இதற்குச் சிறைத் துறையில் பணியாற்றும் நான் உட்பட அனைவருமே பொறுப்பு. தமிழ்நாட்டில் பின்பற்றப்படும், 'சிறைச்சாலை விதிமுறைகள் புத்தகம்' இந்தியாவிலேயே மிகச் சிறந்தது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை அப்படியே அமல்படுத்தினாலே போதும். எங்கேயும் எந்தத் தவறும் நிகழ்வதற்கு வாய்ப்பே இருக்காது. அதைச் செய்ய முயற்சிக்கிறோம்.''

சிறைக்குள், கிரிமினல்களின் செல்ஃபோன் பயன்பாட்டைத் தடுக்க ஜாமர் கருவிகளைப் பொருத்த முடியாதா?

''சிறைவளாகத்தினுள் தடைசெய்யப்பட்ட பொருட்களுள் செல்ஃபோனும் ஒன்று. ஆனால், சிறைவாசிகள் செல்ஃபோன் பயன்படுத்துவது இப்போதுதான் தெரிய வந்துள்ளது. குஜராத் சபர்மதி சிறையில் ஜாமர்கள் நிறுவப்பட்டிருந்தாலும், அவற்றால் பெரிய அளவில் பலன் இல்லை. இன்று பல்வேறு அலைவரிசைகளிலும் பயன்படுத்தப்படும் செல்ஃபோன்களையெல்லாம் முடக்கும் திறன்கொண்ட ஜாமர்கள் மார்க்கெட்டில் கிடைக்கவில்லை. அது மட்டுமின்றி 30 மீ X 30 மீ அளவு ஏரியாவில் பொருத்தக்கூடிய ஒரு ஜாமர் கருவியின் விலை 50 லட்சம்! 215 ஏக்கர் பரப்புள்ள புழல் சிறை வளாகத்தில் முழுமையாக ஜாமர்கள் நிறுவ பல கோடி ரூபாய் செலவாகும். அது எந்த அளவுக்குப் பயனளிக்கும் என்பதும் கேள்விக்குரியது!''

செல்ஃபோன் டிடெக்டர் மூலம் சிறைக்குள் பயன்படுத்தப்படும் செல்ஃபோன்களைக் கண்டுபிடிக்கலாமே?

''ஒரு சிறைவாசி செல்ஃபோனைப் பயன்படுத்தும்போது, அங்கே செல்ஃபோன் டிடெக்டரை எடுத்துக்கொண்டுபோய் பரிசோதித்தால்தான் கண்டுபிடிக்க முடியும். அது போல ஒரு சில செல்ஃபோன்களைக் கண்டுபிடித்துப் பறிமுதல்





செய்திருக்கிறோம். பொதுவாக, சிறை வாசிகள் செல்ஃபோனை ஆஃப் செய்து வைத்துவிட்டு தேவையானபோது மட்டும், ரகசியமாகப் பயன்படுத்துவதாகத் தெரிய வருகிறது. எனவே, சிறை வளாகத்தினுள்ளே உள்ள செல்ஃபோன்களைக் கண்டுபிடிப்பது சாத்தியம் என்றாலும், அதை முற்றிலுமாக ஒழிக்க டிடெக்டர்கள் பயன்படாது. கண்காணிப்பைத்தான் கூட்ட வேண்டும்.''

சிறை வளாகக் கண்காணிப்பில் குறைபாடுகள் ஏன் ஏற்படுகின்றன?

''காவல் துறையில் இருப்பவர்களை மாமியார் போல குட்டிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அவரவர்கள் ஒழுங்காக வேலை செய்வார்கள். சமஸ்கிருதத்தில், 'சின்ன விஷயம் தானே என்று கோபப்படாமல் இருக்கக்கூடாது' என்று சொல்வார்கள்; அது மாதிரி...''

மேல்நாட்டுச் சிறைகளில் முதல்முறையாகக் குற்றம் செய்தவர்கள்; மோச

செல் Vs. Cell

சிறைத்துறை கூடுதல் டி.ஜி.பி. ஆர்.நடராஜ் பேட்டி

மான கிரிமினல்கள்... என்று தரம் பிரிப்பதுபோல இங்கேயும் செய்யலாமே?

''தண்டனைபெற்ற சிறைவாசிகள், விசாரணைக் கைதிகள், வழக்கு நிலுவையில் உள்ள கைதிகள், பெண்கள், சிறுவர்கள் என்று இங்கும் பிரிக்கப்படுகிறார்கள். இவர்களைத் தனித்தனிப் பிரிவாக வைத்திருப்பதுதான் நல்லது. சமீபத்தில் சிறைவாசிகளில் முதியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோரை, தனியே பிரித்து அவர்களுடைய தேவைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திடீரென்று சிறைவளாகங்களில் அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னணி என்ன?

''அண்மையில் புழல்சிறையைப் பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, பல்வேறு மாநில சிறைகளைவிட புழல்சிறை மிகச் சிறப்பாக இருப்பதாகக் கருத்துத் தெரிவித்தது. அதையடுத்த சில நாட்களிலேயே நெல்லை சிறைச்சாலை சம்பவம் நடந்தது. அதைத் தொடர்ந்து சிறைவளாகங்களில் நடைபெறும் சட்டத்துக்குப் புறம்பான செயல்களைத் தடுக்க, தீவிர கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. தவறுக்குக் காரணமானவர்கள் மீது, வழக்குகள் போடப்பட்டுள்ளன; டிஸ்மிஸ் உட்பட கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.''



“சிறைவாசிகள், செல்ஃபோனை ஆஃப் செய்து வைத்துவிட்டு, தேவையானபோது மட்டும் ரகசியமாகப் பயன்படுத்துவதாகத் தெரியவருகிறது”

நம் நாட்டின் சிறைச்சாலைகளில் பெரும் இடநெருக்கடி நிலவுவதாகக் கூறப்படுகிறதே... தமிழ்நாட்டு நிலை என்ன?

''தமிழ்நாட்டில் உள்ள மத்திய, கிளை மற்றும் பெண்கள் சிறை வளாகங்களின் எண்ணிக்கை மொத்தம் 134. இவற்றில் அதிகபட்சம் 20,321 கைதிகளை வைக்கலாம். ஆனால், தற்போது அனைத்துச் சிறைகளிலுமாக, உள்ளிருப்பவர்கள் எண்ணிக்கை 18,298தான். எனவே தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகளில் இடநெருக்கடி என்ற பேச்சுக்கே இடமில்லை!''

உங்களுடைய அடுத்த நடவடிக்கை என்ன?

''சிறைவாசிகளில், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், தொடர் கல்வி தேவைப்படுபவர்கள், உயர் கல்வி தேவைப்படுகிறவர் என்று பிரித்து, கல்வி கற்க நடவடிக்கை எடுத்துவருகிறோம். 160 பேர் ஐ.டி.ஐ. பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இன்னொரு 160 பேர் கம்ப்யூட்டர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். நீண்ட கால தண்டனை அனுபவித்துவரும் சுமார் ஆறாயிரம் பேர்களுள், தொள்ளாயிரம் பேர் மட்டுமே கல்வித்திட்டத்தால் பலனடைந்து வருகிறார்கள். குறைந்த பட்சம் மூவாயிரம் பேர் பயனடையும்படி செய்வது எங்களுடைய லட்சியம். சிறைவளாகங்களில் உள்ள தொழிற்சாலைகளைச் சீரிய முறையில் செயல்பட வைத்து, சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். சிறைவாசிகளுக்கென சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தி, அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பதும் மிகவும் அவசியம். அது சிறைவாசிகளின் வாழ்க்கையில் பல பாசிடிவ்வான மாற்றங்களை ஏற்படுத்தும்.''

– எஸ். சந்திரமௌலி

படங்கள்: **ஸ்ரீஹரி**



BLB PLEDGED TO ETHICS

திருநின்றவூர் மற்றும் பட்டாபிராம் ஆகிய இடங்களில் 2 மேம்பாலங்கள் முடியும் தருவாயில் இருக்கும் நிலையில் இங்கு இதன் நிலமதிப்பானது இன்னும் இரண்டொரு மாதங்களில் நம்பமுடியாத வகையில் உயர்ந்து உங்களுக்கு அதிக வருவாயை உறுதியாக ஈட்டி அளிக்கும்.

சென்னையில் CMDA அனுமதிப் பெற்ற மனைகள் கிடைப்பது மிகவும் அரிதாகிவிட்ட நிலையில் திருநின்றவூரில் உள்ள BLBயின் ஸ்ரீ நரசிம்மா நகர் மனைகள் **குறைவான விலையில்** வழங்கப்படுகின்றன.

ஸ்ரீ நரசிம்மா நகர்

திருநின்றவூர்

(CMDA APPROVAL No. 37/2007)

கடந்த 10 ஆண்டுகளாக, அதிக வளர்ச்சி காணும் இடங்களில் அரசு அனுமதி பெற்ற மனைகளை வழங்குவதன் மூலம் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் வளம் பன்மடங்காகப் பெருக BLB எஸ்டேட்ஸ் உதவியுள்ளது. இப்போது BLBயின் ஸ்ரீ நரசிம்மா நகர் குறைவான முதலீட்டில் நிறைவான வளத்தைப் பெற்று மகிழ ஓர் வியப்பூட்டும் வாய்ப்பினை உங்களுக்கு அளிக்கிறது. இதை நழுவ விடாதீர்கள்.

சிறப்பம்சங்கள்:

- ✓ தார் சாலைகள்
- ✓ முழுவதும் வேலியிடப்பட்டது
- ✓ உடனே வீடு கட்டலாம்
- ✓ சுற்றிலும் வீடுகள்
- ✓ சுவையான நிலத்தடி நீர்
- ✓ இரயில் மற்றும் பஸ் வசதியுடன் கூடியது
- ✓ தெளிவான பத்திரங்கள்
- ✓ 5 ஆண்டுகள் பாதுகாப்பு சேவை

இலவசமாக மனையைப் பார்வையிட அழைக்கவும் :

28345104 / 05 / 06

IDBI

SUNDARAM BNP PARIBAS HOME FINANCE

BLB ESTATES PRIVATE LIMITED

"SREE AUDISESHA BHAVAN", New No. 21, Chinnaiah Street, (Off. G.N. Chetty Road & Thirumalai Pillai Road).
T.Nagar, Chennai - 600 017. E-Mail: blbestmail@vsnl.net Website: www.blbestates.com

COIMBATORE MARKETING OFFICE: 1105, Trichy Road, (Adj. to AIR), Ramanathapuram, Coimbatore - 641 045. Uma: Ph: 4395609 / 99943 52003

நன்மதிப்பில் முதலீடு

பசி

மணிநாத்

"**சா**ந்தி, சாப்பாடு ஆயிடுச்சா? நேரமாயிடுச்சு; சீக்கிரம் கொண்டா."

"ஆமா, எப்பவும் இவருக்கு அவசரம் தான். லேட்டா போனாதான் என்னவாம்? பசியில எல்லா புள்ளைகளும் செத்தா போயிடும். சத்துணவு வாத்தியாரா இருந்துக்கிட்டு, சோறு கட்டிக்கினுபோயி சாப்புடற, உன்னைப் போல வாத்தியாரை நான் எங்கேயும் பார்க்கலப்பா. அவனவன் வீட்டுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய்னு எடுத்துவந்து சம்பளத்த மிச்சப்படுத்துறான். நீ பொழைக்கத் தெரியாத மனுஷனா இருக்கறியே."

சாந்தியின் தொணதொணப்பைக் கண்டுகொள்ளவில்லை. மணி ஒன்பது.

ஸ்டாக்ரூம் சாவியை எடுத்துக்கொண்டேன். முகம் துடைக்க துண்டை எடுத்துப் பையில் திணித்தேன். அதற்குள் சாந்தி சாப்பாட்டைக் கொண்டுவந்து வைத்தாள். சைக்கிளில் ஏறி மிதித்தேன்.

இவளுக்குப் பசியைப் பற்றி என்ன தெரியும்? செல்வாக்காய் வளர்ந்தவள்; பசியின் கொடுமை தெரியாதவள். ஆனால், நான் அப்படியா?

எனக்கு இரண்டு அக்கா. நான் கடைக்குட்டி; செல்லப்பிள்ளை.

அப்பா, ஒவ்வொருநாளும் மாலையில் கவலை இறைக்க வயலுக்குப் போகும் போதெல்லாம், என்னையும் அழைத்துக்

> **"சாந்திக்குப் பசியைப் பற்றி என்ன தெரியும்? செல்வாக்காய் வளர்ந்தவள்; பசியின் கொடுமை அறியாதவள். ஆனால் நான் அப்படியா?"**

கொண்டு போவார்.

வயலுக்கு வந்ததும், கிணற்றடி புங்கமரத்தடியில் துண்டை விரித்து உட்காரவைத்து, கடையிலிருந்து வாங்கி வந்த பொட்டலத்தைத் தின்னக் கொடுத்து விட்டு கவலை இறைக்கப் போய்விடுவார்.

ஒருநாள் கவலை இறைக்க, புதரில் மறைத்து வைத்திருந்த சாலை எடுக்க போய் நிமிர்த்தியபோது, உள்ளே மறைந்திருந்த பாம்பு சீறி அப்பாவைக் கொத்தி விட்டது. ஏதேதோ மருந்துகள் கொடுத்தார்கள். ஆனாலும் அப்பா நுரைதள்ளிச் செத்துப்போனார்.

அப்பாவுக்குப் பிறகு நிலத்திலிருந்து


போட்டிக் கதை-4

வருமானம் இல்லாமல் போனது. கொஞ்சநாளில், அப்பா இருந்த போதே வாங்கியிருந்த கடனை அடைக்க நிலம் விற்றாகி விட்டது.

அம்மா, தினமும் கூலி வேலைக்குப் போய் எங்களைக் காப்பாற்றி வந்தது.

சிலநேரங்களில் கூலிக்குப்போன அம்மா வந்து, அடுப்புப் பற்றவைக்க நேரமாகிப்போகும். நான் 'பசி' 'பசி' என அழுது விட்டுத் தூங்கிப் போவேன். சமைத்த பிறகு அம்மா என்னை எழுப்பி தோற்றுப்போகும். எத்தனையோ இரவுகள் நான் பசியோடு தூங்கிப் போனது உண்டு.

கோடை நாட்களில் கூலி வேலைகள் கிடைக்காது. எல்லோருமாய் கோணிப் பையை எடுத்துக்



கண்களுக்குள் கன்னிங்!

“நான் நடிக்கவேண்டிய படம். என்னால் தேதி ஒதுக்க முடியாததால், நிதின் சத்யாவுக்கு விட்டுக்கொடுத்தேன். இந்தப் படத்தில் நாயகனாக நடிக்கும் அத்தனை தகுதிகளும் அவருக்குண்டு. வாழ்த்துகள்'' என்றார் நடிகர் விஜய், எந்தப் படம்? டைரக்டர் எஸ்.ஏ.சந்திர சேகரின் இயக்கத்தில் உருவாகும் 'பந்தயம்'. படத்தைப் பற்றி இயக்குனர் கூறும்போது, ''நிதின் சத்யாவை, நாயகனாகப் போட்டு இந்தப் படத்தை இயக்கவிருக்கிறேன் என்றவுடன், என் நண்பர் ஒருவர் கேட்டார். 'நிதின், இரண்டு மூன்று கதாநாயகர்களில் ஒருவராக நடித்தவர். அவரைத் தனி கதாநாயகனாகப் போட்டு எப்படிப் படம் எடுக்கும் துணிச்சல் வந்தது' என்றார். நான் சொன்ன பதில், 'என்னை நம்பும் அளவுக்கு, நிதினை நம்புகிறேன். ஏனெனில், நான் ஆரம்பத்தில் விஜயகாந்தை அறிமுகப்படுத்தும்போதும் இப்படித்தான் கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு அவர் திரையுலகில் தனி சாம்ராஜ்யம் நடத்திக் கொண்டிருக்கிறார். என்னால் அறிமுகப்படுத்தப்பட்டவர்களில் யாரும் சோடை போனது கிடையாது. விஜய், சிம்ரன், விஜய் ஆண்டனி... என்ற அந்த வெற்றித் தொடர்ச்சி நிதின் சத்யாவையும் தாண்டி நீளும். மேலும், நிதின் சத்யாவின் கண்களில் ஒரு கன்னிங்னஸ் இருக்கிறது. என்னிடம் மோதாதே. மோதினால் ஆள் காலி' என்று மிரட்டும் தொனி இருக்கிறது. அந்த ஒன்றுதான் அவரைப் பிரகாஷ்ராஜ் என்ற மாபெரும் நடிகனுக்கு முன்னால் ஈடுகொடுத்து நடிக்க வைத்தது. படம் வரட்டும், நிதின் சத்யாவும், கதையும் பரபரப்பாகப் பேசப்படுவார்கள்'' என்கிறார்.

– மகிமைராஜன்

கொண்டு குளத்தங்கரைக்குப் போவோம். அங்கே பழுத்துவிழும் ஆல இலைகளைப் பொறுக்கி வருவோம். அம்மா இலை களைத் தைத்துவிற்கும். புளியங்கொட் டையை வறுத்துத் தோல்நீக்கி ஊற வைத்துக் கொடுக்கும்.

எத்தனையோ இரவுகள் நாங்கள் பட்டினியாய் இருந்ததுண்டு. அப்பொழு தெல்லாம் அம்மா, அப்பாவை நினைத்து அழும்.

சின்னக்கா, அம்மாவின் மோவா யைச் சீண்டி, 'அம்மா பசிக்குதம்மா, அம்மா பசிக்குதம்மா'ன்னு சொல்லி அழும். அம்மா, சின்ன அக்காளை வாரி அணைத்துக்கொண்டு அழும். பிறகு தட்டிக் கொடுத்துத் தூங்க வைக் கும்.

அடுத்த நாள் அம்மா அதிகாலையில் எழுந்துபோய், பனந்தோப்பில் விழுந்து கிடக்கிற பனம்பழங்களைப் பொறுக்கி வந்து சுட்டு வைத்திருக்கும். நாங்கள் எழுந்ததும் எல்லோருக்கும் தின்னக்கொடுக்கும்.

மல்லாக்கொட்டை (மணிலா) உரிக்கும்போது மட்டும் எங் களை எல்லாம் அழைத்துப் போகும்.

'அக்காவ்... எட்டு மரக்கா மல்லாக்கொட்டைய அளந்துபோடு... உரிக்கிறேன்'னு குரல் கொடுக்கும். சின்ன அக்கா, பெரிய அக்கா எல்லோரும் வட்ட மாய் உட்கார்ந்துகொண்டு உரிப்பார்கள். அம்மா சவலைகளை உரித்து எனக்குத் தின் னக் கொடுக்கும். கண்குத்திப் பாம்பாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிற கம்பத்துக் காரம்மா சொல்லும், 'பையன் வெதப் பயிற தின்னுடப் போறான்.'

'தின்னக்கொடுப்பனாக்கா. நாங்களும் சம்சாரிங்கதான நல்லது கெட்டது தெரியா தாக்கா' என்று சொல்லிவிட்டு அக்காக் களைப் பார்த்துச் சொல்லும்.

''சீக்கிரம் உரிங்க, உரிச்சிட்டுக் கூலி

வாங்கிட்டுப் போய்தான் கஞ்சிகாச்ச ணும்.' அம்மாவின் கைகள் பரபரக்கும். கண்கள் மட்டும் எனக்காகச் சவலைகளைத் தேடிக்கொண்டிருக்கும்.

அக்காக்கள் யாரும் அசைபோடக் கூடாது. சவலைப்பயிர்களைச் சேர்த்துத் தான் வைக்கணும். கடைசியாக கம்பந்துக் காரம்மா வந்து, ஏதாவது அதில் விதை



பயிறு கலந்திருக்குதான்னு பார்த்துப் பொறுக்கி எடுத்துக்கொண்டுதான் தின்னக் கொடுப்பார்கள்.

டவுனிலிருந்து வந்த அத்தை, பெரிய அக்காவை அழைத்துப் போய் யார் வீட்டிலோ வீட்டுவேலைக்குச் சேர்த்து விட்டது.

அம்மாவுக்குக் காசநோய். எப்படி யிருந்தாலும் அம்மா கூலி வேலைக்குப் போவதை நிறுத்தாது. ஒரு நாள் காலையில் அம்மா நிரந்தரமாய் எழுந்திருக்கவே இல்லை.

அதன்பிறகு, அத்தை வந்து எங்களை அழைத்துப் போய் குருகுலத்தில் சேர்த்துவிட்டது. ஆஸ்டலில் ரொம்ப கட்டுப்பாடு. நானும் அக்காவும் சந்திக் கவே முடியாது. பள்ளிக்கூட பிரேயரில் தான் மௌனமாய் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வோம். பள்ளிக்கூடம் முடிந்து மணி அடித்ததும், ஆஸ்டல் பிள்ளைகள் எல்லோரும் வரிசையில் வந்து நிற்போம். அக்காவின் வரிசை முதலில் புறப்பட்டு, பெண்கள் ஆஸ்டலுக்குள் போய் விடும். எங்கள் ஆஸ்ட லுக்கும் அக்காவின் ஆஸ் டலுக்கும் அரைபர்லாங்கு தூரம்.

ஆஸ்டலில் எப் போதும் காலையில் கோதுமை கஞ்சிதான். மதியம் அளவு சாப்பாடு. இரவு பூரி அல்லது சப்பாத்தி. எப்போதுமே வயிறு நிரம்பாது.

எங்கள் ஆஸ்டலை ஒட்டி தார்சாலை இருந் தது. இரவில் கரும்பு லோடு போகும். மாண வர்கள் மதில்தாண்டி சாலையோரப் புளியமரத் தடியில் பதுங்கிக்கொள்வார்கள். டிராக்டர் கடந்ததும் பின்னால் ஓடி ஏறி, கரும்புகளை உருவிஉருவிப் போடுவார்கள். சிறுவர் கள் நாங்கள் பொறுக்கி எடுத்துவந்து கிரவுண்டில் போடுவோம். எல்லோரும் வட்டமாய் உட்கார்ந்து பசியாற்றிக் கொள்வோம்.

ஒரு நாள் வார்டனுக்குப் புகார் சென்று பிரம்புடன் வந்து நின்றார். வார்டன் ஒவ்வொரு பெட்டியாய்த் திறந்துபார்த்து அடிகொடுத்தார். கேள்விப்பட்டு அக்கா அழுததாய் ஆயா வந்து சொன்னாள்.

ஆஸ்டலில் சுகாதாரக்குழு, தண்ணீர் குழு, உணவுக்குழு என பல குழுக்கள்


உண்டு. வாரம் ஒருமுறை, குழுக்களின் வேலைகள் சுழற்சி முறையில் மாறும். உணவுக்குழுவுக்கு மாறும்போது எனக்குச் சந்தோஷமாய் இருக்கும்.

வார்டன் வீட்டுக்கு அருகில்தான் சமையல்கூடம். அக்காவின் ஆஸ்டல் எல்லாம். உணவுக்குழு நாங்கள் போய்தான் சாப்பாடு எடுத்துவருவோம். இரவில் வரும்போது பாதிவழியில் இறக்கிவைத்து, ஆளுக்கு ஒரு பூரி எடுத்து சத்தம் வராமல் இருக்க சாம்பாரில் நனைத்துத் தின்போம்.

''இந்தச் சின்ன காயத்துக்கு அழுது ஆர்ப்பாட்டம் பண்றீங்களே... இதுவே எனக்கு அடிபட்டிருந்தால் நான் அழுதிருக்கவே மாட்டேன்.''

''உங்களுக்கு அடிபட்டிருந்தால், நான்கூடதான் டாக்டர் அழுதிருக்கவே மாட்டேன்.''

– திருச்சி ஆர்.சுதர்ஸன்



இப்போது நான் சத்துணவு பணியாளன். சைக்கிளில் போய் பள்ளியில் இறங்கினேன். என்னைப் பார்த்ததும் பிள்ளைகள் எல்லோரும் குதூகலமாய்க் கத்தினார்கள். 'ஹைய்யா, சோத்து வாத்தியார் வந்துட்டார். சோத்து வாத்தியார் வந்துட்டார்.'

எனக்குச் சிரிப்பாய் வந்தது.

நான் அரிசி, பருப்பு, எண்ணெய் முதலியவற்றை அளந்துகொடுத்துவிட்டு நோட்டில் கணக்கு எழுதினேன். பொய்க் கணக்கு எழுதிவிட்டு இதில் போய் கைவைக்கச் சொல்கிறாளே சாந்தி. இது நியாயமா?

பள்ளிக்கூட மணி அடித்தது. பிள்ளைகள் எல்லாம் தட்டை எடுத்துக்கொண்டு வந்து வரிசையில் நின்றார்கள்.

நான் ஆயாக்கள் இருவரையும் அழைத்தேன். ''நீங்க எவ்வளவு வேண்டுமானாலும் இங்க வயிறார சாப்பிடலாம். ஆனா கொடுக்கிற அரிசி, பருப்பு, புளி, எண்ணெயை மட்டும் மிச்சம் பிடிச்சு மறைச்சு எடுத்துக்கொண்டு போகக் கூடாது. இதுக்கு முந்தி இருந்தவர் எப்படி, எப்படியோ இருந்திருக்கலாம். நீங்களும் அப்படி இப்படி இருந்திருக்கலாம். அதை எல்லாம் நீங்க மறந்திடணும். இனி ஒழுங்கா கை சுத்தமா இருக்கணும். குழந்தைகள் பசித்திருந்தால் பாடத்தைக் கவனிக்க முடியாது. பசியால் அறிவையும் சிந்தனையையும் முடக்குவது கொடுமை. எதிர்கால சமூகத்தையே பாழடிப்பதாகும். இந்தக் கொடுமைக்கு நாம் யாரும் ஆளாகக் கூடாது. புரிஞ்சுதா?''

''புரிஞ்சுது சார்.''

ஒரு மாணவன் பிரம்பைக் கொண்டு வந்து கையில் கொடுத்தான். நான் அதைத் தூக்கி எறிந்துவிட்டு, கரண்டியைப் பிடித்தேன். ○

பண்டைய கால ஓலைச் சுவடிகளால் மட்டுமே உங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

அன்பார்ந்த ஆன்மிக நேயர்களே, ஜோதிடப் பிரியர்களே, வணக்கம்!



பெற்றோர்கள் தங்களது மகன் மகளுக்கு திருமணம் செய்வதற்காக பலஜோதிடர்களை அணுகி ஜாதகத்தின்படி பத்து பொருத்தங்களையும் கணித்து ஆராய்ந்து இவர்களுக்கு திருமணம் செய்யலாம். இவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வார்கள் என்று ஜோதிடர்கள் சொல்ல கேட்டு திருமணமும் நடக்கிறது. ஆனால் திருமணம் ஆன சில மாதங்களிலேயே கணவன் மனைவிக்குள் பிரச்சனை ஏற்பட்டு வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகி பிரிந்து விடுவதும், அல்லது வேறு ஆண், பெண்ணை நாடி செல்வதும், நக்க நேரத்தில் குழந்தை பேறு கிடைக்காமல் போவதும், எல்லாம் இருந்தாலும் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் போவதும் எதனால்?

உயர்ந்த படிப்பு படித்தும் அதிக திறமை இருந்தும் சரியான வேலையோ அல்லது தொழிலோ அமையாமல் போவதுடன், அப்படி அமைந்தாலும் கூட முன்னேற முடியாமலும் அதிக உழைப்பு இருந்தும் உயர் பதவியை அடைய முடியாமலும் தொழில் மற்றும் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுவதும் **எதனால்?** கஷ்டப்பட்டு வாஸ்துபடி வீடு, பிளாட் வாங்கி இனி நிம்மதியாக வாழலாம் என்று எண்ணும் போது அந்த வீட்டிலும் பிரச்சனைகள் உண்டாகி கணவன் மனைவி நிம்மதி இழப்பதும், குழந்தைகளால் பலவித கஷ்டங்கள் ஏற்படுவதும் எதனால்? மேலும் இதே போன்று :

குழந்தைப் பிறப்பு, அவர்களின் வாழ்க்கை, தாய் தந்தை வழி சொத்துக்கள், திருமணம், தாம்பத்தியம் பற்றிய வாழ்க்கை ரகசியங்கள், இரண்டாவது திருமணம், மருத்துவம், பொறியியல், சினிமா, கலை, கணினி, அரசியல், கல்வி போன்றத் துறைகள். கிடைக்க வேண்டிய பணம் (or) சொத்துக்கள், வெளியே சொல்ல இயலா மன போராட்டங்கள், உடன் பிறந்தோர் வாழ்க்கை, உடல் வியாதி வெளிநாட்டு பயணம் இவை அனைத்திலும் இருந்து வரும் பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம் என்ன?

தங்களுக்கு ஜோதிடம் பார்த்து சொன்ன ஜோதிடர்களின் குற்றமா? அதுதான் இல்லை. ஏனெனில் குழந்தை பிறந்த நேரத்தை எவருமே சரியாக குறிப்பதில்லை. ஏனென்றால் ஒரு குழந்தை பிறக்கும் நேரத்தை வைத்துதான் அதன் (வாழ்க்கை) ஜாதகம் கணிக்கப்படுகிறது ஒரு குழந்தை பிறக்கும் நேரம் எப்படி குறிக்க வேண்டுமெனில் தாயிடம் இருந்து சிசுவின் சிரசு வெளிவரும் நேரமே ஆதிநேரமாகும். ஆக அப்படிப்பட்ட தடுமாற்றத்திற்குரிய வாய்ப்புள்ள ஒரு முறையை சற்று ஒதுக்கிவைத்துவிட்டு எதிர்கால பலனைப் பற்றி முனிவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பெருவிரல் ரேகையின் மூலமாக ஆராய்ந்து பழங்கால ஓலைச் சுவடிகளைத் தேடி எதிர்காலம் எப்படியெல்லாம் அமையும் என்பதை சொல்வதுடன் முனிவர்களின் ஞானத்தால் ஓலையில் எழுதப்பட்டிருக்கும் ஜாதகத்தில் உள்ள தோஷங்களுக்கும், முற்பிறவியில் அவரவர் செய்த கர்ம, பாவ புண்ணியங்களை ஆராய்ந்து கோயில் பரிகார வழிப்பாட்டு முறை ஆகமங்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ளது. எனவே இது முற்றிலும் முனிவர்களின் ஞானத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டது என்பதாலும் இதில் அணுவளவும் கணிதம் சம்மந்தப்படாத காரணத்தாலும் முனிவர்களின் வாக்கு தவறுவதில்லை. அப்படிப்பட்ட நாடி ஜோதிடம் கடந்த 15 ஆண்டுகளாக **சென்னையில் மயிலாப்பூர்** மற்றும் **நங்கநல்லூரிலும்** இயங்கி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ அகஸ்திய மகாசிவ நாடிஜோதிட நிலையம்

அருள்ஞான மாமணி, நாடி ஜோதிட களஞ்சியம்

மூ. ராமகிருஷ்ணன்

Cell : 94440 41461

15/6, நாட்டு வீராச்சி தெரு, **மைலாப்பூர்**, சென்னை - 4. ✆ : 2466 0474

36/21, 3வது மெயின் ரோடு, **நங்கநல்லூர்**, சென்னை - 61. ✆ : 22 31 28 23

E-mail : rishipalmleaves@rediffmail.com Visit : www.rishipalmleavesastro.com

''அநீதியை எதிர்ப்பது

''அதிகாலை மூன்று மணிக்கு அந்த ஃபோன் வந்தது. 'மாணிக்குழிவிளைல கோஷ்டி மோதல் நடக்கப் போகுது' இதுதான் அந்த ஃபோன் செய்தி. அடுத்த அரைமணி நேரத்துல நான் அங்க இருந்தேன்.

இருள் அப்பிக்கிடக்கற நேரம். அங்க இருக்கற போலீஸ் அதிகாரிக்கும் என்னைத் தெரியாது. அறிமுகப்படுத்திக்கிட்டு விஷயத்தைக் கேட்டேன். தூரத்துல இருட்டுக்குள்ள நிழல் மாதிரி ரெண்டு கோஷ்டியும் தெரிஞ்சுது.

கோயில் எழுப்புவது தொடர்பான மோதல்னு புரிஞ்சவுடனே, இரண்டு தரப்பையும் கூப்பிட்டுப் பேசினேன். அமைதி தரவேண்டிய கோயிலை எழுப்ப, கலவரத்துல ஈடுபடறது சரியா இருக்குமா? இந்தக் கேள்வி ரெண்டு தரப்பையும் யோசிக்க வைச்சுது. நிர்வாகம் தரும் மாற்றிடத்தை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டு கலைந்து போனார்கள். அதாவது, பத்மநாபபுரம் கோட்டாட்சியராக நான் பொறுப்பேற்ற இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் நடந்த சம்பவம் இது!''

புன்னகை மாறாமல் பேசுகிறார் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜோதி நிர்மலா.

1992-93லிருந்து வருவாய் நீதிமன்ற சிறப்பு துணை ஆட்சியாளர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அதிகாரி... என பல்வேறு பதவிகளில் தன்னுடைய திறமையை நிரூபித்து, தமிழக அரசின் கல்பனா சாவ்லா விருதைப் பெற்றிருக்கிறார் இவர்.

சந்தோஷத்தில் தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்...

''ஒருமுறை அரிசி கடத்திச் சென்ற ஒரு லாரியைத் துரத்தினோம். நாங்கள் துரத்துவதைப் பார்த்த க்ளீனர், அரிசி கொண்டு செல்வது தொடர்பான ஆவணங்களைக் கிழித்து வெளியே வீசினார். பிறகு, வெள்ளைத் துணியைக் கொடி போல அசைத்தார்கள்; ஆனாலும் நிற்கவில்லை. நாங்கள் விரட்டிச்சென்று மடக்கி, லாரியைக் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். காவலர்கள் மெல்லியகுரலில், 'இந்த லாரி முக்கியப்புள்ளிக்குச் சொந்தமானது; விபரீதமாகிவிடும்' என்று எச்சரித்தனர். ஆனாலும் நாங்கள் பின்வாங்கவில்லை.

இதேபோலத்தான் மணல் லாரிகள் விஷயத்திலும். பகலின் மடியை அறுத்துப் பால் கறப்பது போன்ற கொடூரம் இது. அதனால், இந்த மணல் கடத்தல்காரர்கள் விஷயத்திலும் தயவுதாட்சண்யமற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

எல்லாரும் என்னைக் கேட்கிறார்கள். 'உங்களுக்குப் பயமாயில்லையா?' என்று. தவறோ, அநீதியோ செய்பவர்கள்தான் அஞ்சவேண்டும். அநீதியையும், தவறையும் செய்பவர்களைப் பார்த்து, நாம் ஏன் பயப்பட வேண்டும்? தவிர, அநீதியையும், அநியாயத்தையும் எதிர்ப்பது என் இயல்பு. என்னுடைய பணியும் அதை ஒட்டிய

என் இயல்பு!''

-கலெக்டர் ஜோதிநிர்மலா பேட்டி

தாகவே அமைந்துவிட்டது. அவ்வளவு தான்'' என்றவர் அன்றாடப் பணி குறித்தும் பேசினார்.

''மக்களின் சாதாரண விஷயங்களுக்கும் அதே கவனத்தைத்தான் கொடுக்கிறேன். ஒரு முறை, தொலைபேசியில் ஓர் ஆசிரியை பேசினார். குறிப்பிட்ட ஒரு பேருந்து நிறுத்தத்தைச் சொல்லி, அங்கே பேருந்து கள் நிற்பதில்லை என்று வருத்தப்பட்டார். அவர் சொன்ன குறை தீர்க்கப்பட்டது. செய்தி அதுவல்ல.

தங்கள் பிரச்னையைச் சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஊட்டுவதுதான் மிகமிகப் பெரியது'' என்று பேசியவர் கடைசியில் சொன்ன விஷயம் நெகிழ வைத்தது.

''இதோ... இந்தச் சிறப்பு விருது வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில், இதைப் பார்த்து மகிழ இன்னுமிருவர் இல்லை. என்னுடைய வாகன ஓட்டுநர் பத்மகுமார், அலுவலக உதவியாளர் செல்லப்பன் ஆகிய இருவரும், நான் சென்ற இடங்களில் எல்லாம் எனக்குப் பாதுகாப்பு வளையமாய் நின்று பணிபுரிந்தார்கள். இந்த இருவருமே இன்று இல்லை'' என்று சொல்லும்போதே குரலில் துக்கம் வழிகிறது.

திருமணமாகாமல் முதிர்கன்னியராக இருக்கும் பெண்களுக்கான குறைந்தபட்ச உதவித் தொகையாக மாதம் ரூ.400 வழங்கப்படப் போகிறது. இதற்கான யோசனையும் இவருடையதுதான். ஆட்சியாளராக இருப்பது மட்டுமல்ல. தன்னுடைய மனிதாபிமான அணுகுமுறையாலும் கல்பனா சாவ்லா விருதுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் கன்னியாகுமரி கலெக்டர்.

- த.இ.தாகூர்



டிஜிட்டல் கேன்டீன்

மாடிக் குடியிருப்பு. ரெண்டு பெட்ரூம், எலிப்பொறி மாதிரி சமையலறை, ஹாலில் சோஃபா, நாலு நாற்காலி, டைனிங் டேபிள்... என்று நாலாவது மாடியில் எண்ணூறு சதுரடி ஃப்ளாட்டில் வசிக்கும் பலருக்கும், புத்தகம் படிக்க ஆசையிருந்தாலும் வாங்கிச் சேர்த்து வைக்க இடம் இருக்காது. கவலையை விடுங்க, டெக்னாலஜி எதுக்கு இருக்கு? எலக்ட்ரானிக் மசி வந்தாச்சு.

இந்த ஈ-மசியின் அடிப்படை சின்னச் சின்ன கோளங்கள். ஒவ்வொன்றின் விட்டமும் நம் தலைமுடியின் கனத்தைவிடச் சிறியது. ஒவ்வொரு கோளத்துக்கு உள்ளேயும், கறுப்பும் வெளுப்புமாக, கடுகைவிடச் சிறிய மசித் துணுக்குகள் மிதந்தபடி இருக்கும். இப்படி லட்சக்கணக்கான கோளங்களை, இரண்டு மெல்லிய பிளாஸ்டிக் படலங்களின் (ஃபிலிம்) நடுவே வைத்துவிடலாம். மிகமிகக் குறைவான மின்சக்தியை அவற்றில் செலுத்தவேண்டும். கோளத்தில் பாசிடிவ் சார்ஜ் மின்சாரம் பாயும்போது, வெள்ளை மசித் துணுக்கு முன்னணிக்கு வரும். அது நெகட்டிவாக இருந்தால், கறுப்புத் துணுக்கு முன்னுக்கு வரும். இந்த எளிய தத்துவத்தையும், எலக்ட்ரானிக் மசி கோளங்களையும் கொண்டு புத்தகம் உருவாகிவிடும். எப்படி?

நீங்கள் படிக்கிற 'கல்கி'யின் இந்தப் பக்கத்துக்கு, எழுத்தும் படமுமாக ஒரு தனி வடிவம் உண்டு. இதே பத்திரிகையின் அடுத்த பக்கத்துக்குக் கொஞ்சம் மாறுபட்ட இன்னொரு வடிவம் இருக்கிறது. கறுப்பு வெளுப்பு டிஜிட்டல் மசித் துணுக்குகளை, மின்சக்திக்கு உட்படுத்தி, இந்த இரண்டு பக்கங்களையும் வெவ்வேறு வடிவங்களாகச் சேமித்துவிடலாம். மசித் துணுக்குகள் இணைந்து உருவாக்கிய வடிவங்களை, இதற்காகவே தயாரிக்கப்பட்ட வாசிக்கும் கருவி (ரீடர்) அடையாளம் கண்டு, படிக்க வசதியான பத்திரிகைப் பக்கமாக மின் திரையில் பரப்பும்.

இரண்டு படலங்களுக்கு நடுவே எலக்ட்ரானிக் மசிக் கோளங்கள் உருவாக்கும் பக்கங்கள் இரண்டோடு முடிவதில்லை. இந்த வார கல்கி; போன வாரம் வந்தது; கடந்த பத்து ஆண்டு மொத்த இதழ்கள்



அய்யய்யோ... இந்த அட்டைக்குள்ள நம்மையும் போட்டு அடச்சிட்டா என்ன பண்ணறது?

ஓர் அட்டை; ஓராயிரம் புத்தகம்



இப்படிப் பலவற்றையும் ஒரு சிறிய பரப்பில் சேமித்துக்கொள்ளலாம். இதையே புத்தகக் கணக்காகப் போட்டால்? ஆயிரம் 'தலகாணி சைஸ்' வரும்.

எலக்ட்ரானிக் இங்க் வடிவங்களாகச் சேகரித்த புத்தகங்களைப் படிக்க மின்சக்தி செலவும் குறைவு. மின்திரையை ஒரு முறை மட்டும் ஒளியூட்ட இத்தனூண்டு பாட்டரி சார்ஜ் வேண்டும். அதை வைத்து ஏழாயிரம் பக்கங்கள் படித்து விடலாம். நல்ல பகல் நேரத்திலும் பளிச்சென்று தெரியும் ஒளித்திரை என்பதால், திரையைப் பெரிதாக்கி, நாலு தெரு சந்திக்கும் இடத்தில் நிறுத்தி, முழுப் பத்திரிகையையும் பலர் படிக்க வழி செய்யலாம்.

இணைய நூலகத்தில், பதினைந்து லட்சம் புத்தகங்களை இண்டர்நெட் லைப்ரரியாக டிஜிட்டைஸ் செய்துவைத்து, உலகம் முழுக்க இலவசமாகக் கிடைக்க அமெரிக்காவின் கார்னகி மெல்லன் யூனிவர்சிட்டி வழி செய்திருக்கிறது. ஆப்டிகல் கேரக்டர் ரெகக்னிஷன் (ஓ.சி.ஆர்.) என்ற, பரவலாகப் பயனாகும் டெக்னாலஜி இதற்குப் பின்னே உள்ளது. புத்தகப் பக்கங்களை ஸ்கேனர் கொண்டு வருடிக் கிடைத்த வடிவங்களில் இருந்து, என்ன எழுத்து எங்கே என்று கண்டுபிடிக்கும் மென்பொருள் வழிமுறை இது.

பழைய புத்தகங்களில் அச்சு அங்கங்கே அழிந்துபோயிருந்தால் ஓ.சி.ஆர். தடுமாறும். ஆனால், மனித மூளை எழுத்தைச் சரியாக ஊகித்துவிடும். பல்கலைக்கழக இண்டர்நெட் நூலக ஓ.சி.ஆருக்கு, உலகம் முழுக்க நம் போன்றவர்கள் நமக்கே தெரியாமல் உதவி செய்கிறோம்.

இண்டர்நெட்டில் ஈ.மெயில் மற்றும் அடையாளத்தை நிரூபிக்கவேண்டிய இணைய தளங்களில் நுழையும்போது, கோணல் மாணலான எழுத்துக்களில் ஒரு வார்த்தையைத் திரையில் சதுரம் போட்டுக் காட்டுவார்கள். அது என்ன என்று கம்ப்யூட்டர் கீ போர்டில் எழுத்தெழுத்தாக அடிக்க வேண்டியிருக்கும். ஓ.சி.ஆர். கண்டுபிடிக்கத் தடுமாறிய பல லட்சம் அச்சு வடிவங்கள், இப்படி சதுரமாக விரிய, நாம் தினசரி சரியான எழுத்துக்களைக் கண்டுபிடிக்கிறோம். இதெல்லாம் இணைய நூலகத்தில் பதிவாகி ஓ.சி.ஆருக்கு உதவும்.

-இரா.முருகன்

தலைநகர் பக்கம்



* அமெர்த்தியா சென்



* சஞ்சய் பாரு

மத்திய அமைச்சர் கபில்சிபல், தொழிலால் ஒரு சட்டநிபுணர். தற்போது கவிஞராகப் புது அவதாரம் எடுத்திருக்கிறார். அதுவும் அவர் எழுதி இருப்பவை எல்லாம் செல்ஃபோன் கவிதைகள். அதென்ன செல்ஃபோன் கவிதை? எப்போதெல்லாம் கவிதை எழுதும் மூடு வருகிறதோ, அப்போதெல்லாம், செல்ஃபோனில் கவிதைகளை எழுதிவிடுகிறார். திருப்திகரமாக வரும்வரை கவிதையைத் திருப்பித் திருப்பி எழுதுவதற்கு, செல்ஃபோன் ரொம்ப வசதி என்பது அமைச்சரது அனுபவம்.

கவிதைகளை அவ்வப்போது நெருங்கிய நண்பர்களுக்கு அனுப்பிவைப்பது வழக்கமாம். கவிதையைப் படித்த நண்பர்கள் சிலர் பாராட்டியதுடன் புத்தகமாக வெளியிட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்க, அதுவும் அண்மையில் நடந்துவிட்டது. கவிதைத் தொகுப்பின் தலைப்பு : 'நானே சாட்சி'. இதில் பணவீக்கம் முதல், பணம் வாங்கிக்கொண்டு எம்.பி.க்கள் அணி மாறி வோட்டுப்போட்டது வரை கவிதைகளாக இடம் பெற்றுள்ளன.

அண்மையில் லோக்சபா சபாநாயகர் சாட்டர்ஜி, நோபெல் பரிசுபெற்ற பொருளாதார மேதை அமெர்த்தியா சென்னின் சொற்பொழிவு ஒன்றுக்கு பாராளுமன்ற மைய மண்டபத்தில், ஏற்பாடு செய்திருந்தார். அது குளிர்காலக் கூட்டத் தொடர் துவங்கும் நாள். ஆனால், குளிர் காலக் கூட்டத் தொடர் துவங்கும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டுவிட்டது. சபாநாயகருக்கு சொற்பொழிவை கேன்சல் செய்யவும் மனசில்லை. அதேசமயம் பாராளுமன்றம் கூடாத காலத்தில் சொற்பொழிவை நடத்தினால் மையமண்டபம் வெறிச்சோடிக் கிடக்குமே என்னும் கவலை வேறு. பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வயலார் ரவியிடம், தம் கவலையைப் பகிர்ந்துகொண்டார் சபாநாயகர். ''கவலைப்படாதீர்கள்; கூட்டம் வரவழைக்க நானாச்சு'' என்றார் அமைச்சர்.

கூட்டம் வர, அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? காங்கிரஸ் எம்.பி.க்கள் அனைவருக்கும், 'சோனியாகாந்தி காங்கிரஸ் எம்.பி.க்களைச் சந்திக்கவிருக்கிறார். உடனே



* கபில்சிபல்

டெல்லி வரவும்' என்று தகவல் அனுப்பிவிட்டார். எல்லா காங்கிரஸ் எம்.பி.க்களும் அடித்துப் பிடித்துக் கொண்டு டெல்லிக்கு விரைந்தார்கள். அவர்களை அப்படியே மடக்கி, அமெர்த்தியாசென் சொற்பொழிவுக்கு வரவழைத்துவிட்டார்.

பிரதமரின் முக்கிய உரைகளைத் தயார் செய்யும் பணியைச் செய்துவந்தவர், பிரதமரின் மீடியா அட்வைசரான சஞ்சய் பாரு. அண்மையில் அவர் வெளிநாட்டுக் கல்விநிறுவனம் ஒன்றில், பெரிய பொறுப் பினை ஏற்பதற்காகச் சென்றுவிட்டார். புதிய ஆலோசகர் வந்தாலும், பிரதமரின் மிக முக்கிய உரைகளை எழுதும் பணியை, சஞ்சய் பாருவே தொடர்ந்து செய்வார் என்று பிரதமரின் வட்டாரம் மூலம் தெரிய வருகிறது.



* மேனகா காந்தி

செல்ஃபோனில் கவிதை



மேனகா காந்தியும், சர்ச்சையும் உடன் பிறந்தவை போலும். அண்மையில் தன் மகன் வருண்காந்தியின் நடவடிக்கை காரணமாக, மேனகா ஒரு சர்ச்சைக்கு உள்ளானார். மேனகா காந்தியின் பிலிபெட் தொகுதிக்கு, தம் நண்பர்களுடன் சென்ற வருண், அங்கே ஒரு காங்கிரஸ் அனுதாபி யிடம், ''எப்படி என் அம்மாவின் தொகுதி யில், தைரியமாக காங்கிரஸ் கொடியை நீ பறக்கவிடலாம்?'' என்று கேட்க, அது வாக்குவாதமாகி, வருணின் நண்பர்கள் அந்த காங்கிரஸ்காரரை அடித்துவிட்டார் கள் என்பது புகார். மேனகாகாந்தி தரப்பில் அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்று மறுக்கிறார்கள். அரசியலல இதெல் லாம் சகஜமப்பா!

- கௌதம் ராம்

டேப்லட்ஸ் ஜாக்கிரதை!





அன்றைய நாளிதழுடன் ஜிம்மைப் பற்றிய விளம்பர நோட்டீஸ் ஒன்று வந் திருந்தது. ஜிம்மைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் அது சந்தோஷத் தைக் கொடுத்தது ஹரிக்கு. வீட்டிலிருந்து அதிக தொலைவில் ஒன்றும் இல்லை.

உள்ளே நுழைந்ததுமே ஏக வரவேற்பு. இது வயிறு குறைய; இது இடுப்பு டயர் குறைய.; இதுல உங்களுக்கு பாடி ஷேப் கிடைக்கும் என்று கோச் ஒவ்வொரு உடற்பயிற்சி சாதனத்தின் மகிமையையும் சொன்னார்.

ஹரிக்கு இப்போதே 2 கிலோ குறைந்தாற்போலிருந்தது. இதைத்தவிர ஏரோஃபிக்ஸ் உண்டு. ''வாரம் ஒரு தடவை ஸ்பெஷல் மூலிகை எண் ணெய்ல மஸாஜ் உண்டு. அதுல நல்ல எபெக்ட் கிடைக்கும்'' என்றார். ஆனால், மாதத் தொகையைக் கேட்ட வுடன் தலையைச் சுற்றியது.

''நான் வீட்டுக்குப் போய் ஃபோன் பண்றேங்க'' என்று சொன்னான். அவரும் பெயர், முகவரி வாங்கிக்கொண்டு அனுப்பிவைத்தார்.

ஹரி வந்து விஷயத்தைச் சொன்னான். ''அட... ஜோடி ஆஃபர் சலுகையில இருக்குங்க. நோட்டீஸ் பார்த்தீங்களா...'' அருணாவும் உடனே தொற்றிக்கொண் டாள். ''நீங்க காலைல போங்க. நான் சாயங் காலம் போய்க்கறேன். ஜோடி ஆஃபரை எடுத்துக்கலாம்''

''என்ன விளையாடறயா? பீஸ் எவ் வளவுன்னு தெரிஞ்சுதான் பேசறியா? ஹோம் லோன், ஸ்கூல் பீஸ் எல்லாம் கழுத்தைப் பிடிக்குது. என்னால முடியாது'' என்றபடி ஆஃபீஸுக்குக் கிளம்பினான்.

மாலை திரும்பியவன், ''அருணா, இன்னைக்கு ஒரு முக்கியமான மீட்டிங்ல இருந்தப்போ ஜிம்ல இருந்து கால் வந்தது. ஜோடி ஆஃபருக்கு இன்னும் ரெண்டு நாள்தான் சலுகையாம். அப்புறம் அதை விட இரு மடங்கு அதிகமா கட்டணு மாம்.''

''நாளைக்கே ஜாயின் பண்ணிடலாங்க''

''சரி, ஆனா ஒழுங்காப் போகணும்.

சும்மா பணத்தைக் கட்டிப்புட்டு கை வலிக்குது, கால் வலிக்குதுனு மட்டம் போடக்கூடாது.''

ஸ்வேதா வாயைப் பொத்திக் கொண்டு 'களுக்'கென்றாள். 'போதும்... போதும் உங்களுக்கெல்லாம் நான் கிள்ளுக்கீரை யாய்ப் போய்ட்டேன். எல்லாத்துக்கும் காரணம் இந்தக் கொழுப்புதான். வரேன்... வரேன்... உன்ன உருத்தெரியாம கரைக் கறேன் பாரு' என்று நினைத்துக்கொண்டு மறுநாள் ஜம்மென்று ஜிம்முக்குக் கிளம்பத் தயாரானாள்.

இந்த உடல் எடை திடீரென ஓரிரு நாளில் ஏற்படும் மாற்றத்தினால் அல்ல. பதுங்கிப் பாயும் புலி போல, மாதக்கணக்கில் வருடக்கணக்கில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டு சிறிது சிறிதாகத்தான் எடை அதிகரிக்கிறது. ஒரே நாளில் பத்து கிலோவோ இருபது கிலோவோ ஏறி விடுவதில்லை.



நாம்தான் உணரத் தவறிவிடுகிறோம். அல்லது உணர்ந்தாலும் நம்மை நாமே ஏமாற்றிவிட்டு பிறகு புலம்பித் தவிக்கி றோம். ஆனால், உள்ளதை உள்ளபடியே அவ்வப்போது உணர்த்திக்கொண்டிருக்கும் நம் உண்மை நண்பன் யார் தெரியுமா? நம் டிரெஸ்தான். போன வருடம் வாங்கிய ஜீன்ஸ் இப்போது போடமுடியாது. ஆண் கள் எளிதில் கண்டுபிடித்துக் கொள்ள லாம். காரணம், பருமன்தான்.

உடற்பயிற்சியின்றி வெறும் உணவுக் கட்டுப்பாடு பலன் தராது. அதேபோல உணவுக் கட்டுப்பாடின்றி வெறும் உடற்ப யிற்சியும் பலனளிக்காது. தீவிரமாக உடல் எடை குறைக்க எண்ணுவோர், உடற் பயிற்சியுடன் அரிசியைக் குறைத்து காய்

லக்ஷ்மி மோகன்

கறி, பழங்கள், முளைகட்டிய தானி யங்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வந்தால், உடல் எடை குறைவது உறுதி.

அதேசமயம் எடை குறைக்க மார்க்கெட்டில் மாத்திரை கள், மூலிகை மருந்துகள் கூவிக்கூவி விற்பனை செய் கிறார்கள். அவற்றின் வலை யில் விழுந்து விட வேண் டாம். அவை சிறுநீரகத்தில் மிகப்பெரிய பாதிப்பை ஏற் படுத்திவிடும். ✦



"கல்யாணம் முடிஞ்சு, வெளியே போகும்போது, 'தேங்காய் பை' தர்றாங்களே, ஏன்?"

"அடுத்தவேளை சாப்பாட்டுக்கும், அங்கே 'தேங்கா'தீங்கன்னு சிம்பாலிக்கா சொல்லத்தான்!"

- வெ. சீதாராமன்

"தலைவர் மாற்றுத்திறன் உள்ளவராமே?"


"ஆமா, புறங்கையாலும் லஞ்சம் வாங்குவார்."

- அம்பை தேவா

"அமைச்சரே, மான் வேட்டைக்குச் செல்வோமா?"

"கஜானா காலியாக உள்ளது. முதலில் லோன் வேட்டைக்குச் செல்வோம் மன்னா!"

- வீ. விஷ்ணுகுமார்



மன்னனின் 'லோன்' வேட்டை!



"தள்ளுபடி விலையில கார் வாங்கியது தப்பாப் போச்சு."

"ஏன்..?"


"செல்ஃப் ஸ்டார்ட் ஆகாம 'தள்ளும் படியா' ஆச்சு...!"

- வாழை வேலவன்

"அந்த ஓட்டல்ல ஒருத்தர் எப்பவுமே போதைல இருக்காரே யார் அவர்?"

"அவர்தான் சரக்குமாஸ்டர்."

- வி. சாரதி டேச்சு






"கனவுல தினமும் என் மனைவிதான் வருவா..."

"அப்ப உங்களுக்குத் தூங்கும்போது கூட நிம்மதி கிடையாதுன்னு சொல்லுங்க..."

- வி. சாரதி டேச்சு.





"அந்த இன்ஸ்பெக்டர், கபாலிகிட்ட ராஜினாமா கடிதம் கொடுத்தாராமே..?"

"அவனோட அட்மிஷன் சிபாரிசை அவரால 'ஒர்க் அவுட்' பண்ணமுடியாமப் போச்சாம்!"

- பிஜிபி. இசக்கி.



கால்நடை

ஸ்ரீ பகவான் மகாவீர் கௌசாலா- தென்னிந்தியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய கோசாலை. கோவை - பொள்ளாச்சி சாலை மயிலேறிப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள இந்தக் கோசாலையை 'சிறந்த கோசாலை' என திருப்பதி தேவஸ்தானம் பாராட்டியுள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு முப்பத்தைந்து மாடுகளுடன் துவங்கப்பட்ட கோசாலையில், இன்று சுமார் எண்ணூறு கால்நடைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இருபத்தைந்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது, கால்நடைகளுக்கான இந்தக் கருணை இல்லம். காற்றோட்டமான, கற்றுச்சுவருடன் கூடிய ஓட்டுவில்லைக் கூடங்களில், கால்நடைகள் 'ஹாய்' ஆக இருக்கின்றன. கோசாலை பராமரிப்புக்கென முப்பதுக்கும் மேற்பட்ட கூலியாட்கள் வேலை செய்கின்றனர்.

“மாடுகள்தானே என்று அலட்சியம் காட்டுவதில்லை. வீட்டிலுள்ள மனிதர்களுக்கு உணவு பரிமாறுவதுபோல, கால்நடைகளின் பசியறிந்து, அந்தந்த நேரத்துத் தீவனங்களை அளித்து வருகிறோம். வேலைதானே என்றோ ஏதோ கடனே என்றோ நாங்கள் செய்வதில்லை. இங்கு வந்து சேர்ந்திருக்கும் பசுக்கள், கன்றுகள், காளைகள், எருமைகள்... அனைத்தையும் எங்கள் குடும்பத்து உறுப்பினர்களாகவே பாவித்துப் பணிவிடை செய்து வருகிறோம்” என்கிறார் அதன் பணியாளர்களில் ஒருவர்.



"எந்த உயிரினமும் இயற்கையாக மரணமடையாமல், செயற்கையாகக் கொல்லப்படுவது மனிதநேயமற்ற செயல். பசுக்கள் உட்பட கால்நடைகளை, அண்டை மாநிலங்களுக்கு இறைச்சிக்கென கொண்டுசெல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த உருவாக்கப்பட்டதே, கோயமுத்தூர் பிராணிகள் நல அமைப்பு. மிருகவதைத் தடுப்புச் சட்டப்படி, ஒரு வாகனத்தில் ஆறு மாடுகளுக்கு மேல் ஏற்றக்கூடாது. ஆனால், ஒரு லாரியில், முப்பத்தைந்து மாடுகளுக்கு மேல் கயிறுகளால் பிணைக்கப்பட்டு, கொஞ்சம்கூட அசையவோ நகரவோ இயலாமல் கொண்டு செல்கிறார்கள். சிலசமயம் இரண்டு நாட்கள் தீவனமோ, தண்ணீரோ தரப்படாமல் பயணம் தொடரும். சினை மாடுகள், இளங்கன்றுகள்கூட மாமிசத்துக்காகக் கடத்தப்படுகின்றன. 'அடிமாடுகளாகக் கடத்தப்படும் கால்நடைகளைக் காப்போம்' என்கிற நோக்கத்தில் உருவானதே 'ஸ்ரீ பகவான் மகாவீர் கௌசாலா'

கருணை இல்லம்!

என்கிறார் இதன் தலைவர் மகாவீர் பி.ஜெயின்.

"அடிமாடுகளாகக் கடத்தப்படும் கால்நடைகள், மாவட்ட நிர்வாகத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டு, மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதிபெற்று இங்கு அடைக்கலமாக வந்து சேர்கின்றன. இங்கு வந்துசேரும் கால்நடைகள், மனிதர்களைப் போலவே மதிக்கப்படுகின்றன. கன்றுகள், பசுக்கள், காளைகள், எருதுகள் என 803 ஜீவன்கள் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பசுக்களின் மூலமாக தினசரி முப்பது லிட்டர் பால் பெறப்படுகிறது. அதனை அருகில் இருக்கும் அனாதை இல்லம் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு இலவசமாக வழங்கிவருகிறோம். கால்நடை மருத்துவர்கள் கண்காணிப்பில், இங்கு வாழும் கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்கப்படுகிறது. இயற்கை மரணம் எய்தும் கால்நடைகளை, துக்கம் அனுஷ்டித்து நல்லடக்கம் செய்து வருகிறோம். கோசாலையின் ஓர் ஆண்டு பராமரிப்புச் செலவு மட்டும் எழுபது லட்ச ரூபாய். முற்றிலும் நன்கொடை வாயிலாகவே நடத்தி வருகிறோம். ஒரு ரூபாய் நன்கொடை அளித்தாலும், அன்புடன் பெற்றுக்கொள்கிறோம்'' என்கிறார் இதன் செயலாளர் கௌதம்சந்த் வி.ஸ்ரீஸ்ரீமல்.

✱ வி.ஸ்ரீஸ்ரீமல்




செய்தியும், சித்திரங்களும் : ஸ்ரீரங்கம் திருநாவு

"யார் அந்த

உலகிலேயே உசத்தியான பொக்கிஷம் வரலாற்றுப் பதிவுகள்தான். ஆனால், அவை காலச்சக்கரத்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் மடிந்துவிட்டன. அவற்றைத் தோண்டிஎடுப்பது என்பது கூடுதல் உழைப்பைக் கோருகின்ற வேலை. அந்தப் பணியை ஆரம்பித்திருக்கிறார் பத்திரிகையாளர் ப.திருமா வேலன்.

மரியாதை ராமன் கதை 1


புத்தகத்தின் பெயர் : 'இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' எந்தக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய தலைப்பு. 1933ல் பெரியார் ஈ.வெ.ரா. தம்முடைய குடியரசு இதழில் எழுதிய தலையங்கத்தைப் பார்த்து ஆங்கில அரசாங்கம் மிரண்டுபோனது. 'யார் அந்த கம்யூனிஸ்ட்?' என்று கேட்டது. இத்தனைக்கும் அப்போது பொதுவுடைமை இயக்கங்கள், இந்தியாவில் அத்தனை பிரபலமாக இருக்கவில்லை.



அவர்களை உறுத்தியது பெரியார் பயன்படுத்திய வார்த்தைகள். **'தேவைக்கு அதிகமாக ஆட்களை நியமித்துக்கொண்டு, அவர்களுக்குச் சம்பளத்தை வாரி வழங்கும் அரசாங்கத்தைக் கூட்டுக் கொள்ளை ஸ்தாபனம் என்றுதான் அழைக்க முடியும்'** என்று எழுதியிருந்தார் பெரியார். அதைத் தொடர்ந்து அவர்மீது பாய்ந்த ராஜதுரோக வழக்கு, அதை பெரியார் எதிர்கொண்ட முறை, சிறை வாசம் என்று அத்தனை விஷயங்களையும் நுணுக்கமாகப் பதிவுசெய்திருக்கிறது இந்த நூல்.

கைது செய்யப்பட்டது அற்பக் காரணத்துக்காக என்பதை நினைத்து வருத்தப்படுவதாகக் கூறிய பெரியார், 'குடியரசின் பழைய இதழ்களைப் புரட்டிப் பார்த்தால், என்னை வருடக்கணக்காகத் தண்டிக்கக்கூடியதும், நாடு கடத்தக் கூடியதுமான கருத்துகள் நூற்றுக்கணக்கில் தென்படலாம். ஆனால், அவர்கள் அவற்றையெல்லாம் கவனித்ததாகத் தெரியவில்லை. நான் சிறை சென்றதை, பாமர மக்கள் வேண்டுமானால் சிலாகிக்கலாம். ஆனால், அறிவுசார்ந்து சிந்திப்பவர்களுக்கு வெகுசாதாரண விஷயம்' என்று வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

கம்யூனிஸ்ட்?"



பெரியாரின் போராட்டக் குணத்தை வெளிப்படுத்த, செய்யப்பட்ட முயற்சிகளுள் இந்தப் புத்தகம் பிரதானமானது.

மரியாதை ராமன் கதை 2

புத்தகத்தின் பெயர் : 'பெரியார் ராமசாமியும் காந்தி ராமசாமியும்'. விபூதி பூசிய பெரியார் என்ற பட்டப்பெயர் கொண்டவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். சுதந்திரத்துக்குப் பிறகு தமிழ்நாட்டை ஆண்ட முதல்வர்களுள் முக்கியமானவர். ஆட்சி செய்தது வெறும் இரண்டே ஆண்டுகள். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அமல்படுத்தியது; மடங்கள், ஆதீனங்கள், கோயில்களின் சொத்துக்களைச் சிலர் மட்டுமே சுரண்டிவருவதைத் தடுக்க சட்டம் கொண்டுவந்தது; ஜமீன்தார் இனாம் முறையை ஒழித்தது; ஊழலுக்கு எதிராகக் கடும்நடவடிக்கை எடுத்தது... தொடர்ந்த இவரது சாதனைகள்.

ஓமந்தூராரின் புரட்சிமுகம் காங்கிரஸ் கட்சிக்குள் அதிர்வுகளை ஏற்படுத்தியது; எதிர்க்குரல் எழுந்தது. அப்போது திராவிட நாடு இதழில் அறிஞர் அண்ணா, ஓமந்தூராருக்கு ஆதரவாக தலையங்கக் கட்டுரை ஒன்றை எழுதினார். கட்டுரையின் தலைப்பு, காந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும். இதற்குத் தடைவிதிக்கப்பட்டது. பிறகு அண்ணா அதைத் துணிச்சலுடன் எதிர்த்துப் போராடி வாபஸ் பெறவைத்தார்.

ஓமந்தூரார் ஆட்சி நடத்தியவிதம், துருத்திக்கொண்டு எழுந்த எதிர்ப்புகளை லாகவமாக எதிர்கொண்ட நுணுக்கம் உள்ளிட்ட சிலிர்க்கவைக்கும் செய்திகளைத் தீவிர மெனக்கெடலுடன் தொகுத்திருக்கிறார் திருமா வேலன்.

திராவிட இயக்க வரலாற்றைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு முதல் புத்தகமும், காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த புரட்சியாளரைப் புரிந்துகொள்ள இரண்டாவது புத்தகமும் நம்பிக்கைக்குரிய தோழர்கள்.

வெளியீடு :

தென்திசை, புதிய எண் : 52, தென் மேற்கு போக் ரோடு (கிருஷ்ணர் கோயில் அருகில்), தி. நகர், சென்னை - 17.

ஆர்.முத்துக்குமார்

கர்மவினை போக்கும் அருட்கோலம்!

சிவ வடிவங்களில் மிகப் பிரபலமானது பிட்சாடனர் வடிவம். சிவனடியார்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட வடிவம் அது. இந்த வடிவத்தில் பெரிதும் ஈடுபட்டுப் பாடிய பாடல்கள் தேவார திருவாசகங்களில் ஏராளம்.

தாருகாவனத்து ரிஷிகளின் ஆணவத்தைப் பறிக்க, சிவபெருமான் தாங்கிய வடிவமே பிட்சாடன வடிவம். கண்டோர் மனம்கவரும் தோற்றப் பொலிவுள்ள இளைஞன் வடிவில், கைகளில் சூலம், கபாலம் (மண்டை ஓடு) உடுக்கை... ஆகியவை ஏந்தி, திகம்பரனாய், ஒரு பிச்சைக்காரன் உருவில் எழுந்தருளினாராம் சிவபெருமான். திருமால் மோகினி ரூபத்தில் உடன் வந்தாராம். ரிஷிகளின் தவச்சாலையில் மோகினியும், ரிஷிபத்தினிகள் வாழும் பர்ணசாலைகளின் வழியே பிட்சாடனமூர்த்தியும் எழுந்தருள, ரிஷிகளின் தவம் கலைந்தது மட்டுமின்றி, ரிஷிபத்தினிகளின் மனமும் குலைந்ததாம். பக்தியினால் செலுத்தப்படாத தவம் பயனற்றுப்போகும் எனும் தத்துவம் விளங்கியதும் ரிஷிகளின் ஆணவம் அழிந்ததாம்.

அறிவுச்செருக்கையும் (Intellectual arrogance) ஆணவத் திமிரையும் (Ego) பறிக்க வந்த இந்த பிட்சாடனக் கோலத்தில் ஈடுபட்டு அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார்... ஆகியோர் பல பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். ஆன்மாக்களின் கர்மவினைகளைப் பிச்சையாக இரந்து ஏற்று அழிக்கும் அருட்கோலமாக இதனை அடியவர்கள் கண்டிருக்கிறார்கள்.

முறித்தது ஒரு தோல் உடுத்தி, முண்டம் சார்த்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றம் தோறும்
தெறித்தது ஒரு வீணையராய் செல்வார்...''

என்று அப்பர் சுவாமிகள் பிட்சாடனக் கோலத்தை வர்ணிக்கிறார். சுந்தரரோ தமக்கே உரிய நிந்தாஸ்துதியில்

''மலைமகள்.. உலகுஉய்ய வைத்த
காரிரும் பொழில் கச்சிமூதூர்
காமகோட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்ன?''


என்று கேட்கிறார்.

''உன் மனையாட்டி, காஞ்சிபுரத்தில் காமகோட்டத்தில் அமர்ந்து உலகுக்கு எல்லாம் தர்மம் செய்கிறாள். நீர் ஏன் ஊரில் பிச்சை எடுத்துக்கொண்டு திரிகிறீர்?''

என்கிறார். நியாயமான கேள்வி!

காண்போர் கண்களையும் மனத்தையும் கவரும் வடிவம் அல்லவா பிட்சாடன வடிவம்!

புராணக் கதையையும், மூவர் தேவாரங்களில் கண்ட வர்ணனையையும் ஆதாரமாக வைத்து, சிவாலயங்களில் பிட்சாடன மூர்த்திகள் செப்புப் படிமங்களாகவும் கற்சிலைகளாகவும் எழுந்தருளுவிக்கப் பட்டன. தமிழ்நாட்டில் உள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் பிட்சாடனர் உருவங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் கலையழகுடன் மிளிர்கின்றன.



ஆடை இல்லாத நிர்வாணக் கோலம்; நெடிதுயர்ந்த திருமேனி. அநாவசியமான சதைப்பற்று சிறிதும் இல்லாத உடல்வாகு! கட்டிளங்காளைப் பருவத்தில் கருத்தைக் கவரும் வடிவழகு. நான்கு திருக்கரங்கள். வலது மேல் கரம் உடுக்கையை ஒலித்த வண்ணம் விளங்க, இடது மேல்கரம் நீண்ட சூலத்தைத் தோளில் சாய்த்துப் பிடித்த பாவனையில் இருக்கிறது. இடது கீழ்க்கரம் பிச்சை ஏற்கும் கபாலத்தை ஏந்தி முன்நீட்டிய வண்ணம் இருக்க, வலது கீழ்க்கரத்தில் பிடித்திருக்கும் புல்லின் இதழ்களை, உடன் வரும் மான் ஒன்று எம்பிப் பறிக்கிறது! அருகில் குட்டையாய், பூதகணம் ஒன்று தன் தலைமேல் பெரிய கூடையைச் சுமந்துகொண்டு நிற்கிறது!

பாதங்களில் பாதக் குறடு. கால்களில் சிலம்பு. வலது முழந்தாளில் வீரகண்டா மணி. இடுப்பில் ஒரு பாம்பை அரைஞாண்கயிறாகச் சுற்றியிருக்கிறார். இடது திருப்பாதம் முன்வைத்து ஊன்றியிருக்க, வலது திருப்பாதம் சற்று பின்னே, குதிகாலை உயர்த்தி, விரல்கள் மட்டுமே பாதக்குறடுகளில் பதியும்வண்ணம்

த.கி.நீலகண்டன்

விளங்குகிறது. சற்றே மடிந்திருக்கும் வலது முழங்காலும், எடுத்த திருவடியும் பார்த்தால், நம்மை நோக்கி நடந்துவருவது

போலவே இருக்கும்! முப்புரிநூலும் ருத்திராட்ச மாலையும் மார்பில் தவழ, தோள்களை பாகுவலயங்கள் அலங்கரிக்க, காதுகளில் தோடும் மகரகுண்டலமும் அணிசெய்ய, நேர்த்தியாக விளங்குகிறார் பெருமான். விரித்த சடையை இழுத்து முடிந்திருக்கிறார். சிரசில் சந்திரகலை விளங்குகிறது. ஒளிவீசும் திருவதனத்தில் கூர்ந்து நோக்கும் விழிகள், எடுப்பான நாசி, விஷமம் கொப்பளிக்கும் மோகன முறுவல் விளங்கும் திருவாய்! மொத்தத்தில் உயிரோட்டம் உள்ள திருவுருவம். ஆக்ஷன் ஹீரோ என்பதற்கு இணையான தமிழ் வடிவம் தெரியாவிட்டாலும், சிலை வடிவம் இதோ என்று காட்டலாம்! நிர்வாணக் கோலமாய் இருந்தாலும் விகல்பம் சிறிதும் தோன்றாத அழகிய கலை வடிவம்!





'பிட்சாடன மூர்த்தி வீதி உலா வரும்போது தரிசித்தால், கர்ம வினைகளை எல்லாம் அவர் பிச்சையாக ஏற்றுக் கொள்கிறாராம்'

சிவாலயங்களில் நடைபெறும் பிரம்மோத்ஸவத்தில் எட்டாம் திருநாளில் இரவில் பிட்சாடன மூர்த்தி வீதிவலம் வருகிறார். அன்று சுவாமியை தரிசிப்பவர்களின் கர்மவினைகளை எல்லாம் அவர் பிச்சையாக ஏற்றுக் கொண்டு விடுகிறாராம்.

சிதம்பரத்தில் பிட்சாடனமூர்த்தி வீதியில் எழுந்தருளும் கோலத்தை, தம் கீர்த்தனை ஒன்றில் கோபாலகிருஷ்ணபாரதியார் அழகாகப் படம்பிடிக்கிறார். பிச்சைக்கு வந்தவனைப் பார்த்து, ''ஏய்யா, கை கால் எல்லாம் நன்றாகத்தானே இருக்கிறது. உழைத்துச் சம்பாதிக்க வேண்டியதுதானே! போ போ!'' என்று விரட்டுகிறோம் இல்லையா? அதைப் போல்,

''தில்லை வனம் இருக்குது; சொந்த ஜனம் இருக்குது,

காலில் சிலம்பிருக்குது, கழுத்தில் வயிரப் பதக்கம் ஒன்று

இருக்குது... பிச்சைக்கார வேஷம் காட்டுறீர்

போம்... போம்...''

என்று விரட்டுகிறார்!

உடுக்க ஆடை இல்லை! ஆனால் வகை வகையான ஆபரணங்கள் மட்டும் அணிந்து காட்சிதருகிறார் பிட்சாடன மூர்த்தி! ஒருமுறை போய் தரிசித்து வாருங்கள்!

(பெருகும்)

மழைப் பந்தி!

மழைநீர் தேங்கிய
சாலையோரப் பள்ளத்தில்
வயோதிகனைப் போல்
விழுந்துகிடந்தது
சூரியன்

தூக்க முயன்ற காற்று
தோற்றுத் திரும்புகிறது

தாகத்தில்
தெருவோர நாயொன்று
சுவைத்துக் குடிக்கிறது
சூரியனையே!

வானம் வைத்து முடித்த
மழைப் பந்தியில்...
எனக்காக மிச்சமிருந்தன
இலையில் கொஞ்சம்
பருக்கைகள்!

ஓடையின்
உளறலைக் கேட்டுக்
குலுங்கிக் குலுங்கிச்
சிரிக்கின்றன
கரையோரப் பூச்செடிகள்!

கூடுதிரும்பும்
பறவையின் அலகில்
நெளிகிறது
புழுக்களின் வாழ்க்கை!

எங்கிருந்தோ வந்த
ஈரக்காற்று
என் வீட்டுக் கதவில்
அடித்தடித்து அழுகிறது
காடுகளை நினைத்து!



அமுது ரமேசு

உலகே மாயம் : ஹாலிவுட் நடிகை கேட் ஹட்சன், போன வருஷம்தான் ஹாரிஸ் ராபின்ஸோடு 'டுக்கா'விட்டு விவாகரத்து வாங்கிக்கொண்டார். நடிகர் ஓவன் வில்சனோடு ஊர்சுற்றியதும் ஆறே மாதங்களில் போரடித்துவிட்டது. அடுத்து லான்ஸ் ஆம்ஸ்ட்ராங். அவர் மூன்றே மாதங்கள்தான். இப்போது மீண்டும் ஓவன் வில்சனுக்குத் தூண்டில் போட்டு வருகிறார்.

அதற்குள் ஹட்சன், டு ட்வென்டி நிறுவனம் சாம்பிளுக்காகக் கொடுத்த கூந்தல் பராமரிப்பு தயாரிப்புகளின் ரகசிய ஃபார்முலாவைத் திருடி, இன்னொரு நிறுவனத்துக்குக் கைமாற்றிவிட்டதாக, திருட்டுப் பழிசுமத்தியிருக்கிறது.

நடிகர்கள், ரசிகர்கள் என்று எல்லோருடைய இதயங்களையும் திருடும் நடிகை, மூளையில் உதிக்கும் ஐடியாக்களையும் அபேஸ் பண்ணுவதுதான் எங்கோ இடிக்கிறது.

மணமே மருந்து : காதலிக்கு ரோஜா, மனைவிக்கு மல்லிகை என்றொரு சொல் வழக்கு உண்டு. இனி இருவருக்குமே சரம்சரமாய் மல்லிகைப் பூவையே வாங்கிக் கொடுக்கலாம்.

அதாவது தி.மு.வில் காதலிக்கும், தி.பி.யில் மனைவிக்கும். மல்லிகையில் உள்ள ஜாஸ்மனேட் என்ற பொருள், புற்று நோயைத் தடுக்கும் குணம் கொண்டது என்று, வாஷிங்டனில் உள்ள டெல் ஆவிவ் பல்கலைக்கழகத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மருத்துவ



கேட் ஹட்சன்

''மல்லிகையில் சுரக்கும் ஹார்மோன், ஆஸ்பிரின் அமிலத்தோடு தொடர்புள்ளது. இது பெருங்குடலில் ஏற்படும் புற்றுநோயையும், இரத்தப் புற்றுநோயையும் தடுக்கும் மருத்துவகுணம் கொண்டது'' என் கிறார் இந்த ஆய்வை நடத்திய பேராசிரியர் ப்ளெஸ்லர்.

இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள் மல்லிகை மருந்தைப் புட்டியில் அடைத்து 'சேவால்-பார்மா' என்ற மருந்து நிறுவனம் விற்கப் போகிறதாம்.

காதலியோடு கடற்கரையில் உட்



மனைவியும் ஸ்பெயின் நாட்டிலிருந்து இங்கிலாந்துக்குக் கடத்தல் தொழில் செய்தது எப்படி? கடலிலும், நிலத்திலும் கடத்தல் செய்யும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் என்னென்ன என்றெல்லாம், பக்காவாக டிப்ஸ் கொடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டது இது. ஸ்பென்சர் தனது அன்புமகன் ஜாசன் வில்சனுக்காக இதைத் தயாரித்தாராம். இந்த காமிக்ஸின் நகல்கள்தான் 'பெஸ்ட் செல்லர்' ஆக உலா வந்துகொண்டிருக்கிறது.

- ஸாந்த்

மல்லிகை!

கார்ந்திருக்கையில் பூக்காரச் சிறுமி குறுக்கிட்டால் உடனே வாங்கிவிடுங்கள்.

காமிக்ஸ் நாயகன் : காமிக்ஸ் என்றாலே, ஏதோ சின்னப் பிள்ளைத்தனமானது என்ற எண்ணம்தான் நம் நாட்டு வாசகர்களுக்கு இருக்கிறது. மேற்குலக நாடுகளில் காமிக்ஸ் படுசீரியஸான விஷயம்.

இப்போது இங்கிலாந்து சிறைக்கைதிகள், அதிகம் விரும்பிப் படிப்பது 'ஹிம் அண்ட் ஹேர்ஸ் ஸ்மக்லிங் வொகேஷன்' என்ற காமிக்ஸைத்தான்.

கூடிய சீக்கிரம் அதற்குத் தடை வரவிருக்கிறதாம். ஏன்?

போதைப்பொருள் கடத்தலுக்காக, சிறைத்தண்டனை அனுபவிக்கும் ஆன்டனி ஸ்பென்சர் என்ற கைதி எழுதியதுதான் இந்த காமிக்ஸ். அவரும் அவர்



தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: கவனமாகச் செயல்படும் திறன் கொண்ட மேஷராசிக்காரர்களே… அதிக மதிப்பெண்கள் பெறுவீங்க. வருவாய் பெருகுமுங்க. புதிய வேலைவாய்ப்புங்க தேடி வரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் தொடங்கப் போறீங்க. நாணயமாக நடந்துக்குவீங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையளிக்குமுங்க.

ரிஷபம்: புண்ணியப் பயணம் மேற்கொள்வதில் மிகுந்த ஆர்வம்கொண்ட ரிஷப ராசிக்காரர்களே… வாழ்க்கை இனிமையாக இருக்கும். வசதிவாய்ப்புகள் பெருகப்போவுது. வேலையில் சுமை இருக்காது. வியாபாரம் சூடுபிடிக்கும். குரு / சனி வழிபாடு நன்மையை அதிகப்படுத்தும்.

மிதுனம்: தெய்வ நம்பிக்கையோடு காரியங்களில் ஈடுபடும் மிதுன ராசிக்காரர்களே… சுபகாரியங்கள் தடையில்லாம நடைபெறப் போகுது. வாக்கு மேன்மையை அடையும். வேலையும் கொஞ்சம் அதிகரிக்குமுங்க. கைப்பொருள் மீது கவனமா இருங்க. ராகு / கேது வழிபாடு நன்மையளிக்குமுங்க.

கடகம்: தெளிவான எண்ணம் கொண்ட கடகராசிக்காரர்களே… வேலையில சுமை அதிகமாகும். குடும்ப வாழ்க்கையில விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. மறைமுக எதிர்ப்புகளும் இருக்கும். உடல் ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மைதரும்.

சிம்மம்: திறமையான சிம்மராசிக்காரர்களே… இந்த வாரம் சிறப்பாக அமையுமுங்க. வியாபாரம் ஜோரா இருக்கும். குடும்பத்துல மகிழ்ச்சி பொங்குமுங்க. ஆடை ஆபரணங்கள் வாங்கிக் குவிப்பீங்க. வெளிநாடு போற வாய்ப்பு வரும்ங்க. ஆஞ்சநேயர் வழிபாடு நன்மையைத் தருமுங்க.

கன்னி: பணிவு மிக்க கன்னி ராசிக்காரர்களே… குடும்பச் சொத்துல இருந்து வந்த பிரச்னைங்க முடிவுக்கு வரப்போகுது. சுபச்செலவுகள் உண்டுங்க. கடன் தொல்லைங்க முடிவுக்கு வருமுங்க. வியாபாரம் நல்லபடியா போகும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மையைத் தருமுங்க.

துலாம்: நேர்மைமிக்க துலாம் ராசிக்காரர்களே… உத்தியோக இடமாற்றம் உண்டுங்க. குடும்பத்துல பிரச்னைகள் இருக்காது. கல்வியில் நல்ல முன்னேற்றம் காணலாம். வேலைப்பளு அதிகமாகும். திருமண பாக்கியம் உண்டாகப் போகுது. நண்பர்கள் தேடி வந்து உதவுவாங்க.

நடக்குமென்பார்; நடக்கும்!



07.09.08 முதல் 13.09.08 வரை

விருச்சிகம்: தைரியம்மிக்க விருச்சிக ராசிக்காரர்களே... தடைப்பட்ட காரியங்கள் மளமளன்னு நடக்கப் போவுது. குடும்பத்துல மகிழ்ச்சி பொங்குமுங்க. உல்லாசப் பயணம் போவீங்க. கடன் தொல்லைங்க இருக்காது. பணம் பல வகையில வருமுங்க. ஆஞ்சநேயர் வழிபாடு நன்மையை அதிகப்படுத்துமுங்க.

தனுசு: பழகுவதற்கு இனிமையான தனுசு ராசிக்காரர்களே...உத்தியோகத்துல நல்ல பெயர் வாங்குவீங்க. கடன் பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் உதவி செய்வாங்க. சாப்பாட்டு விஷயத்துல கவனமா இருங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மையைத் தருமுங்க.

மகரம்: தளராத மனம் கொண்ட மகரராசிக்காரர்களே... மனத்தில் இருந்த குழப்பங்கள் தீருமுங்க. ஆரோக்கியம் நல்லபடியாக இருக்கும். பிரிந்த குடும்பம் ஒண்ணு சேரும். தொழில்ல நல்ல ஏற்றம் இருக்குமுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மையைத் தருமுங்க.

கும்பம்: பழகுவதற்கு இனிய கும்பராசிக்காரர்களே... இது ரொம்ப அருமையான வாரமுங்க. நீங்க தொட்டால் மண்கூடப் பொன்னாகுமுங்க. வியாபாரத்துல நல்ல முன்னேற்றம் இருக்குமுங்க! கல்வியில மேன்மை அடைவீங்க. சனீஸ்வர வழிபாடு நன்மையளிக்குமுங்க.

மீனம்: போராட்ட குணம்மிக்க மீன ராசிக்காரர்களே... வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேருமுங்க. பூர்வீக சொத்துல இருந்த பிரச்னை தீர்ந்து போகும். தொழில் செய்ய உதவிங்க கிடைக்குமுங்க. அடிக்கடி மன உளைச்சல் ஏற்பட்டாலும் நன்மைக்குக் குறைவு இருக்காதுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நல்ல பலன்களை அளிக்குமுங்க.

பொறாமைப்படு!

பொறாமையின் பெருமையைக் குறித்து நீங்கள் எப்போதேனும் எண்ணிப் பார்த்ததுண்டோ? எனக்கும் இதுவரையில் அது தெரியாமலேதான் இருந்துவந்தது. சில தினங்களுக்கு முன்பு அதன் பெருமை எனக்குச் சட்டென்று புலனாயிற்று.

அந்த மகா ரகசியத்தை நான் எப்படிக் கண்டுபிடித்தேனென்று சொல்கிறேன் கேளுங்கள் : ஒரு சமயம் நான் என்னுடைய சொந்தக் கிராமத்திற்குச் சென்றேன். நான் இறங்கவேண்டிய ஸ்டேஷனுக்கு முதல் ஸ்டேஷனில் எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் வந்து ரயிலேறினார். அவர் என் கிராமத்துக்குப் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர். நாங்கள் ஒருவரையொருவர் வீட்டு எருமைக்கன்றுக் குட்டியின் தேக சௌக்கியம் உள்பட யோக க்ஷேமங்களெல்லாம் விசாரித்து முடித்தோம். பின்னர், ''நம் ஸ்டேஷனில் வாடகை வண்டி கிடைக்குமா?'' என்று அவரைக் கேட்டேன். ''அதைப் பற்றி என்ன கவலை. என்னுடைய வண்டி வந்திருக்கும்'' என்றார் அந் நண்பர். அந்தக் கணத்திலே வாழ்க்கையில் வெற்றியடையும் இரகசியத்தை நான் கண்டுபிடித்து, அதைக் கெட்டியாய்த் தலைப்பில் முடிந்துகொண்டேன்.

''என்னுடைய வண்டி வந்திருக்கும்'' என்று அவர் கம்பீரமாய்ச் சொன்னபோது, என்னிடம் என்ன எதிர்பார்த்தார் என்று நினைக்கிறீர்கள்? ''உனக்குச் சொந்த வண்டி கிடையாது. ஆகையால் நீ என்னிடம் பொறாமைப்படு'' என்று அந்த நிமிஷத்தில் அவர் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்தது. ஸ்டேஷனில் வண்டி வரவில்லை. ஒரு மணி நேரத்துக்கு முன்பாயிருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா? ''என்ன ஸார், மதிப்பாய் வண்டி வருமென்று சொன்னீர்கள். ஒன்றையும் காணோம்!'' என்று அவரை மட்டந்தட்ட ஆரம்பித்திருப்பேன். ஆனால், இப்போது வாழ்க்கை இரகசியம் அறிந்தவனாதலின், அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. ''சத்த வண்டி ஒன்று பிடிக்கலாமே?'' என்றேன். ஆவணி மாதம், சாகுபடி காலம்; சத்த வண்டி, சத்தம் போடாத வண்டி ஒன்றையுமே பிடிக்க முடியவில்லை. ''நாமே தலைக்கு ஒன்றாய் எடுத்துக்கொண்டு நடந்து போய் விடலாம் ஸார். இதிலெல்லாம் கௌரவம் பாராட்டக்கூடாது'' என்று அவர் சொன்னார். கைப்பெட்டியை நண்பர் எடுத்துக் கொண்டார். நான் படுக்கையைத் தூக்கிக்கொண்டேன்.



பாவம்! கைப்பெட்டியின் கனத்தினால் அவர் தோள்கள் வெகு பாடுபட்டுக்கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் அவரிடம் எனக்கேற்பட்ட நன்றியறிதலைச் சொல்லி முடியாது. அந்த நன்றியைக் காட்டும் பொருட்டு அவர் என்ன காரியம் செய்யச் சொன்னாலும் செய்திருப்பேன். ஆனால் அவர் கேட்டதென்ன? ''என்னிடம் இன்னும் அதிகப் பொறாமைப்படு'' என்பதையல்லாது வேறெதுவுமில்லை.

அமரர் கல்கி

திவான் பகதூர் முருகய்யங்காருடன் தம்முடைய நெருங்கிய சிநேகிதத்தைக் குறித்தும், அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூதராய் நியூஸிலாந்து தேசத்துக்குச் சென்ற போது தாம் அவருடன் இலங்கை வரை போய்வந்ததைப் பற்றியும் அவர் கூறலானார். ''ஆஹா! பிரயாணம் செய்தால் அப்படியல்லவா செய்யவேண்டும்? ரயில்வே ஏஜெண்ட் நேரில் வந்திருந்து எங்களுக்கு ஏற்படுத்தியிருந்த தனி முதல் வகுப்பில் ஏற்றிவிட்டுப் போனார். வழியெல்லாம் புஷ்பஹாரங்களும் பழங்களும் வந்து குவிந்து கொண்டிருந்தன. அவற்றை நான் வாரி எல்லாருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்படியும் ஒரு கூடை திராட்சைப் பழம் அழுகிப்போயிற்று. இலங்கையில் அரசாங்க விருந்தினர்களாய்த் தங்கினோம். மூன்று மோட்டார் வண்டிகள் எப்பொழுதும் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தன...'' இப்படி அவர் சொல்லிக்கொண்டே போனார். நானும் என்னால் கூடியவரையில் முயற்சி செய்து எவ்வளவு பொறாமைப்படலாமோ அவ்வளவும் பட்டுக் கொண்டே வந்தேன்.



பின்னால் இதைப் பற்றி நான் சாவகாசமாகச் சிந்தித்த போது, பழைய அனுபவங்கள் பல ஞாபகத்திற்கு வரலாயின. அவற்றில் ஒன்றை இங்கே சொல்கிறேன். நான் கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் அடுத்த ஊரிலிருந்து ஒரு நண்பர் அடிக்கடி வருவதுண்டு. அந்தப் பக்கத்திலேயே இந்த நண்பர்தான் முதன் முதலாக சைக்கிள் வண்டி வாங்கியிருந்தார். அவரைப் பார்த்து, ''எப்பொழுது வந்தீர்கள்!'' என்று யாராவது கேட்டால், ''இப்பொழுதுதான் சைக்கிளில் வந்தேன்'' என்று பதில் சொல்வார்! கொஞ்ச நாளைக்குப் பிறகு, ''எப்பொழுது சைக்கிளில் வந்தீர்கள்?'' என்றே நான் கேட்கத்தொடங்கினேன். நல்லவேளையாக நான் பரிகாசம் செய்கிறேனென்பது அவருக்குத் தெரியாது.



அப்போதெல்லாம் எனக்கு இந்த நண்பரைப் பற்றிக் கொஞ்சம் தாழ்வான அபிப்பிராயம் உண்டு. ''பெரிய தற்பெருமைக்காரன்'' என்று எண்ணுவேன். ஆனால், இப்பொழுது அவ்வெண்ணம் அடியோடு மாறிவிட்டது. இந்த நண்பருடைய நோக்கமென்ன? தான் சைக்கிள் சவாரி செய்வதைப் பற்றி நான் பெருமைப்பட வேண்டுமென்பதுதான்.

ஸர், திவான்பகதூர், ராவ்பகதூர் முதலிய பட்டங்களைப் பெரிய மனிதர்கள் ஏன் விரும்புகிறார்கள்? மற்றவர்களின் பொறாமையைக் கிளப்புவதற்காகத்தான். இல்லாவிடில் இந்தப் பட்டங்களில் என்ன இருக்கிறது? ஒத்துழையாமை இயக்கத்தின்போது பலர் இந்தப் பட்டங்களைச் சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டார்கள்.

என்னுடைய பொறாமையைக் கிளப்ப முயன்று தோல்வியடைந்த இருவரைக் குறித்து மேலே சொன்னேனல்லவா? ஆனால், மற்றொரு சமயம் ஒரு நண்பர் இந்த முயற்சியில் வெற்றியடைந்தார். ''திருச்சிக்கு லோகமான்ய திலகர் வந்திருந்தபோது நானும் கூட்டத்துக்குப் போயிருந்தேன். திலகர் வருவதற்காக வழி விட்டிருந்தது. வழியின் பக்கத்தில் நின்றேன். திலகர் வந்தபோது எல்லாரும் கைகூப்பி நின்றார்கள். நான் மட்டும் சட்டென்று குனிந்து, அவர் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன்'' என்று அவர் சொன்னபோது, நான் உண்மையிலேயே அவரிடம் பொறாமை கொண்டேன்.

''எல்லாரையும் பற்றிச் சொல்லுகிறீரே? உம்முடைய சங்கதி என்ன?'' என்று நீங்கள் கேட்கலாம். என்னுடைய சொந்தச் சங்கதி இரண்டொன்று சொல்லுகிறேன், கேளுங்கள். கொஞ்ச காலத்திற்கு முன்புதான் எனக்கு அறிமுகமான ஒருவர் இப்போது என் அத்தியந்த நண்பராயிருக்கிறார். அதன் காரணம் என்ன தெரியுமா? சொல்ல வெட்கமாயிருக்கிறது. அவர் ஒருமுறை, ''நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்க்கிறேன். உங்களைப் போல் எழுதமுடியவில்லை'' என்று தெரிவித்தார். அது முதல் அவரிடம் எனக்கு அபார அன்பு உண்டாகி விட்டது.

மற்றொரு சமயம் நான்



ரயில் ஏறினேன். வண்டியிலிருந்தவர்களில் ஒருவர் எனக்குக் கொஞ்சம் இடம் ஒழித்துக் கொடுத்தார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் நான் இறங்கியபோது அந்த மனிதர் பக்கத்திலிருந்தவரைப் பார்த்து, ''அவர் யார் தெரியுமா? அவர்தான் 'தமிழ்த்தேனீ' '' என்று கூறியது என் காதில் விழுந்தது. 'தமிழ்த்தேனீ' என்ற பெயருடன் நான் சில காலம் எழுதியதுண்டு என்னும் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறேன். இராஜநடையென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என் வாணாளில் நான் எப்போதேனும் போலி இராஜநடை நடந்ததுண்டானால் அந்தச் சமயத்தில்தானிருக்க வேண்டும்.

இத்தகைய அனுபவங்கள் தம் வாணாளில் கிடையாதென்று உங்களில் யாரேனும் நெஞ்சில் கை வைத்துக்கொண்டு சொல்ல முடியுமா? ஒருநாளும் முடியாது. நீங்கள் ரயில் பிரயாணம் செய்கிறீர்கள். டிக்கெட் பரிசோதகர் வந்து பக்கத்திலுள்ள குடியானவர்களிடம் டிக்கட் கேட்கிறார். உங்களை மாத்திரம் கேட்காமல் போகிறார். அப்போது, உங்கள் கர்வம் ஓங்கி வளர்ந்து ரயில் கூரையைப் பெயர்த்துவிட்டு மேலே கிளம்புவதில்லையா? 'நான் நேரில் பார்த்திருக்கிறேன்' என்ற பெருமைப் பேச்சைக் கேளாதவர் யார்? பார்த்தது காங்கிரஸ் மகாசபையாயிருக்கலாம்; குற்றவாளியைத் தூக்குப் போட்ட சம்பவமாயிருக்கலாம்; குதிரைப் பந்தயமாக இருக்கலாம். எதுவாயிருந்தாலும், ''நான் நேரில் பார்த்தேன்'' என்று நீங்கள் பெருமையடித்துக் கொள்ளும்போது, மற்றவர்களுடைய பொறாமையைக் கிளப்பவே விரும்புகிறீர்களென்பதை ஒப்புக்கொள்ளுங்கள்.

நம்முடைய விஷயந்தான் இப்படியென்றால் நம்முடைய மனைவிமார், சகோதரிகள், குழந்தைகள் எல்லாரும் இதே நிலையில்தான் இருக்கிறார்கள். வீட்டில் சாதாரணமாயிருக்கும் பெண்கள் எங்கேயாவது வெளியில் போவதென்றால் ஒரு மணங்கு நிறையுள்ள பட்டுப் புடவையும் (இரவல் வாங்கியாவது) அரை மணங்குக்குக் குறையாத நகைகளும் போட்டுக்கொண்டு கிளம்புவதேன்? மற்றப் பெண்களின் பொறாமையைக் கிளப்புவதற்குத்தான். உங்கள் சகோதரியாவது, மனைவியாவது அடுத்தமுறை உங்களிடம் வந்து, 'கமலம் அசாத்திய ராங்கிக்காரி. அவளுடன் சகவாசமே உதவாது' என்று சொல்லும்போது அதை அப்படியே நம்பிவிட வேண்டாம். உங்கள் சகோதரி அல்லது மனைவியின் புடவை, நகைகளைப் பற்றியோ, படிப்பு, பாட்டுத் திறமைகளைப் பற்றியோ ஸ்ரீமதி கமலம் பொறாமை காட்டவில்லையென்று தெரிந்துகொள்ளுங்கள். கோபத்துக்குக் காரணம் அதுதான். இதுவரைக்கும் கூறியதிலிருந்து விளங்குவதென்ன? மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், பிறருடைய பொறாமையைப் போல் மகிழ்ச்சி தருவது வேறொன்றுமில்லை. பிறரின் பொறாமையைக் கிளப்ப முடியாவிடில், அதைப் போல் துயரம் வேறு கிடையாது! ❑



'மணி ஆறாச்சு. கரண்ட் வந்துரும். வயலுக்குப் போய் மோட்டாரைப் போடணும்' என்றெல்லாம் இனி டென்ஷன் ஆக வேண்டாம். ஏன்? அதற்கும் ஒரு கருவியைக் கண்டுபிடித்துவிட்டார் ஜெயபாண்டியன். சமீபத்தில் அவரைச் சந்தித்தோம்.

"உசிலம்பட்டி பக்கத்துல எங்களோட பூர்வீக கிராமம். நான் பொறக்கறதுக்கு முன்னாடியே என் பெற்றோர்கள், பஞ்சம் பொழைக்க மதுரைக்கு வந்துட்டாங்க. என்னோட ஏழு வயசுலயே அம்மா, அப்பா ரெண்டு பேரும் இறந்துட்டாங்க. என்னோட அக்காதான் என்னைய வளர்த் தாங்க. கொஞ்சம் விவரம் தெரிஞ்சப்ப முறுக்குக் கம்பெனியில வேலை பார்த் தேன். அறிவொளி இயக்கத்தின் இரவுப் பள்ளியில ஒரு வருஷம் படிச்சேன். சுமாரா எழுதப் படிக்கத் தெரியும். முறுக்குக் கம்பெனிய விட்டுட்டு, என்னோட மாமா சிபாரிசுல ரேடியோ, மைக் செட்டு கடையில வேலைக்குச் சேர்ந்தேன். இந்த ரெண்டும்தாங்க, என்னைய 'மதுரை விஞ்ஞானி'யா பிரபலப்படுத்த காரணமா இருந்திச்சு!" என்கிறார் ஜெயபாண்டி.

கோயில் உண்டியலில் ஒரு ரூபாய் காசு போட்டால் போதும். முதலில் ஆலய மணி அடிக்கும். மேளம் ஒலிக்கும். தெய் வீகப் பாடல் இசைக்கும். வரிசையாக இவை நிகழும்போதே, இயல்பாக தீபாராதனை நடக்கும். அதன் பின்னர் ஒரு பெட்டியிலிருந்து மிகச் சிறிய விபூதி டப்பா வெளியே வரும். இதுதான் இவர் உருவாக்கிய முதல் கண்டுபிடிப்பு.

கடந்த இருபது வருடங்களுக்குள் ஆளில்லா லெவல் கிராசிங்கில் 'ஸ்டாப்' சொல்லும் கருவி, அலாரம் அடித்தும் எழுந்துகொள்ளாதவர் முகத்தில், தண்ணீர் தெளிக்கும் அலாரக் கடிகாரக் கருவி, மின் கலப் படகு, தபால் பெட்டிக்குள் தபால் உறை உள்ளே விழுந்துவிட்டதை ஊர்ஜிதப்படுத்தும் கருவி... என இவரது கண்டுபிடிப்புப் பட்டியல் மிக நீண்டது.

செங்கல்பட்டு விவசாயி, சென்னையில் இருந்துகொண்டே தன் வயலில் மின் மோட்டார் பம்ப் செட்டை இயக்கலாம்; நிறுத்தலாம். 3 பேஸ் அல்லது 2 பேஸ் என மின்சாரம்



வந்தாலும், உலகின் எந்த மூலையிலிருந் தாலும் மாற்றி மாற்றி இயக்கலாம். சமீபத் தில் அப்படியொரு கருவியைக் கண்டு பிடித்து, உசிலம்பட்டி அருகே உச்சப் பட்டி கிராமத்தில், ஒரு தோட்டத்தில் விவசாயி கள் முன்னிலையில் செயல்படுத்திக் காட்டியுள்ளார் ஜெயபாண்டி. உச்சப்பட்டி கிராம விவசாயி மூர்த்தி, அதனை நம்மிடம்

உறுதிப்படுத்தினார்.

மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் இரவு நேர மூட்டை தூக்கும் தொழிலாளி ஜெயபாண்டி. பத்தொன்பது வருடமாக



* ஜெயபாண்டியன்



மூட்டை தூக்கும் விஞ்ஞானி!


மூட்டை தூக்கி உழைத்து வருகிறார். இரவில் மூட்டை தூக்குதல்; பகலில் புதிய கருவிகள் கண்டுபிடிப்பு. மாதம் ஆயிரம் ரூபாய் வாடகை வீடு. மனைவி, மூன்று பிள்ளைகள்.

குடும்பத்தின் பலவித பொருளாதாரச் சிரமங்களுக்கு மத்தியில் தன்னுடைய கண்டுபிடிப்பு முயற்சிகளை மட்டும் கைவிட்டுவிடவில்லை அவர். சமீபத்திய அவரது புதிய கண்டுபிடிப்பு, ரோபோ துப்பாக்கி. இதற்கென கணிப்பொறி, இண்டர்நெட் வசதிகள் அந்தச் சிறிய வீட்டுக்குள் அடியெடுத்து வைத்துள்ளன.

''இதுவரை உருவாக்கியுள்ள புதிய செயல்பாட்டுக் கருவிகளை, பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் தரவேண்டும் என்பதே என் லட்சியம். இதுபோன்ற கருவிகளை உற்பத்திசெய்ய முதலீடு நிறைய தேவை. மூட்டை தூக்கும் தொழிலாளியான நான் அதற்கு எங்கே போவேன்? அரசு உதவும்னு நினைச்சு மனு அனுப்பினேன். திரும்பி வந்துச்சு, நான் அனுப்பின மனு'' சொல்லும்போதே ஜெயபாண்டியின் குரலில் ஆதங்கம் வழிகிறது.

- புதியவன்

தமது வித்தியாசமான நடிப்பின் மூலம் 'சுப்ரமணியபுரம்' படத்தில் தனித்துத் தெரிந்த இயக்குநர் சமுத்திரகனி, அடிப்படையில் வழக்குரைஞர். அவர் தமது சினிமா உலக அனுபவங்களை நம்மோடு பேசினார்...



"நடிகர்களைவிட

டைரக்ஷன், நடிப்பு... மனத்திருப்தி தரும் விஷயம்?

''மனத்திருப்தி தரும் விஷயம் என்றால் டைரக்ஷன். நடிப்பெல்லாம் அப்புறம் தான். நடிக்க வேண்டுமென்று பதினாறு ஆண்டுகளுக்கு முன் சென்னை வந்தவன் நான். சினிமாவில் நடிக்கும் முயற்சியில் தோற்றுப் போய்தான், சுந்தர் கே. விஜயனிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தேன். எனது பதினாறு ஆண்டு கால ஆசை, சமீபத்தில் என் நண்பர் இயக்குநர் சசி மூலம் நிறைவேறியிருக்கிறது.''

சினிமா இயக்கம், தொலைக் காட்சித்தொடர் இயக்கம் இரண்டுக்கும் வேறுபாடு என்ன?

''தொலைக்காட்சித் தொடர்களை இயக்குவது என்பது, நாளிதழ்கள் படிப்பது போன்றது. தினமும் பார்வையாளனுக்குப் பரபரப்பையும், சுவாரஸ்யத்தையும் ஏற்படுத்தவேண்டும். சினிமாவின் களம் வேறு மாதிரியானது. இதில் திரைக் கதையை நன்றாக மெருகேற்றி நிதான மாகச் செயல்பட வாய்ப்புள்ளது.''

நீங்கள் கதாநாயகனாக அறிமுகப் படுத்திய வெங்கட் பிரபு இயக்குநராக உருவெடுத்துள்ளார்? உங்களைப் போன்ற இயக்குநர்கள் நடிகராக முயற்சிக் கிறார்கள். ஏன் இந்த முரண்பாடு?

"இயக்குநர்களே மேல்!"

இயக்குநர் சமுத்திரகனி



''சினிமா என்பதே ஒரு தேடல்தான். இந்தத் தேடலில் சரியான இலக்கை அடைவதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது. வெங்கட் பிரபு, தனக்குள் இருந்த இயக்குநரைக் கண்டறிந்தது அவருடைய முயற்சியில்தான். அதுபோல் இயக்குநர்களும் தங்களுக்குள் இருக்கும் நடிகனை ஏதாவது ஒரு சூழ்நிலையில் உணர்ந்து கொள்கிறார்கள்.''

இயக்குநர்களெல்லாம் நடிக்க வந்து விட்டால் திறமையான இயக்குநர்களை தமிழ்சினிமா இழந்து விடாதா?

''எங்களால் நடிக்கவும் முடியும் என்பதை உணர்த்துவதற்காகவே இது போன்ற முயற்சிகளில் ஈடுபடுகிறோம். இன்றைய சூழலில் தமிழ் சினிமாவில் ஒரு முன்னணி நடிகரைச் சந்தித்து, கதை சொல்லி கால்ஷீட் வாங்குவது கடினமாக உள்ளது. நடிகர்களால் புறக்கணிக்கப்படும்போது, அந்த வேதனை தரும் வைராக்கியத்தால், நடிகர் செய்யவேண்டிய கதாபாத்திரத்தைத் தாமே ஏற்று இயக்குநர்கள் நடிக்கிறார்கள். இயக்குநர் என்பவன் நடிகனைவிட மேம்பட்டவன் என்பதைத் திரையுலகம் புரிந்துகொள்ள வேண்டும்.''

இளம் இயக்குநர்களுக்கு மத்தியில் உங்கள் தனித்துவத்தை எப்படி அடையாளப்படுத்திக்கொள்ளப் போகிறீர்கள்?

''எனது இயக்கத்தில் உருவாகும் 'நாடோடிகள்' படம் வெளியான பிறகு பாருங்கள். எனது படைப்பின் தனித்துவ அடையாளங்கள் அதில் தெரியும்.''

டூயட், சண்டைக் காட்சிகள் இவற்றை மாற்றி, உலக அரங்கில் தமிழ் சினிமாவைக் கொண்டுசெல்ல முடியாதா?

''முடியும். அதற்கு இன்றைய இளம் இயக்குநர்கள் நிறைய படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். பல்வேறு எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் படிக்கும்போது, படைப்புத்திறனும், உலகைப் பற்றிய விசாலமான பார்வையும் ஏற்படும்.

நான் படித்த நாவல்களில், என்னைப் பெரிதும் பாதித்த ஒரு நாவலைப் படமாக்கத் திட்டமிட்டுள்ளேன். அந்தப் படைப்பு நிச்சயம் உலகத்தரம் வாய்ந்ததாக இருக்கும்.''

– ராகவ் குமார்

ஷிப்ராவின் கணவன் குருவும் அவனது இரட்டைச் சகோதரன் குமாரும் காட்சியளித்த புகைப்படத்திலிருந்து தன் பார்வையை இறக்கினாள் பவித்ரா.

''உனக்குத்தான் குமாரைத் தெரியுமே பவித்ரா. நல்ல புள்ள! எப்போ எப்படி வேணாமா?''

''நீங்க தொலைபேசியிலே அவர் கிட்டே இதைப் பற்றிக் கேட்க வேண்டியதுதானே?''

''குரு எங்களைக் கோவிச்சுப்பான். அவன்கூட நாங்க எந்தத் தொடர்பும் வச்சுக்க வேணாம்னு சொல்லியிருக்கான்.''

நில்... கவனி... கொல்! செல்!

நடந்துக்குவான்னு அவனைப் பெத்த என்னாலேயே சொல்லமுடியாது. சொந்த அண்ணி செத்துப்போயிருக்கா. வந்து துக்கம் விசாரிக்காமலேயே இருக்கான்'' என்று பரிதவித்தாள் அந்த முதியவள்.

பவித்ராவுக்கு இந்தத் தகவல் வியப்பாக இருந்தது. டில்லி என்பது ஒன்றும் மேலைநாடு இல்லையே, நேரமும் தொகையும் அதிகம் செலவாக! தவிர கணக்குப்பார்க்கும் விஷயமா இது!

''சேதியைக் கேள்விப்பட்டதும் குமார் என்ன சொன்னார்?''

''யாருக்குத் தெரியும்?'' என்று வந்த பதிலில் மேலும் திகைத்தாள் பவித்ரா. ''என்ன சொல்றீங்கம்மா?''

''ஷிப்ரா இறந்த தகவலைச் சொல்லியும்கூட, குமார் நேர்ல வரலேன்னு குருவுக்கு அவன் மேலே ரொம்பக் கோபம். சாவுக்கு ஒரு வாரம் முன்னாலே தான் குமார் இங்க வந்துட்டுப் போனான். ஆனா அதையெல்லாம் பார்த்தா முடியுமா? செய்தி கேட்டதும் வந்திருக்க

அருண் சரண்யா

ஒரு கணம் பவித்ராவுக்கு நமக்கேன் இவர்கள் வீட்டுப் பிரச்னை என்று தோன்றியது. எனினும் அடுத்த கணமே ஷிப்ராவுடன் அவள் கொண்டிருந்த நெருக்கமான நட்பு அந்த எண்ணத்தை அழித்தது.

''குமார் அப்படிப்பட்டவர் இல்லையே. அவருக்கு அங்கே அப்படியென்ன சூழலோ? அவருடைய ஃபோன் நம்பர்

சொல்லுங்க. நான் வேணா பேசிப் பார்க்கிறேன்'' என்றபடி தன்னுடைய கைப்பேசியை தயார் நிலையில் வைத்துக்கொண்டாள்.

''சீக்கிரமா நம்பரைச் சொல்லுங்களேன்'' என்று அந்த அம்மாள் தன் கணவரிடம் பட்ட அவசரமே, எப்படியாவது தன் இரு மகன்களுக்கிடையே உள்ள பிணக்குத் தீர்ந்தால் சரி என்பது போல் இருந்தது.

குருவின் தகப்பனார் என்னைச்



சொல்ல, அதைப் பதிவுசெய்தாள் பவித்ரா.

நான்குமுறை ஒலித்தபின் எதிர்முனையில் குரல் கேட்டது. குமார்தான். ''நான்தான் பவித்ரா பேசறேன்'' என்றாள்.

சில நொடிகள் கழிந்தபின், ''சரி, நான் அப்புறமா உங்களோடு பேசறேன்'' என்று தொடர்பைத் துண்டித்தாள். பிறகு குருவின் பெற்றோரிடம், ''அவர் இப்போ ஏதோ முக்கியமான வேலையில் இருக்கிறாராம். சாயந்திரமாகப் பேசச் சொன்னார்'' என்றாள்.

பிறகு, ''துக்கம் விசாரிக்க வந்தபோது எங்கம்மா இந்தக் கைப்பையைத் தவறுதலாக இங்கேயிருந்து எடுத்துட்டு வந்துட்டாங்க. அதைக் கொடுக்கத்தான் வந்தேன். குரு என்னிடம் பேசும் மூடிலே இருப்பார்னு தோணலே. அதனால நீங்களே இதை அவரிடம் கொடுத்திடுங்க'' என்றபடி அந்தப் பையை அவர்களிடம் நீட்டினாள்.

தேநீர் குடித்துவிட்டுச் செல்லுமாறு அவர்கள் வற்புறுத்த, நாசூக்காக அதைத் தவிர்த்துவிட்டுக் கிளம்பினாள்.

ஈஸ்வரன் மகளைக் கடிந்துகொண்டார். ''வீட்டில் இருக்கும்போதும் எப்போதும் அறைக்குள்ளேயே அடைந்துகிடந்தால் எப்படி பவித்ரா? எதையும் ஏத்துக்கிட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதுதானே வாழ்க்கை? உனக்கு நான் புதிதாகச் சொல்ல என்ன இருக்கு? உன் மனப் பக்குவமும் நகைச்சுவை உணர்வும் இந்நேரம் உனக்குக் கைகொடுத்திருக்க வேணாமா?''


இப்படிக் கூறியபோதே அவளது கல்லூரி இறுதியாண்டில் அவள் எதிர்கொண்ட காம்ப்பஸ் இன்டர்வியூ அவருக்கு நினைவுக்கு வந்தது. அது ஒரு பிரபல நிறுவனத்தின் நேர்முகத் தேர்வு.

''மிஸ் பவித்ரா, எவ்வளவு படிகள் ஏறி இந்த மாடிக்கு வந்தீங்க?'' என்று கேட்டார் நேர்முகத் தேர்வுக்குழுவில் இடம் பெற்றிருந்த நிறுவன அதிகாரி ஒருவர். ''எவ்வளவு படிகள் இறங்கப்போறேனோ, அவ்வளவு படிகள்'' என்ற ஸ்டாக் பதிலைத்தான் இந்தப் பெண்ணும் சொல்லப் போகிறதோ என்ற சலிப்பு எண்ணம் அவருக்குள் எட்டிப்பார்க்கத் தொடங்கியிருந்தது.

''ஏழு படிகள்'' என்றாள் பவித்ரா.

''என்னது? வெறும் ஏழு படிகளா?''

''என்னைப் பொறுத்தவரை படிகளில் ஏறுவதை வாழ்க்கையில் முன்னேறு



''உனக்காக நான் எதையும் தியாகம் செய்வேன்!''


''நம்ம காதலைத் தியாகம் செய்யுங்க, எனக்கு 'அமெரிக்கா வரன்' கிடைச்சிடுச்சு!''

– வெ. சீதாராமன்

''அவர் ஏன் கண்ணைக் கட்டிக்கிட்டு இனிப்பு சாப்பிடுகிறார்?''

''டாக்டர் இனிப்பைக் கண்ணாலகூட பார்க்கக்கூடாதுன்னு சொல்லிட்டாராம்.''

- பொருநை பாலு



வதாகவே நினைக்கிறேன் சார். ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே உங்க நிறுவனத்தைப் பற்றி 12 நிமிடங்கள் 15 நொடிகளுக்கு ஒரு ப்ரசன்டேஷனை அற்புதமாகக் கொடுத்தீங்களே. அதிலே நீங்க சொன்ன 'வெற்றிக்கு ஏழு படிகள்' என்பதுதான் என் மனசிலே பதிஞ்சிருக்கு.''

அதிகாரி அந்தப் பதிலுக்கே மனத்துக்குள் அவளைத் தேர்வு செய்துவிட்டார். என்றாலும் விடாமல், ''உங்க விண்ணப்பத்திலே உங்களுடைய ப்ளஸ்ஸாக நகைச்சுவை உணர்வைக் குறிப்பிட்டிருக்கீங்க. அதை இப்போது நிரூபிக்க முடியுமா?''

அடுத்த நொடியே தன் இருக்கையிலிருந்து எழுந்த பவித்ரா அறைக்கதவைத் திறந்தாள். வெளியே நேர்முகத் தேர்வுக்காகக் காத்திருந்த பிறரை நோக்கி, ''சாரி நண்பர்களே, இந்த வேலைக்கு என்னை செலக்ட் செய்துட்டாங்க. அதனாலே நீங்களெல்லாம் வீட்டுக்குப் போகலாம்'' என்றாள், கொஞ்சம் நாடகத்தனமும் கொஞ்சம் புன்னகையுமாக.

மற்றவர்கள் முகத்தில் கலவரம் எழ, ஒரு மாணவன் மட்டும், ''இந்த நிறுவனத்திலே பதினாறுபேரைத் தேர்ந்தெடுப்பதாகச் சொன்னாங்களே'' என்றான்.

''உண்மைதான். ஆனா என்னை நேர்முகத் தேர்வு செய்ததும் பதினாறுபேர் வேலையை நான் ஒருத்தியே செய்துடுவேன்னு தீர்மானிச்சிட்டாங்க'' என்றாள் பவித்ரா.

உள்ளே இருந்த அதிகாரிகளிடமிருந்து பலத்த சிரிப்பு வெளிப்பட்டது. இரட்டிப்பு சம்பளத்தில் பவித்ரா வேலைக்கு அழைக்கப்பட்டாள்.

ஈஸ்வரன் மனத்தில் இந்த நிகழ்ச்சி நிழலாட, பவித்ராவின் மனத்தில் வேறு சிந்தனைகள்.

தான் திருப்பிக் கொடுத்த ஷில்பாவின் கைப்பையில் காணப்பட்ட ஒரு பொருள் அவள் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்தது. தவிர வேறொரு கேள்விக்குறியும் பெரிதாகிக்கொண்டே இருந்தது. குமார் கொடுத்த அதிர்ச்சி!

குமாரை அவள் பெற்றோருக்கெதிரே தொடர்பு கொண்டபோது, ''ஹலோ பவித்ரா, எப்படி இருக்கீங்க? உங்க தோழி- அதுதாங்க என் அண்ணி ஷிப்ரா, நல்லா இருக்காங்களா?'' என்று தொலைபேசியில் அவன் கேட்டது!

(இக்திக்)



கார் இருந்தால் ஒன்றியச் செயலாளர்!

சமீபத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தை நடத்தினார் தே.மு.தி.க. தலைமை நிர்வாகி கு.ப.கிருஷ்ணன். சில ஒன்றியத் தலைவர்களிடம், 'தாசில்தார் ஃபோன் நம்பர் என்ன; லோக்கல் இன்ஸ்பெக்டர் பெயர் என்ன?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டபிறகு 'பேங்க் பேலன்ஸ் என்ன? கார் இருக்கிறதா?' என்று கேட்டிருக்கிறார். அவர்கள் தங்கள் வறுமையைச் சொல்லியிருக்கிறார்கள். 'ஒரு லட்சம் பேங்க் பேலன்ஸ், கார் இருந்தால் மட்டுமே ஒன்றியச் செயலாளராக நீடிக்க முடியும்' என்று கறாராகச் சொல்லிவிட்டாராம் கு.ப.கிருஷ்ணன். இதனால் கடுப்படைந்த சில ஒன்றியச் செயலாளர்கள் 'தே.மு.தி.க.வே வேண்டாம்' என்று சமத்துவ மக்கள் கட்சியில் சேர்ந்துவிட புதுக்கோட்டையில் தே.மு.தி.க. கலகலத்துப் போயிருக்கிறதாம்.

பா.ம.க. தலைவர் ஜி.கே.மணியின் மகன் திருமணம் சென்னையில் நடந்தது. மணமகளின் தந்தை அ.தி.மு.க. பிரமுகர். எனவே, 'ஜெயலலிதா வருவார்; நீண்ட காலத்துக்குப் பின் மருத்துவரை அவர் சந்திக்கும் நிகழ்ச்சியாக அமைந்து தமிழக அரசியலில் திருப்பு முனையாய் திருமண நிகழ்ச்சி அமையும்' என அரசியல் வட்டாரத்தில் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜெ. வரவில்லை. 'தேர்தல் நெருக்கத்தில் பார்த்துக்கொள்ளலாம்' என்று அவர் நினைக்கிறாராம். மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம், 'அரசியலில் நிலைப்பாட்டையும் மீறி நட்பு கொள்வோம்' என்று வலியுறுத்தும் கலைஞரும் வரவில்லை.



* ராமதாஸ்

இப்போதெல்லாம் கட்சிக்கு தொலைக்காட்சி துவக்குவதுதான் ஃபேஷன். இது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையும் விடவில்லை. குறிப்பாக தமிழ்நாடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தொலைக்காட்சி துவங்குவதற்கு ஸீரியஸான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. பத்திரிகை போலவே தொலைக்காட்சிக்கும் 'ஜனசக்தி' என்று பெயர் வைக்கலாமா என்ற கருத்து தோழர்களிடையே அலசப்படுகிறது.

- ஸ்ரீநி

நியூ(ஸ்) ஃப்ளாஷ்!

கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று (28-9-2008)

ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் கோதானம் செய்து பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற்று

அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுபடவும், முன்னோர்களின் ஆசி வேண்டியும் கோதானம், மகிஷ (எருமை) தானம், காராம் பசு தானம், பசுமடத்தில் நடைபெறுகிறது. யாகங்கள் செய்து, யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும் ஹோமங்கள் செய்து க்ஷேமங்கள் குவிப்பதில் வல்லவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தமது வேத வித்வான்களின் குழுவுடன் கோதான பூஜை, கோபூஜை செய்ய உள்ளார். இதில் அனைவரும் கலந்து கொண்டு பித்ருக்களின் ஆசியை பெற்று தோஷ நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.

கோதானம் செய்வது ஓராயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலனை கொடுக்கும்

கோதானம் (பசுவும் கன்றும்) செய்தால் ஜாதக ரீதியான தோஷம், பித்ரு தோஷம், புத்ர பாக்கியம், தடைபட்ட திருமணம் கைகூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். கோதானம் செய்ய ரூ.9,000/-

காராம் பசு (பசுவும் கன்றும்) தானம் செய்தால் நவக்கிரஹ தோஷம், சனி தோஷம், நாக தோஷம் ஆபிசார தோஷம், வாஸ்து தோஷம் மற்றும் அனைத்து தோஷங்களும் விலகும். காராம் பசு தானம் செய்ய ரூ.9,500/-

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால் நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் ஏற்படும் பயம், வியாபாரம். உத்யோகத் தடை நீங்கும். ஆயுள் விருத்தி அடையும். மகிஷ தானம் செய்ய ரூ.10,500/-

மேற்கண்ட தானம் செய்ய (Cheque/DD/MO மூலமாக) **Sri Ghosala Seva Trust, Chennai** என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி மஹாளயபக்ஷ அமாவாசை அன்று நடைபெறும் கோதானத்தில் கலந்து கொண்டு நடமாடும் தெய்வமாகிய கோமாதாவின் பேருளை பெற அன்புடன் அழைக்கிறோம்.

மேற்கண்ட தானம் செய்பவர்களுக்கு பித்தளையிலான பெரிய கோமாதா விக்ரஹமும் வெள்ளியிலான ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும் அனுப்பி வைக்கப்படும்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

பசுமடம்

வயதான பசுக்கள் பாதுகாப்பு இல்லம்

(Recognised by Animal Welfare Board of India)

பெருமாளகரம், திருவேற்காடு (P.O), சென்னை-77 போன்: 044 -3299 9888



கண்ணனைத் தேடி... 21

ஸ்ரீவில்லிபுத்தூரிலே உள்ள வடபத்ர சாயி, வெவ்வேறு வர்ணங்களோடே காட்சி தருகிறார் என்று பார்த்தோம். அதேபோன்ற வண்ணத் திருமேனியுடன் திருத்தங்கல் என்கிற திவ்யதேசத்தில் திருமால் காட்சி தருகிறான். நின்ற திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கும் இவ்வெம்பெருமானுக்கு நின்ற நாராயணப் பெருமாள் என்றே பெயர். ஆழ்வார் பாசுரத்திலே வர்ணித்துள்ளது போல, இவ்வெம்பெருமான் முதல் யுக மான கிருத யுகத்தில், பால் போன்ற வெண் நிறத்தவனாகக் காட்சி தந்தான். திரேதா யுகத்தில் சிவப்புவர்ணம்; துவாபர யுகத் திலே மாந்தளிர் பச்சைநிறம்; கடைசியாக கலியுகத்திலே கறுப்பு வர்ணம்! இந்த வண்ணமயமான பெருமானுக்கு இருபுறங் களிலும் ஸ்ரீதேவி பூதேவி நாய்ச்சியர் இருக்கின்றனர். கூடவே நீளாதேவியும் ஜாம்பவதியும் உள்ளனர்.


கண்ணனின் மனைவியான ஜாம்பவதி என்பவள் ஜாம்பவானின் மகள். ஜாம்ப வானோ ராமாவதார காலத்தவர். அவர் கிருஷ்ணன் அவதரித்த துவாபர யுகத்திலே எங்கு வந்தார்? என்கிற கேள்வி எழும். கிருஷ்ணாவதார காலத்தில் ஒரு சண்டை மூண்டது. அதிலே ஜாம்பவா னும் கண்ணனும் போரிட்டனர். கண்ண னால் ஜாம்பவானை ஜெயிக்க முடிய வில்லை; ஜாம்பவானால் கண்ணனை ஜெயிக்க முடியவில்லை! கடைசியிலே, 'நம் இராமன்தான் இந்தக் கண்ணன்' என்று புரிந்து கொண்டார் ஜாம்பவான். அவன் திருவடிகளிலே விழுந்து வணங்கினார். ஜாம்பவானின் மகள் ஜாம்பவதியை, கண்ணன் கடிமணம் புரிந்து கொண்டான். அந்த ஜாம்பவதிதான் இங்கே திருத்தங்கல் திவ்யதேசத்து நின்ற நாராயணப் பெருமாள் சன்னிதியில் ஸேவை தருகிறாள்.

திருத்தங்கல் என்கிற இந்த திவ்ய தேசம், சிவகாசிக்கு அருகிலே, இப்பக்கத்தி லிருந்து வந்தால், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகிலே ஒரு குன்றின்மேல் அமைந்துள் ளது. தங்காலமலை என்று இந்தக் குன்றுக்குப் பெயர். குன்றினுள் குடைவரை கோயிலுக்குள்ளே ரங்கநாதரும் பள்ளி கொண்டு ஸேவை சாதிக்கிறார். ரங்கநாத ருக்கு அருகிலேயே புரூரவஸ் சக்கரவர்த்தி யின் விக்ரஹத்தையும் நாம் காணலாம்.

புதனுடைய (கிரஹம்) பிள்ளையான புரூரவஸ், இவ்விடத்துக்கு வந்து தவம் செய்தான். இங்கே எழுந்தருள வேண்டும் என்று பெருமாளைப் பிரார்த்தித்து தபஸ் பண்ணி, அவருடைய ஸேவையும் பெற்றான்.



வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்



கல்யாணம் நடத்திய கிருஷ்ணன்!

புரூரவஸ் சக்கரவர்த்தி, இராமனுக்குப் பல ஆண்டுகள் முற்பட்டவன். ஸ்ரீராமனுடைய மூதாதையர்களுள் ஒருவன். ஸ்ரீ ராமனும் ரங்கநாதரைப் பூஜித்தார் என்பது நமக்குத் தெரியும்.

திருத்தங்கல் என்ற பெயர் வர ஒரு காரணம் இருக்கிறது! கண்ணனுடைய பேரன் அனிருத்தனுக்கும் உஷை என்பவளுக்கும் கல்யாணம் செய்து வைப்பதற்காக, பெருமான் வந்து தங்கிய இடம் இது என்பதால் திருத்தங்கல்.

பாணாசுரனுடைய மகள் உஷை. கண்ணனுடைய மகன் பிரத்யும்னன். பிரத்யும்னனுடைய மகன் அநிருத்தன். அநிருத்தன் துவாரகையில் சௌக்யமாக இருந்து வந்தான். உஷை ஒருநாள் தூங்கிக் கொண்டிருந்தபோது, அநிருத்தன் அவள் கனவில் தோன்றிவிட்டான்! அவளும் அவன் மேல் காதல் கொண்டாள். ஆனால்,

கனவிலே பார்த்தவனை எப்படி நிஜத்திலே கண்டுபிடிப்பது?

நல்லவேளையாக அவளுக்கு சித்ரலேகா என்று ஒரு தோழி இருந்தாள். அவளுக்கு விசேஷமானதொரு சக்தி இருந்தது - இன்னொருத்தர் கனவிலே கண்ட உருவத்தைக்கூட படமாக வரையும் சக்தி! சித்ரலேகா அழகனுடைய ஒவ்வோர் உருவமாக வரைந்து கொண்டே வந்தாள். கண்ணனுடைய உருவத்தை அவள் வரையவும் உஷை "மிகவும் அருகில் வந்து விட்டாய், ஆனால், என் கனவில் தோன்றியவன் இத்தனை அழகாக இல்லை!" என்றாள். அடுத்து பிரத்யும்னன், அடுத்து அநிருத்தன் என்று சித்ரலேகா வரையவும் "இவன் தான் நான் ஆசைப்பட்ட காதலன்!" என்று அநிருத்தனை அடையாளம் கண்டாள் உஷை.



அவனை எப்படிக் கூட்டிவருவது? சித்ரலேகாதான் அதற்கும் உதவினாள். "நான்குபேரோடு போய் அப்படியே அவனைத் தூக்கி வந்துவிடுகிறேன்" என்றாள்! துவாரகைக்குப் போனாள். அங்கே மேல்மாடத்தில், கட்டிலில் படுத்துக் கொண்டு அநிருத்தன் தூங்கிக் கொண்டிருந்தான். இவள் சாமர்த்தியமாக அப்படியே கட்டிலோடு அவனைத் தூக்கி வந்து உஷையின் அந்தப்புரத்துக்குள் சேர்ந்துவிட்டாள்!

கண் விழித்த அநிருத்தன், உஷையைக் கண்டான். அவனும் அவளிடத்தில் மனத்தைப் பறிகொடுத்தான். இருவரும் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கினர்.

சில நாட்கள் கழித்து, பாணாசுரன் தன் மகளைக் காணவந்தான். அந்தப்புரத்தில் ஓர் அந்நியனைக் கண்டு, கோபத்தோடு, இருவரையும் சேர்த்து சிறைச்சாலையிலே

பிராட்டி, செங்கமலத் தாயார் என்கிற திருநாமத்துடன் அருணமாய், கமலமாய், தனி சன்னிதியிலே எழுந்தருளி மஹாலக்ஷ்மியாகவே எல்லோருக்கும் அருள்பாலிக்கிறாள்.

வைத்துவிட்டான்! வெகு நாட்களுக்கு அவர்களும் சிறையிலேயே சௌக்கியமாக இருந்தார்கள்! நாயகனும் நாயகியும் சேர்ந்தபிறகு எந்த இடத்தில் இருந்தால் என்ன? பிரிந்திருக்கும்போதுதான் பாலும் கசக்கும் பால்நிலவும் ஏற்காது; சேர்ந்திருந்தாலோ எதுவும் இனிக்கிறது அல்லவா!

வேடிக்கையாக ஒன்று சொல்வதுண்டு - 'இராவணன் மட்டும் சீதையுடன் இராமனையும் சேர்த்துச் சிறை வைத்திருந்தால் அயோத்திக்குத் திரும்பும் எண்ணமே இராமனுக்கு வந்திராது. நிம்மதியாக ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாயாரோடு ஏகாந்தமாக ஓர் இடத்தில் இருந்துவிட்டுப் போயிருப்பான்' என்று.


அதுபோல்தான் உஷையும் அநிருத்தனும் மற்ற எல்லாவற்றையும் மறந்து இருந்தனர். ஆனால் பேரனுக்கு, இந்த ஆபத்து வந்தது என்று கண்ணனுக்குத் தெரிந்துபோயிற்று. அவன் தனது படைகளையெல்லாம் திரட்டி வந்து பாணாசுரனை எதிர்த்தான். பாணாசுரனுக்கு பலர் துணைக்கு வந்தார்கள். மொத்த பேரையும் ஓட்டித் துரத்திவிட்டான் கண்ணன். கடைசியில் பாணாசுரனுடன் நேருக்கு நேர் யுத்தம். அந்த அசுரனுக்கு ஆயிரம் தோள்கள். 998 தோள்களை வெட்டிவிட்டு, உஷையை அநிருத்தனுக்காக அழைத்துப் போனான் கண்ணன்.



பேரனுக்கு உடனே கல்யாணத்தைப் பண்ணிவைக்கும்படி பிராட்டி ருக்மிணி பிரார்த்தித்தாள். அவள் பிரார்த்தனைக்கு இணங்க இந்தத் திருத்தங்கலிலே வந்து தங்கியிருந்து, உஷைக்கும் அநிருத்தனுக்கும் திருக்கல்யாணம் முடித்துக்கொண்டு, அதன் பிறகு துவாரகைக்குச் சென்றான் கண்ணன். அவன் பிராட்டியுடன் தங்கியிருந்த ஊர் திருத்தங்கல். திருத்தங்கால் என்றும் அழைக்கிறார்கள்.

இவ்வூரிலே பிராட்டியும் கண்ணனிடம் வேண்டுகிற பாவனையில், நின்ற திருக்கோலத்திலேயே ஸேவை சாதிக்கிறாள். திருவான மஹாலக்ஷ்மி பெருமானுடன் தங்கிய ஸ்தலம் என்பதாலும், திருத்தங்கல் என்கிற பெயர் விளங்குகிறது. பல திவ்ய தேசங்களிலும் தாயார் அமர்ந்த திருக்கோலத்தில்தான் இருப்பாள். இங்கே பெருமானை நோக்கிப் பிரார்த்தித்து நிற்கும் அரிய நின்ற திருக்கோலம். செங்கமலத் தாயார் என்கிற திருநாமத்துடன் அருணமாய், கமலமாய் தனி சன்னிதியிலே எழுந்தருளி மஹாலக்ஷ்மியாகவே எல்லோருக்கும் அருள்பாலிக்கிறாள்.

தங்காலமலை என்று இவ்வூரிலிருக்கும் குன்று அழைக்கப்படவும் ஒரு காரணம் இருக்கிறது. ஆதிசேஷன்,



''நீ சென்று திருத்தங்கலிலே, மலை ரூபத்திலே இருந்து தவம் பண்ணு. நான் அங்கே வரப்போகிறேன். கல்யாணக் கோலத்திலே அநிருத்தன் - உஷையைக் கண்டு அருள்பாலிப்பதற்காக நின்றிருக்கப் போகிறேன். அப்போது உன் மேலே தங்கி நிற்கிறேன்'' என்று ஆலிலைக்குச் சமாதானம் கூறி அனுப்பினான் எம்பெருமான்.

ஆலிலை தங்கும் மலையானபடியாலே திருத்தங்காலமலை என்று பெயருடையதாயிற்று.

நின்ற நாராயணன் கோயிலின் விமானம் மிக அழகானது, மூன்று கலசங்கள். 'சரத் சந்திர விமானம்' என்று இதற்குப் பெயர்.

ஆலிலை இரண்டுமே பெருமானுக்குப் படுக்கை ஆகின்றன அல்லவா? ஒருமுறை இவ்விருவருக்குள்ளே போட்டி உண்டாயிற்று. ''எங்களுக்குள் யார் உமக்குப் பிடித்தமான படுக்கை?'' என்று பெருமானிடத்திலே கேட்டனர். ''ஆதிசேஷன்'' என்று பெருமாள் சொல்ல, ''எனக்கும் அந்த நிலை வேண்டுமே!'' என்று ஆலிலை வேண்டிக் கொண்டது.

ஆச்சர்யமான இந்த திவ்யதேசத்தில் சிற்பநுட்பம் வாய்ந்த திருக்கோயில் இங்குள்ள குடைவறைக் கோயில். நின்ற நாராயணன் கோயிலின் விமானம் மிக அழகானது. மூன்று கலசங்கள். 'சரத் சந்திர விமானம்' என்று இதற்குப் பெயர். சூரியனைப்போலே ஒளி படைத்ததாகவும் அதேசமயத்தில் சந்திரனைப்போலே குளிர்விக்கவல்லதாகவும் இருக்கிறது.

இன்னொரு பக்கத்திலே, பாபங்களை நாசம் பண்ணக்கூடிய பாபவிநாசினி, புஷ்கரிணி இருக்கிறது. இவ்வூரை பூதத்தாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பல்லாண்டு பாடியுள்ளனர். தேடிச் சென்று ஸேவிப்பவர்க்கு மங்கலம் தங்கச் செய்யும் திருத்தங்கல்!

இந்த அத்தியாயத்தோடு கண்ணனைத் தேடி நிறைவுறுகிறது. அடுத்த இனிய சந்தர்ப்பத்தில் கல்கி வாசகர்களுடன் மீண்டும் தேடலைத் தொடர்வேன்.

(நிறைவுறுகிறது)

படங்கள்: **ஸ்ரீஹரி**

சித்திரங்கள்: **வேதா**

கிரேஸியைக் கேளுங்கள்

கணினி

● ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி.

''பருப்பில்லாமல் கல்யாணமா'' என்ற பழமொழி தற்காலத்துக்குப் பொருந்துமா...?

போற ரேட்டுல பொண்ணும், பையனும் கூட இல்லாம 'இன்டர்நெட்'ல கல்யாணம் நடந்தாக்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை... கணினி கல்யாண வைபோகமே...!

● ஆர். கோபாலன், மேற்கு மாம்பலம்.

வீட்டில் தாங்கள் பின்பாட்டா...? இல்லை ஸோலோவா...?

கும்பலோடு கோவிந்தா...!

● என். கோமதி, நெல்லை.


மகாபாரத காந்தாரி, நிஜமாலுமே எப்படி கண்ணைக் கட்டிக்கிட்டு நூறு பிள்ளைகள் வளர்த்தாங்க...?

பயிரை வளர்க்கத்தான் பார்த்துப் பார்த்துப் பாடுபட வேண்டும். ''களை வளர்வதை காண வேறு வேண்டுமா?'' என்ற ஆதங்கத்தில் காந்தாரி கண்ணைக் கட்டிக்கொண்டு 'கௌரவமாக' இருந்துவிட்டாள் போலும்.

● மு. மதிவாணன், அரூர்.

நடித்துக்கொண்டிருக்கும் போது, நாடக மேடையிலேயே என் உயிர் பிரிந்துவிட வேண்டும் என்று சொல்லும் கலைஞர்களைப் பற்றி...?

'உனக்காக என் உயிரையே கொடுப்பேன்' என்னும் காதலனின் உணர்ச்சிவசப்படலுக்குச் சமமான உ.வ.ப. ஆபரேஷன் செய்யும் சர்ஜன், பாதி ஆபரேஷன் செய்யும்போது தியேட்டரிலேயே தன் உயிர் பிரியவேண்டும் என்று ஆவேசப்பட்டால், அந்த பேஷண்டின் கதி என்னாவது? சொதப்பி



நடித்து நாடகத்தைச் சாவடித்து, ஆடியன்ஸின் உயிரை வாங்காமலிருந்தாலே நல்ல கலைஞன்!

● வசந்தா ராமமூர்த்தி,
ஆலந்தூர்.



கல்யாண வைபோகமே!

ஒரு மரபுக் கவிதை ப்ளீஸ்...?

''தொட்டகுறை ஆத்திகம், விட்டகுறை நாத்திகம்
நட்டவிதை உள்ளிருக்கும் நாதனே! எட்ட அதை
சுட்டபழம் ஆகி, சுடாத பழங்களில்
பட்டும் படாமல் இரு...''

எம். ஷாலினி, சேலம்.

குழந்தையின் சிரிப்பு - குமரியின் சிரிப்பு... ஒப்பிடுக...?

குழந்தையின் சிரிப்பு கோவில் மணி; குமரியின் சிரிப்பு டெலிஃபோன் மணி!

● ரா. பிரசன்னா, மதுரை.

அதென்ன சார், 'மூக்கும் முழியுமா'' இருக்கறது...? ஏன் 'வாயும் காதுமா' இருக்கக்கூடாதா...?

'முழி' கெட்டாலும் 'மூக்கு' கண்ணாடி போட்டு காப்பாத்தும்... 'மூக்குக்கும் - முழிக்கும்' வாய்த்த நட்பு அப்படி... ஆனால், 'காது' கேட்ட ரகசியத்தை 'வாய்' போட்டுக் கொடுத்து விடுவதால் 'வாய்க்கும்- காதுக்கும்' நட்பு வாய்க்காது...

● லக்ஷ்மி ஸ்ரீனிவாசன், சென்னை.

தங்களின் குடும்பம் conservative குடும்பமா...?

உறவுகள் என்ற சக்தியை இழக்காமல் சேமித்துப் பாதுகாக்கும் Conserve-Relatives கூட்டுக் குடும்பம்...! ●





புத்தம் புது ஜொலிப்பில்

சொக்குதே மனம்

ஜெயா டிவியில் ஒளிபரப்பாகி சிறப்பான வரவேற்பை பெற்ற நிகழ்ச்சி "சொக்குதே மனம்" என்றால் அது மிகையாகாது. இது பிரபலமாமன பழைய பாடல்களை விரும்பும் ரசிகர்களுக்கான நிகழ்ச்சி. இளைய தலைமுறைக்கும், முதிய தலைமுறைக்கும் உள்ள இடைவெளியை நிரப்பும் முயற்சிதான் "சொக்குதே மனம்" இதில் இசையின் தன்மை சிறிதும் மாறாமல். அதே நேரம் அந்தப்பாடலுக்கான திரைக்காட்சியுடன் பொருந்துவது போல் நிகழ்ச்சியை அமைந்திருப்பது தனிச்சிறப்பு வாய்ந்தாகும்.

இந்நிகழ்ச்சி புதுப்பொலிவுடன் ஞாயிறு தோறும் இரவு 7.00 மணிக்கு ஜெயா டிவியில் ஒளிபரப்பாகிறது. பழைய பாடல்களை புதிய வடிவிலும், புதிய பாடல்களுக்கு பழைய வடிவம் கொடுத்தும், ரீமிக்ஸ் செய்தும் முற்றிலும் மாறுபட்ட வடிவில் தர உள்ளனர். காலத்தில் அழியாத இனிய பாடல்களை புதுமையான, பிரமாண்டமான மேடை அமைப்பு. சிறந்த ஒளிப்பதிவு, மற்றும் சிறந்த தொழில்நுட்ப கலைஞர்களால் இசைக்கபடுகின்றன. இந்நிகழ்ச்சி இரண்டு விதமான சிறப்பம்சங்களை கொண்டது. முதல் அம்சமான பழைய பாடல்கள்புதுப்பொலிவுடன், இரண்டாவதாக, இளையராஜாவின் ராஜபார்வை நிகழ்சியும், நெஞ்சை கொள்ளை கொள்கிறது.

திரு.நாராயணன், பிரியா சுப்பிரமணியன் எஸ்.எச்.எஸ் ஆலோசனை குழுமம் மற்றும் பிரியம் எண்டர்டெய்னர்ஸ்-ன் "சொக்குதே மனம்" இசை நிகழ்ச்சியை ஜெயா டிவியில் வழங்குகின்றனர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை இரவு இனிய பாடல்களை தந்து ஆறிலிருந்து அறுபது வரை அனைவரையும் சொக்க

வைக்கும் நிகழ்ச்சி சொக்குதே மனம்
இந்நிகழ்ச்சியை கண்டு களித்த ரசிகர்கள் பிரியா சுப்ரமணியத்திற்கு நேரிலும் SMS மூலமாகவும், கடிதம் மூலமாகவும் பாரட்டுகளை தெரிவித்துள்ளனர். அதில் இந்நிகழ்ச்சியின் இசைத்தன்மை துல்லியம், நிகழ்ச்சி வழங்குவிதில் புதுமை எம்பொழுதும் ரசிக்கும் தன்மையுடையாதவும் காலத்தால் அழிக்க முடியாத பழைய பாடல்களை பிரியா சுப்ரமணியன் போன்றோரின் குரலில் கேட்கும் போது பரவசம் என அரை மணி நேரமும் இசைச்சாரலில் மூழ்கியே போகிறோம்.

நமது ஜெயா டிவியில் புகழ். எஸ்.எச்.எஸ் ஆலோசனை குழுமம் மற்றும் பிரியம் எண்டர்டெய்னர்ஸ்-ன் "சொக்குதே மனம்"மலைக்கோட்டை மாநகரம் திருச்சியில் 28/09/08 அன்று மாலை 5 மணிக்கு ஹோட்டல் பெமினா - லேட்டஸ் ஹாலில் மிகபிரம்மாண்டமாக நேரடி இசை நிகழ்ச்சி நடத்த உள்ளனர். மேலும் விவரங்களுக்கு 9443533412, 9942250040.

நிகழ்ச்சியை தங்கள் ஊரில்நடத்த விரும்புவர்கள் உடனடியாக சொக்குதே மனம் நிகழ்ச்சி மேலாளரை தொடர்பு கொள்ளுங்கள். 9840313106



உடையழகு... நடையழகு

பூக்கள், காய் – கனிகள் மாத்திரமல்ல, இலைகளாலும் அழகுசாதனங்கள் தயாரிக்கமுடியும். சருமம், தலைமுடி, பற்கள்... என சகல பாகங்களுக்கும் இலை ட்ரீட்மென்ட் கொடுக்கலாம்.



★ **வில்வ இலை:** வில்வம் பூஜைக்கு மாத்திரமல்ல, அழகு சாதனமாகவும் பயன்படக்கூடிய அபார மூலிகை! உடலில் பலருக்குத் துர்நாற்றம் வீசும். இவர்கள் செய்யவேண்டியது ஒரு கைப்பிடி வில்வ இலைகளை மையமாக அரைத்து, உடல் முழுதும் பூசி அரைமணி நேரம் ஊறவிட்டுப் பிறகு குளிக்கவும். வாரம் இருமுறையேனும் செய்தால் பலன் தெரியும்.

★ **வேப்பிலை:** உடலில் எந்தவிதமான தழும்புகள், வடுக்கள் இருந்தாலும், வேப்பிலையை அரைத்துப் பூசினால், அது இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும். ஒரு கைப்பிடி வேப்பிலையை எடுத்து நீரில் கொதிக்க விடவும். நன்றாகக் கொதித்து, பாதியாகச் சுண்டியவுடன், நீரை வடிகட்டி, குளிக்கப் போகும் முன், பக்கெட் நீரில் கலந்து குளிக்கவும். சரும வியாதிகளுக்கு வேப்பிலை ஒரு என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்ட்!

★ **துளசி:** பூஜைக்குப் பயன்படும் துளசி ஓர் அருமருந்து! ஒரு டீஸ்பூன் துளசியுடன் சிறிது தேன் கலந்து, தினசரி சாப்பிட்டு வந்தால் முகம் டாலடிக்கும். வியாதிகள் லேசில் கிட்டே வராது. தலையில் பேன், பொடுகு தொல்லையா? துளசியை அரைத்துத் தலையில் தடவி, இரவு படுக்கச் செல்லுங்கள். காலையில் எழுந்தவுடன் தலைக்குக் குளிக்கவும். சிலமுறை செய்யவேண்டியிருக்கும். ஆனால், பலன் கண்டிப்பாக உண்டு.

★ **தேயிலை:** தலைமுடி பளபளவென்று டாலடிக்கணுமா, முடி கொட்டுகிறதா, டல்லாக இருக்கிறதா? தேயிலையிலும் உள்ளது தீர்வு! உபயோகப்படுத்திய தேயிலைத் தூளைத் தூக்கியெறியாமல், நீரில் மேலும்



பதினைந்து நிமிடங்களுக்குக் கொதிக்க விடவும். நன்றாக ஆறிய பிறகு வடிகட்டி, தலைமுடியை இந்தத் தண்ணீரில் அலசவும். இதில் சிறிது எலுமிச்சையைப் பிழிந்தால், தலைமுடி ஷைனோ ஷைன்தான்!

உபயோகப்படுத்திய தேயிலைத் தூளில், சிறிது ஐஸ்கட்டிகளை க்ரஷ் பண்ணி, சிறிய மூட்டைகளாக ஆக்கி கண்களின் மேல், பத்து நிமிடங்களுக்கு வைக்கவும்.



டயர்டாவது ஒண்ணாவது... கூடவே கண்கள் பளபளவென டாலடிப்பது போனஸ்!

★ **சீலரி (celery):** சூப்பர் மார்க்கெட்களில் ஈஸியாகக் கிடைக்கும். சீலரி இலைகள் தலைமுடிக்கு ஒரு வரப்பிரசாதம்! சீலரி இலைகளை நன்றாகக் கழுவி, நறுக்கி, கொதிக்கும் நீரில் போட்டு, சில நிமிடங்கள் கழித்து ஆறிய பிறகு வடிகட்டி, இதில் ஒரு டேபிள் ஸ்பூன் வினிகர் சேர்க்கவும். ஷாம்பூ அல்லது சீயக்காய் போட்டு, தலைக்குக் குளித்தபின் சீலரி வாட்டரினால் தலைமுடியை அலசவும். தலைமுடி மிக நன்றாக அடர்த்தியாக வளரும். சீரான கூந்தலுக்கு சீலரி!

★ **பிரிஞ்சி இலை (Bay leaves) :** பிரிஞ்சி, பற்களுக்கு நண்பன். பற்கள் வெள்ளைவெளேரென்று பளிச்சிட வேண்டுமா, பிரிஞ்சி இலையில் வாரம் இருமுறையேனும் பற்களைத் தேய்த்து விடவும். வாட்ஸ் த சீக்ரெட்... என தினமும் 100 எஸ்.எம்.எஸ். கண்டிப்பாக வரும்.

வேப்பிலை என்கவுன்டர்!

★ **லெட்டூஸ் (Lettuce) :** ஒரு லெட்டூஸை எடுத்து, அதனுடன் ஒரு ரோஜாவைச் சேர்த்து மையமாக அரைக்கவும். இதில் சில துளிகள் எலுமிச்சை சாற்றைக் கலந்து முகத்தில் தடவி, பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு கழுவவும். எண்ணெய்ப் பசையுள்ள சருமத்துக்கு லெட்டூஸ் பெஸ்ட்! எண்ணெய் வடியறதேன்னு அழ வேண்டாம்.

இலைகள் ஒசைப்படாமல் ப்யூட்டிக்கு மாபெரும் பங்கை அளித்துக்கொண்டிருக்கும்போது, கவிஞர்கள் பூக்களை வைத்து மட்டும் பாடல் எழுதுவது ஏன்?

– லதாசேகர்

85 நாட்களில் 62 காட்சிகளைக் கடந்து நாடக உலகில் பெரும் சாதனை படைத்துக்கொண்டிருக்கிறது - கிரேஸி மோகனின் 'சாக்லெட் கிருஷ்ணா' நாடகம். கடவுள் வேஷத்தில் கிரேஸி செய்கிற மேஜிக்ஷோ நிறைந்த நகைச்சுவைப் பாடமான இது கிரேஸியின் 25வது நாடகம்.

''அதிசயத்தையும் வித்தைகளையும் மனிதன் செய்தால் மேஜிக். இதையே கடவுள் செய்தால் அது கடவுளின் இயல்பான லாஜிக். இதுதான் இந்த நாடகத்தின் வெற்றியா?'' எனக் கேட்டால்... ''துயரங்களை மறக்கடிக்கும் ஹ்யூமர்தான் உன்னதமான மேஜிக்'' என்று சொல்கிறார் கிரேஸி.

இந்நாடகத்தின் கதை யுக்தி நமது மூதாதையரிடமிருந்து வந்தது. 1940களின் வாக்கில் புதுமைப்பித்தனின் 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' - என்பதில் துவங்கி கவிஞர் வாலி, பத்திரிகையாளர் சோ என பலரும் கையாண்ட, கடவுளும் மனிதனும் பேசிக் கொள்ளும் சம்பவம்தான் இந்த 'சாக்லெட் கிருஷ்ணா'. கடவுள் தன் பிரச்னையிலிருந்து ஓய்வு எடுக்க மனிதனைத் தேடி வருகையில் சந்திக்கும் சுவாரசியங்கள்தான் இந்நாடகம். நாடகத்தைப் பற்றி சிலரிடம் கருத்து கேட்டபோது...

நாட்டியக் கலைஞர் பத்மா சுப்ரமணியம்: சிரிப்பு பூசிய தத்துவ மாத்திரைன்னு சொல்லலாம். அதை சுவாரஸ்யமா தந்திருக்கிறார் இந்த நூற்றாண்டின் நிஜ கலைவாணர் கிரேஸி மோகன். தலைமுறை இடைவெளியற்ற நாடகம். எல்லா வயதினருக்கும் பிடித்த கிருஷ்ணனை கிரேஸி கைப்பற்றியதுதான் இந்த நாடகத்தின் வெற்றி. இறைவன் ஏதேதோ ரூபத்தில் வருவான் எனில், நாடகத்திற்குள்ளும் பிரவேசிப்பான், சரிதானே...

எழுத்தாளர் பாக்கியம் ராமசாமி: பந்தியில் சொல்கிற 'சந்தேகத்துக்கு சாம்பார்' மாதிரி மீண்டும் ஒருமுறை அதன் ருசியை அனுபவிக்கத் தூண்டும் நாடகம். பழைய நாடகத்திலிருந்து முற்றிலும் வித்யாசம் பெற நிறைய மெனக்கெடுகிறார் - பார்வையாளர்களை திணறடிக்க.

ரேடியோ ஜாக்கி சுசித்ரா: மாலை மாதிரி மாடர்ன் ஜோக்ஸ்களால் கட்டப்பட்ட நாடகம். இடைவிடா சிரிப்பு. எந்த ஜோக் சூப்பர்னு பிரிச்சு சொல்ல முடியாது. மெஸெஜ் தேடி நான் போகலை. சிரிப்புதான் எனக்கு மெஸேஜ்.



உலகத் தமிழரிடம் போய்ச் சேரவேண்டிய; நாமெல்லாம் பிரமோட் செய்யவேண்டிய நாடகம்.

எழுத்தாளர் இரா.முருகன்: ''நீங்க கடவுளை உங்களைச் சுமக்கும் வாகனமாத்தானே பயன்படுத்தறீங்க. ஒரு கட்டத்தில அது வாசலுக்கு வெளியவே நிக்கிறது'' போன்ற, நுட்பமான விஷயங்களை எளிய வார்த்தைக்கு நடுவே வைத்துள்ள சாதுர்யம் மிக்க நாடகம். தனது வாழ்வுக்கும் மேடைக்கும் இடையே இடைவெளி அற்ற அசலான அக்மார்க் நகைச்சுவை கிரேஸியுடையது. அது வெற்றியைத் தவிர வேறென்ன பெறும்.

'டம்மிகிரியேஷன்ஸ்' ஸ்ரீவத்ஸன்: ரொம்ப நாள் கழிச்சு (சுமார் 3 வருஷம்) தனது ரசிகர்களுக்காக கிரேஸி கொடுத்திருக்கும் கிஃப்ட் இது. இரட்டை அர்த்த வசனமற்ற; விஷுவல் எபெக்ட் உள்ள நாடகம். இதுவரை எந்த மேடை நாடகமும் குழந்தைகளைக் கவர்ந்தது கிடையாது. டீ.வி.யிலிருந்து மீண்டு குழந்தைகள் நாடகம் பார்த்து கும்மாள மிடுவதைக் காணமுடிந்தது.



இனிப்பு ருசிய தத்துவம்!

இந்நாடக வெற்றிக்கான ரகசியம் நாடகம் பார்த்துக்கொண்டிருக்கையில்... குறைகளைத் தேட முடியாதபடி அது என்னை விழுங்கிவிட்டது. மாது - கிருஷ்ணா கூட்டணியின் பலத்தை இதில் உணர முடிந்தது.

இவர்களது கருத்துக்களைக் கேட்டபிறகு இப்படித்தான் தோன்றியது; 'வாக்யம் ரஸாத்மகம் காவ்யம்' அதாவது சொல்லும் வாக்கினில் 'ரஸம்' என்கிற சத்யம் இருந்தால், அது காவ்ய அந்தஸ்தை நோக்கி நகரும் என்பார்கள். இந்த இனிப்பு கடவுளும் காவ்ய அந்தஸ்தை நோக்கி மனிதர்களிடம் நகர்கிறார்.

- அமிர்தா

ஒழியுமா ஒற்றைத்

ஒற்றைத் தலைவலியால் (மைக்ரேன்) அவதிப்படுபவர்களுக்குத்தான் அந்த வலியின் தீவிரம் புரியும். சொல்லவும் முடியாமல், பொறுக்கவும் முடியாமல் இந்தப் பாதிப்பில் சிக்கித் தவிப்போர் பலர்.

ஒற்றைத் தலைவலியின் தீவிரத்தையும், அதற்கான தீர்வையும் குறித்து நம்மோடு பேசினார் ஹோமியோபதி டாக்டர் அபிராமி...

* டாக்டர் அபிராமி



''ஒற்றைத் தலைவலியால் பொதுவாக ஆண்களைவிட பெண்களே அதிகளவு பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு மிக முக்கியக் காரணம், மன அழுத்தம். வீட்டில் இருக்கும் பெண்களைவிட, வேலைக்குச் செல்லும் பெண்களுக்குத்தான் ஒற்றைத் தலைவலி அடிக்கடி வருகிறது. அதிகாலையில் எழுந்து, அவசர அவசரமாக சமையல் செய்து, பாதி நாட்கள் காலை நேர உணவைக்கூட உட்கொள்ளமுடியாமல் அலுவலகம் சென்று, அங்கேயும் இடைவிடாது வேலை பார்த்து, திரும்பவும் மாலை வீடு வந்ததும் அதே வேலைகள்.... மனசுக்கு மாறுதலே இடைப்பதில்லை.

அதைப்போலவே, ஆண்களில் ஐ.டி.யில் பணிபுரிபவர்களுக்கு இந்த ஒற்றைத் தலைவலி வருகிறது. அதிக அளவு மூளையைக் கசக்கி வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம், எந்நேரமும் ஒருவித பரபரப்புடன் செயலாற்றவேண்டிய சூழ்நிலை, சரியான நேரத்தில் உணவு உட்கொள்ள முடியாமல் போதல்... என எல்லாமாகச் சேர்ந்து ஒற்றைத் தலைவலியைக் கொடுக்கிறது. ஒற்றைத் தலைவலி என்பது பரம்பரை வழியாக வரக்கூடியதுதான் என்றாலும், 'எங்கள் பரம்பரையில் இதுவரை யாருக்குமே ஒற்றைத் தலைவலியே இருந்ததில்லை. எனக்கு மட்டும் ஏன் இப்படி?' என்று கேட்பவர்களும் நிறைய உண்டு.

ஹோமியோபதி சிகிச்சையின் மூலம், ஒற்றைத் தலைவலிக்கு நிச்சயம் நிரந்தரத் தீர்வு காணமுடியும். மருத்துவர்கள், ஒற்றைத் தலைவலி பாதிப்புள்ளவர்களோடு குறைந்தபட்சம் அரை மணி முதல் ஒரு மணி நேரம் வரை உரையாடி, அவர்களது குணாதிசயங்கள், விருப்பு, வெறுப்பு ஆகியவற்றைத் தெரிந்துகொண்டு அதற்கேற்றவாறு மருந்துகள் கொடுக்க வேண்டும். கூடவே யோகா பயிற்சியும் அவர்களுக்கு அவசியம். ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்பட்ட ஒருவர், தொடர்ந்து சிரஸாஸனப் பயிற்சி செய்துவந்தால் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும்.

இப்பொழுதெல்லாம் பல கடைகளில் ஹோமியோபதி மருந்துகள்

கிடைக்கின்றன. ஒற்றைத் தலைவலிக்கு இந்த ஹோமியோபதி மருந்து சாப்பிட்டால் சரியாகிவிடும் என நினைத்து வாங்கிச் சாப்பிட்டுவிடக் கூடாது. அல்லது யாரோ ஒருவருக்கு ஒற்றைத் தலைவலிக்கென கொடுக்கப்பட்ட ஹோமியோபதி மருந்துகளின் பெயர்களைத் தெரிந்துகொண்டு, தாங்களும் அதே மருந்துகளை மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் உட்கொள்வதும் தவறாகும்.

நாற்பது வயதுக்கு மேல்தான் பொதுவாகவே, அடிக்கடி ஹோட்டல் உணவுகளைச் சாப்பிடாமல் இருப்பது, அதிகளவு மசாலாக்களை உணவில் சேர்த்துக்கொள்ளாமல் இருப்பது, நீண்ட நேரம் ஏ.சி. அறைகளிலேயே உட்காராமல் இருப்பது, ஒற்றைத் தலைவலி போன்ற தொல்லைகளைத் தவிர்க்க உதவும். தினமும் மூச்சுப்பயிற்சியும் செய்து வந்தால், 'ஒற்றைத் தலைவலி' என்ற பாதிப்பு வராமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்'' என்கிறார் டாக்டர் அபிராமி.

தலைவலி?

- நளினி சம்பத்குமார்

படம் : குமார்

'ஒற்றைத் தலைவலி' ஒருவருக்குத் திடீரென தோன்ற ஆரம்பிக்கும். சரியான உணவுப் பழக்கம், டென்ஷன் ஃப்ரீ மனநிலை, மருந்து மற்றும் யோகா பயிற்சிகளின் மூலம் ஆறு மாதங்களுக் குள்ளாகவே இந்த ஒற்றைத் தலைவலியிலிருந்து நிச்சயம் விடுதலை பெறமுடியும்.



என்னை இயக்கிய ஹீரோக்கள்-7

கல்லூரி முதல் வருடம் படித்துக் கொண்டிருந்தபோது எனது முதல் கதை 'சாவி'யில் பிரசுரமானது. கதையின் பெயர் 'கனவு'. தமிழகமே குலுங்கப் போகிறது. திரும்பிய பக்கமெல்லாம் இதைத்தான் பேசப்போகிறார்கள். ஏகப்பட்ட ஃபோன்களும், கடிதங்களும் வருமே... எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என பதற்றமாக நினைத்திருந்தேன். எதுவுமே நடக்கவில்லை! காத்து கூட எக்ஸ்ட்ரா வாக அடிக்கவில்லை. தெரிந்தவர்கள் பலர் வீட்டுக்கு நானே போய் திருமணப் பத்திரிகை கொடுப்பது போல் இதழைக் கொடுத்துவிட்டு காப்பி குடித்து விட்டு வந்தேன். பக்கத்து வீடுகளுக்கு வீட்டுக்கு ஒன்று இலவசமாய்க் கொடுத்தேன். ஒருவர் புரியாமல், 'அப்ப 'சாவி'லேயே வேலைக்குச் சேர்ந்துட்டீங்களா?' என்றார். சொல்லிப் புரியவைக்க முடியாது என்ற கடுப்பில் 'ஆமா' என்றேன். கல்லூரி நண்பர்களிடம் காட்டியபோது அதே இதழில் வந்திருந்த குஷ்பூ மேட்டரைப் பற்றிக் காரசாரமான விவாதத்தை முன்வைத்தார்கள். நொந்து நூலானதுதான் மிச்சம்! அண்ணன் தான் படித்துவிட்டு, 'ரொம்ப நல்லாருக்கு. ஆனா எடுத்தவுடனே ஏன் சயின்ஸ் பிக்சன் மாதிரி எழுதியிருக்க?' எனக் கேட்டார்.



– ✱ பாஸ்கர் சக்தி



✱ ஜோதிமணி

ஒரு கதை பிரசுரமானாலும் பல கதைகள் திரும்பி வந்துள்ளதால் நான் கதை எழுதுவதில் கில்லாடி அல்ல என உணர்ந்து, விகடனில் வேலைக்குச் சேர்ந்த போது அதுபற்றி மூச்சுவிடவே இல்லை. எனவே எனக்குள் ஓர் எழுத்தாளன் முகமூடி மாட்டி ஒளிந்திருப்பது யாருக்கும் தெரியாது.

விகடன் வாசலின் இருக்கும் ராமச்சந்திரன் டீக்கடையில் வைத்துதான் முதன்முதலில் பாஸ்கர் சக்தியை அறிமுகப்படுத்தினார்கள்... 'எழுத்தாளர், மதுரை - தேனிக்காரர்' என்ற அடைமொழியோடு. அவரை என்னால் எழுத்தாளராகவே ஜீரணிக்க முடியவில்லை. அநியாயத்துக்குச் சாதாரணமாக இருந்தார். டீக்கடை ராமச்சந்திரனிடம் இருந்த மிடுக்குகூட அவரிடம் இல்லை. அதற்கு முன் நான் எழுத்தாளர் சுஜாதாவைத்தான் குமுதம் அலுவலகத்தில் நேரில் பார்த்திருக்கிறேன். நண்பர் ரமேஷ் வைத்யாவிடம் கிசுகிசுப்பாக 'இவரைப் பார்க்க எழுத்தாளர் மாதிரியே தெரியலையே' என்றேன். 'ஏம்பா, எழுத்தாளர்னா என்ன... உழைப்பாளர் சிலை மாதிரி ரெண்டு கையையும் சேர்த்து ஒரு பெரிய பேனாவைப் பிடிச்சு இழுத்துக்கிட்டா வரமுடியும்?' என்றவர் நிறுத்தி, 'பொதுவா எழுத்தாளர்கள் தன்னை அழகுபடுத்தறதில் பெருசா அக்கறை காட்டிக்க மாட்டாங்க! அதை வெச்சே கண்டுபிடிச்சிடலாம்' என்றார். நான் அவரைப் பார்க்க...

''இன்னும் புரியலையா? லேட்டா எந்திருச்சு அவசரமா குளிக்காம கிளம்பி வந்த மாதிரியே இருப்பாங்க! போதுமா?'' என்றார்.

அந்த வார விகடனில் பாஸ்கர் சக்தி எழுதிய 'செண்பக பாண்டியன்' கதை படித்தேன். என்னை மிகவும் பாதித்த கதை அது. ஒருவனின் இயலாமை, தோல்வி, அவமானங்களை வயிறு கிழியும்படி நகைச்சுவையோடு சொல்லப்பட்ட கதை அது. அவரைச் சந்தித்து 'கதை ரொம்ப நல்லா இருக்கு! எப்படி இப்படி எழுதுறீங்க?'' என்றேன். பேச்சு நீண்டது. 'சீரியஸ்...' காமெடி, அப்ஸ்ட்ராக்ட் எப்படிச் சொல்றோம்ங்கறது முக்கியமில்லை. என்ன பாதிப்பை மனத்துக்குத் தருதுங்கறதுதான் கதையோட வெற்றி' என்றார்.

அதன்பின் விகடனிலேயே பாஸ்கர் சக்தி வேலைக்குச் சேர்ந்தபோது எனக்கு நெருங்கிய நண்பராகிவிட்டார். அடிக்கடி டீ குடிக்கப் போவோம். ஒருமுறை, ''ரமேஷ் வைத்யா கவிதை எழுதியிருக்கான். படிச்சீங்களா?'' என போகிற போக்கில் கேட்டார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் எழுத்தே கோணல் கோணலாக நல்லா இருக்காதே... அவரா கவிதை எழுதுறார் என்ற குழப்பம்! நேரே போய் ரமேஷ் வைத்யாவிடம் அவர் எழுதிய கவிதையைக் கேட்டு வாங்



ஒரு காலி பேனாவும்... மை அபிஷேகமும்!

இயக்குநர் சிம்புதேவன்

கிப் படித்தேன். நாலைந்து கவிதைகளைக் கொடுத்தார். எனக்குச் சுமாராகப்பட்டது. 'எப்படியிருக்கு?' என்றார். 'இன்னும் டெவலப் பண்ணா நல்லா வரும். ஓரளவு தாட் இருக்கு. டெப்த் கொஞ்சம் குறையுது. ட்ரை பண்ணுங்க!' என்றேன்.

அருகிலிருந்த சீனியர் சப் எடிட்டர் ரா. கண்ணன் அவற்றை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். படித்தவர், பாகிஸ்தான் இந்தியா மேல் இன்றிரவு குண்டு போடப் போகிறது என்ற செய்தியைப் படித்தால் எப்படி அதிர்ந்து போய் எழுந்து நிற்போமோ... அப்படி எழுந்து நின்றார். நேரே எடிட்டர் ரூமுக்குப் போனார். அடுத்த வார விகடனில் இரண்டு பக்கத்துக்கு ரமேஷ் கவிதை வந்தது. அடுத்தடுத்த வாரங்கள் தொடர்ந்து வர ஆரம்பிக்க 'டெவலப் பண்ணணும். டெப்த் குறையுது' என என்னால் கணிக்கப்பட்ட என் நண்பர் சில வாரங்களில் ஹிட் கவிஞனாகி விட்டார். எனக்குச் சுமாராகப் பட்ட அதே கவிதை பிரசுரித்துப் பார்க்கும் போது பிரமாண்டமான அழகியலோடு இருந்தது. பாஸ்கரிடம் இந்தக் கணிப்பு விஷயத்தைச் சொன்னபோது, 'கவிதை வாசிப்பு உங்களுக்குக் குறைவா இருக்கு. ஒரு விஷயத்தை எழுதுறதுக்கும், விமர்சிக்கிறதுக்கும் முன்னாடி அந்தத் துறை பத்தி நிறைய தெரிஞ்சிருக்கணும். நிறைய வாசிங்க!' என்றார்.

வழக்கம் போல் ரமேஷிடம், 'நல்லாயிருக்கு. எப்படி எழுதுறீங்க?' என்றேன். 'கவிதை ஒரு கணிதம். வார்த்தைகளின் மதிப்பை வெச்சு சமநிலை மாறும். என்ன விடை வரணுமோ அதுக்கேத்தபடி சமநிலையை செட் பண்ணணும்!' என்றார்.

பாஸ்கர் சக்தி மூலம் 'இளம் கவுன்ஸிலர்' என எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்தான் ஜோதிமணி. கதரில் ஒல்லியான உருவமாக இருந்தார். கார்ட்டூனிஸ்ட் என்ற தோரணையோடு ஜோதிமணியிடம் பேசிவிட்டு வந்தபின், பாஸ்கரிடம் 'இவுங்களும் வாசிப்பாங்கல்ல?' என்றேன். பாஸ்கர் சிரித்தபடி 'ஜோதிமணி, இந்திராங்கற பேர்ல ரெண்டு நாவல் எழுதியிருக்காங்க' என்றபோது மறுபடியும் நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். ஒத்து வராத உருவம்.

இந்த நட்பு வளையத்தின் மூலம் ஞாநி-பத்மா வீடு என்ற புது இடம் அறிமுகமானது. பாஸ்கர், ரமேஷ், ஜோதிமணி எல்லோரும் அங்குதான் கிடப்பார்கள். மற்றும் ஏகப்பட்ட இளம் கலைஞர்கள் சங்கமிக்கும் இடம் அது. ஞாநி-பத்மா வீட்டை கலை லைப்ரரி அல்லது கலை கேளிக்கை விடுதி எனலாம். வீட்டின் சொந்தக்காரர்களை அநேக நேரம் பார்க்கமுடியாது.



* ஞாநி, பாஸ்கர் சக்தி, ரமேஷ்வைத்யா... மற்றும் எஸ்.ரா

ஹாஸ்டல் போலவே இருக்கும். ஞாநி அறிமுகமானார். ஞாநியின் கதைகள், வீரியமான கட்டுரைகள் படித்தேன். நண்பர்களுடனான விவாதங்களின்போது அவர் கட்டு ரைக்கான மையப்புள்ளியைப் பிடிப்பதைக் கவனித்திருக் கிறேன். பத்மாவின் கட்டுரை களை வாசித்தேன்.

ஜோதிமணி அங்குதான் அமர்ந்து ஏதோ ஜெராக்ஸ் மிஷின் ரேஞ்சுக்கு எழுதித் தள்ளிக்கொண்டிருப்பார். நான் ஆமையைவிட ஸ்லோவாக எழுது வேன் என்பதால் அந்த வேகத்தைப் பார்த்து அரண்டுபோவேன். நான் பார்க்க 'பயணம்' சிறுகதை எழுதி இலக்கிய விருதும் வாங்கினார்.

நான் வழக்கம் போல் 'நல்லாருக்கு. எப்படி இப்படி வேகமா நல்லா நாவல் எழுதுறீங்க?' என்றேன். 'மனசுல இருக் குறத முழுசா கொட்டத் தெரியணும். அவ்வளவுதான். சிறுகதையை விட நாவல் நல்ல வடிவம். சிறுகதைக்கு எல்லை உண்டு. நாவலுக்கு இல்லை. அந்தச் சுதந் திரத்தைப் பக்குவமா கையாளத் தெரிஞ்சா போதும்' என்றார்.

முருகேஷ் பாபு அவர் அறையில் 'இவர்தான் க.சீ. சிவகுமார்' என அறிமுகப் படுத்தினார். ஒல்லியான உருவம் கையில் ஏதோ புத்தகம் இருந்தது. 'எழுத்தாளரா?' என்றேன். முருகேஷ்பாபு 'எப்படிக் கண்டு பிடிச்ச?' என்றார். ரமேஷ் வைத்யா எழுத் தாளனைக் கண்டுபிடிக்கச் சொன்ன எல் லாம் அவருக்கு ஒத்துப்போனது.

அருமையான எழுத்தாளர் க.சீ.சிவ குமார். சாப்ளின் படம் போல மென் சோகத்தைச் சிரிக்கச் சிரிக்க எழுதுவார். முருகேஷ் பாபுவும் அவ்வப்போது நல்ல



கதைகள் எழுதுவார். பல இரவுகள் எல் லோருமாய் பேசியிருக்கிறோம். க.சீ.சி. 'தினம் நம்ம மனுஷங்களை நிறையக் கவ னிக்கணும். அதுதான் எழுதறவனுக்குச் சொத்து' என்பார். நிறைய புரிய முடிந்தது.

இவர்கள் எல்லோருமே இன்று சிறந்த எழுத்தாளர்கள். இவர்கள்தான் குழந்தை யின் கையைப் பிடித்து எழுதச் செய்வது போல் என்னை இயக்கி யோசிக்க வைத்த வர்கள். இவர்கள் இல்லாமல் போயிருந் தால் என் பேனாவுக்கு மை கிடைக்காமலே போயிருக்கலாம். 'அறை எண் 305ல் கடவுள்' படம் பார்த்த ஒரு பெரியவர், ''படத்துல வசனம் கண்கலங்க வெச் சிருச்சு'' என்றார். அதற்கான நன்றிக்குரிய வன் நானல்ல. இந்த நண்பர்கள்தான்!

(தொடரும்)

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.